வாகட நூல்

சுவடிஎண் - 87

௧௨௦

பக்கங்கள் — ௧௦௮

2

கற்பம்

பக்கம்

✓ 8 சேங்கொட்டை கற்பம் ✓

✓ 49 நாயுருவிக் கற்பம் ✓

✓ 101 - சித்தரக் கற்பம் [சாரணைக் கற்பம்] ✓

✓ 102 - கடுக்காய்க் கற்பம் +

[signature]
21.11.2011

28/12/979

Part II

87. வாகட நூல்

[illegible] [illegible]

[illegible]

பொருளடக்கம்

...2

..3.

...6

1	2	3	4
302.	செவிட்டுக் காதுக்கு மருந்து		293
303.	சேங்கொட்டைப்பால் பட்டதுக்கு		309
304.	சோகை, காமாலை, விஷபாகம், சூலை, கிரந்தி, விச்சல், பாண்டு, குன்மத்துக்குக் குக்கிடாதி		163
305.	சோகை பாண்டுவுக்கு		268
306.	தம்பனம்		3, 218
307.	தலைநச்சு யிடிப்புக்கு		93
308.	தவளமுந் கைகா லரைப்புமா யிருந்தால்		196
309.	தாதுபுஷ்டிக்கு திருமலியரை முறை		322
310.	தாகத்துக்கு		28
311.	தாதுவர்த்திக்கு செல்வன் முறை		31
312.	தாதுபுஷ்டிக்கு சூரணம்		321, 121
313.	தாம்பூர பற்பம் மீராசாயபு சொன்னது		124
314.	தாளிச பத்திரி சூரணம்		165
315.	தாது நட்டத்துக்கு		198
316.	தாளிச பத்திரி லேகியம்		226
317.	தாக சுரத்துக்குக் கஷாயம்		313
318.	திரளாத பெண்ணுக்கு		32. 42
319.	திமிர் வாதத்துக்கு		41
320.	திப்பிலாதிச் சூரணம் இருமலுக்கு		71
321.	திப்பிலாதி லேகியம் - சகல சுரம் சயம், காசம், சுவாசத்துக்கு		161
322.	திமிர், முடக்குத் தீரத் தைலம் 2		218
323.	திரிபலாதி லேகியம்		289
324.	திமிர், சிரப்பு, சிரங்கு, குஷ்டம் பெருவியாதி யிவைக்கு மருந்து		39
325.	திரியாக்கு லேகியம் - குதக வாய்வுக்கு		309
326.	தீராத மேகத்துக்கு		5
327.	தீராத சன்னி தோஷத்திற்குச் சூடுவை		16, 208
328.	துஷ்ட மேகங்களுக்கு எண்ணெய்		104, 243
329.	தூதுவளை கற்பம்		49
330.	தேற்றான் கொட்டை நெய்		28
331.	தேற்றாங் கற்பம்		250

...12

...13

...14

...18

...19

1	2	3	4
595.	வெள்ளை யனாசாரி என்னெய் மேகத்துக்கு		144
596.	வெறி கொண்ட பயித்தியத்துக்கு		257
597.	வெங்கச் கல்லில் ரசம் யிறக்குதல்		329
598.	வேடிக்கை விநோதம்		268

1

ஏசுமரியே

குருவே துணை

வாகடநூல்

பலவகை முறை அட்டவணைப் பாடல்

--*

வந்தவினை யகற்று மாபாவங்கள் தீர்ந்துவிடும்
பைந்தமிழும் நித்தம் பாடவரும் - சந்ததமும்
கன்னிமரி புத்திரனை கண்குளிரப் போற்றுவர்க்குச்
சொன்னதெல்லாம் போமே துலைந்து

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் வாய்மலர்
நோக்குண்டாம் மேனி நொடுங்காது - பூக்கொண்டு
துப்பா திருமேனி தம்பிக்கையியான் பாதந்
தப்பாமல்ச் சாறுவார் தமக்கு

பாதங் கழுவிப் பல்விளக்கி நாவழித்து
ஆதவனைச் சட்டையதாய் அணிந்தமரி தன்பத்ததை
தீதகல வேண்டித் தினந்தோறும் - போதமுற
வேண்டினால் பலநோய்கள் வினையகலும் தீதகலும்
ஆண்டுநூ றாகு மாயிசு

நஞ்சு தின்றதுத்துக்கு மாற்று

எந்த நஞ்சுக்கும் பதினெட்டு வகைக்கும்

எட்டிக்கு நாவல் எழுதோணி தாணிக்காய்
மட்டவிழும் தாமரையாம் ஊமத்துக்கு - ஒட்டியதோர்
நெல்வேலும் சக்கரையும் நேரொக்கத் தின்பவர்க்கு
எல்லாருஞ் சொன்ன விலாமிச்சம் - செல்வி கேள்
ஆவாரையாங் கள்ளிக் கரளிக்கெழு கடுக்காய்
தாவிய பாசாணத் திரிபிலகு - கூவியதோர்
நாவிக்குச் சிறுகீரை நன்குன்றி வெண்காரம்
மேவியநெய் தேனுக்கு வெந்தகரி - ஓவியமே
வெற்றிலையு மெண்ணை விலாவிக் குடிப்போர்க்கு
முத்தின தேங்காய் மொழிந்தோமே - எத்தனஞ்சேர்

நீற்றுக்கு மஞ்சள் நேர்வாழ் நல்வசம்பு
வெற்றச் சிவதைக்கு வெள்வேலா - இத்தனையும்
நீலிக்குத் தீருமென நிச்சயமாய் நன்முனிவன்
பாலித்தார் நஞ்சுவகை யெல்லாம் பறந்துபோம்.

சாராயணக்குடி நீங்க

சாராயத்திலொரு சேரை நெய் ஊற்றிக் கொடுக்கவும். எடுக்கரு பின் தேடாது. நிசம் தேடாது.

எலிக்கடிக்கு

திக்கு வெள்ளைக் காக்கணம்வேர், சங்கம்வேர், பிராய்வேர், யிவை மூன்றுஞ் சமன்கூட்டி அரைத்துப் பசுவின் பாலில் கொடுக்கவும். இதற்கு எலிக்கடி, மந்தாரகாசம், சுவாசகாசம் யிவை மூன்றுந் தீரும்.

பிறகு வெண்ணை போட்டுக் கொடுக்கவும் தீரும். பத்தியம்- சடும்பத்தியம்.

சடும்பத்தியமா யின்னமொரு வகை:- குள்ப்பாலைவேர் பாலில் கொள்ள எலிக்கடி தீரும். பத்தியம்-வெந்நீருஞ் சோறும் குடித்த ஆறுநாள் பத்தியங் சார்க்கவும் தீரும்.

பதினெட்டு வகை எலிக்கடிக்கும் புளியமரத்தின் பல்லி கொண்டு வந்து நல்ல என்ணெயில் வசம்புப் பூடு எரித்துக் கொடுக்கவும். முருங்கைக்காய், முருங்கையிலை, ஆவரையிலை, எள்ளுப் புண்ணாக்கு, சரணைக்கிழங்கு, வாழைக்காய், சீனிக்கற்கண்டு இவைகளெல்லாம் சைய வகைக்கு ஆமே.

உடும்பு, சுதுவாலி, காராடு, ஆமை, வெள்ளெலி, ஊர்க்குருவி, வாளைக்கச்சல், முசுட்டை, நெத்திலி, கருவாடு, செமுத்திக் கருவாடு, ஆரால் (ஏரால்) பசுவின்பால், எருமைத் தயிரிதுவாகும். யின்னும் நல்லெண்ணை உழக்கு, எலுமிச்சம் பழச்சாறு உழக்கு கலந்து குடிக்கவும்.

சீரிப்பூச்சி விழ வேறு

கருவேலம்பட்டைச்சாறு, உழக்கு, நல்லெண்ணை-உழக்கு, உப்பும் - நவச்சாரம் பணவிடை இவை யுழக்காகக் காச்சிக் கொடுக்கவும். குஞ்சு குஞ்சாய் விழும்.

...3

இன்னம்:- குப்பைமேனியிலையும், சுக்கு, மிளகு மரைத்து பாகமாறி அடை தட்டினதைச் சுட்டுக் கொடுக்கவும். மீதியை முழங்காலில்த் தடவி யிருக்கவும். புழு விழும்.

வேறு:- நல்ல முசுட்டை கொண்டு வந்து துண்டு துண்டாய் நறுக்கிப் பதக்குத் தண்ணீர்விட்டு உரியாகக் காய்ச்சிக் காலமே கொடுக்கவும். புழு விழும்.

வயிற்றுக் கடுப்புக்கு

சூரையிலை அரைத்து அறுபது நாழிகை தயிரில்க் கொடுக்கவும்.

வேறு:- வயிற்றுக் கடுப்புக்கு:- பற்படாகந் சிறுவை வேருமரைத்து நாற்பது நாழிகை தயிரில் கொடுக்கவும்.

நீர்க்கட்டுக்கு

முருங்கையிலையும் வெள்ளைப் பூண்டு மரைத்து வென்னீரில்க் கொடுக்கவும்.

மலசலமடைத்தால்

சாரணை வேரைப் பிடிங்கி விரல் போலே சீவி மெழுகு தடவி பவன வாயில் ஒரு அங்குலம் வைக்க மலசலம் விடும் கைகண்டது.

வெட்டைக்கு

ஓரிலைத் தாமரை எலுமிச்சங்காயளவு அரைத்து பசுவின் பாலில்க் கொடுக்கவும்.

மறுபடி தீச்சுத் தண்ணீரில் அவித்து கருப்பு கட்டியில்க் கூட்டி வடிகட்டிக் கொடுக்கவும்.

செங்கழுநீர்க்கிழங்கு, குன்றிவேர், அவுரிவேர், கோரோசினை நல்லகற்பூரம் ஓரொன்றுக்கு நாற்கழஞ்சு கூட்டிப் பால்விட்டரைத்து மூன்று நாள் சிமி கொதியிட்டு நாலா நாள் வடித்து காலநேரம் நெய் கொள்ள கைகால் உடம்பெரிவு, வாய் நாக்கு, நெஞ்சு வலிக்கிறது. அஸ்திசுரம், பீளை, இருமல், மருத்தீடு உடனே தின்ற நஞ்சுகளுக்கெல்லாமாகும். உடம்பு யிளைத்தால் பருக்கும் இது நேர்த்தியான வஸ்து.

வீரிய விர்த்தி யுண்டாக

பசுவின்பால்-படி- 1, தண்ணீர்படி-இ விடத்தலைவேர் வடக்கே போறவேர் இளைச்சது குத்து ஒன்று இவையெல்லா மடுப்பில் வைத்து அரைப்படியாகக் காய்ச்சி அந்தப் பாலில் கிடக்கிறவேரைப் பிசைந்து

ரினி பிழிந்து வடிகட்டி ராத்திரிக்கு சாப்பிடவும். இப்படி யிருபது (20) நாட்கள் சாப்பிடவும்.

தம்பனம் உண்டாக

சடலை -படி- 1 காயைப் போட்டு உடைத்துக் குத்திப்போட்டு உமிபோக்கி திருகையில்த் திரித்து மாவாக்கி அந்த மாவில் அஞ்சு பங்கு ஈரவெங்காயம் இடித்துச் சாறு பிழிந்து அந்தச்சாறு விட்டு அந்த மாவைப் பிசைந்து பசுவின் நெய்விட்டு அடைசுட்டிடு சிறுதெல்லளவாய் நடுவே துவாரம் வைத்து அடை சுட்டுத் தின்னவும். ஒரு அடைக்கு ஒரு சாமம் ரெண்டடைக்கு ரெண்டு சாமம் தம்பிக்கும் சம்போகமில்லாதிருந்தால் ஆண்குறி தெரிக்கும் கழுத்தளவு தண்ணீரி லிருக்கவும் ஒரு சாம மிருக்கவும்.

மேகமிருபத்தொன்றுக்கும்

ஜுட்டுக்குத்தையிலம்

பகிர்ந்தநல் லெண்ணை பாலும்

பகிர்ந்திடும் நெல்லிச் சாறும்

திருந்திய மெச்மொ சுக்கை

சீந்திலும் பொன்னாங் காணி

வருந்திய முத்தஞ் சந்தம்

மதுரமோ டேல மாஞ்சில்

பொருந்த செண்பகப்ப வங்கம்

புண்டெரி தலைக்கு வாரே

யிந்த யெண்ணை முழுகும்போது முழுகின அன்றைக்கு புளிப்பு, புகையிலை தவிர்வும். இச்சா பத்தியம் இது முழுகெண்ணையின்வமொரு வகை உள்ளுக்குக் கூட்டிக் கொடுத்தால் மேகநீ தீரும்.

சர்வ பீனிசத்துக்கு

ஊமத்ததிலை, கஞ்சாயிலை, பொடுதளையிலை, வெற்றிலை ஆக வகை நாலுக்கும் சாறுபடி- 1 நல்லெண்ணைபடி- 1, மரதிமஞ்சள், மிளகு, கருஞ்சீரகம் வகைக்குப் பலம்-கு எண்ணெயில் சாறுவிட்டு மருந்தை அரைத்துக் கலந்து உமிக்காந்தலில் ஏழுநாள் வைத்தவித்துதையிலப்பாகமாய் வைத்திறக்கிக் கொண்டு அந்தத்தையிலத்தில் அபின் மருந்து ஒரு விராகன் துண்டு துண்டாய் நறுக்கிப் போட்டு வெள்ளைப் பாசாணம் விராகனிடை- 1

பேய்ச் கொமட்டிச் காயில் வேசு வைத்த மருட்டி அரைத்து அதற்குள் வைத்து புடம் போட்டுத் துண்டு துண்டாய் வெட்டினெய்யிலத்தில் போட்டு வைத்துக் கொண்டு நாலு நாளைக்கு ஒரு முழுக்கு வீதம் முழுகவும். அன்றைய தினம் புளி, புகையிலை தள்ளிப் போடவும்.

நீரேத்தத்துக்கு மருந்து

துளசிச்சாறு, சித்தா மணக்கெண்ணை சரி கூட்டி உச்சியில்த் தேய்க்கவும் நீரேத்தம் விடும்.

கண்வியாதிக்கு மருந்து பண்ணும்படி

துத்தம், துரிசு, படிகாரம் இவை சமன் கூட்டி உடைத்துக் கரண்டியில்ப் போட்டு எலுமிச்சம் பழச்சாறு வார்த்துக் காச்சவும். இப்படி அஞ்சு தரம் காச்ச 25 தரங் காச்சி ஊத்திப் போட்டுப் பின்பு எடுத்து செம்பு மேலிட்டுச் செம்பிட்டிழைத்து மருந்து ஒரு பங்கும் பசுவின் வெண்ணை மூன்று பங்குங் கூட்டி இழைத்து சிமிலில் வைத்து நரிப்பயறு பிரமாணம் நயனத்திலிட பூப்பரியும்.

கடப்பங்கொட்டை னாழி பொன்னாங்காணிச் சாற்றிலூறப் போட்டு எடுத்து முலைப்பாலில்ரைத்துக் கண்ணிடக் கண் வியாதி தீரும்.

தீராத மேசத்துக்கு

முதல்நாள் எருமைத் தயிரும் ஒரு படி பாசிப்பயறு மூறப்போட்டு மறுனாளரைத்து நெல்லி முள்ளியுந் தண்ணீரி லூறப்போட்டு சின்ன எலுமிச்சங்காயளவு அரைத்து அரைவீராகனிடை காயம் கூடப் போட்டு ஒரு கதலிப் பழம் கூடப் போட்டுப் பிசைந்து புளிப்பித் தவிர்க்கவும். பசுவின்தயிர் கூட்டிக் கொள்ளவும். இருபத்தொரு மேகமுந் தீரும். கைகண்டது.

வண்டுகடி, குஉஷ்டம், ரோகம், கருவண்டு, கடி, செவ்வட்டை

கடிக்கு மருந்து

சிவனார்வேம்பு-பலம்-2, சங்கம்-பட்டை-பலம்-1, வெள்ளருகு-பலம்-2, பிராம்பட்டை-பலம்-2, கடம்பட்டை-பலம்-2, வாலுளுவை -பலம்-1, சிறு குறிஞ்சா-பலம்-3/4, களிச்சிவேர்-பலம்-1, வீளி -பலம்-1, அழிஞ்சிப்பட்டை-பலம்-1, ஆறு வருஷத்து வேப்பம்பட்டை பலம்-2, வன்னிப்பட்டை-பலம்-1, பூவரசம்பட்டை-பலம்-2, சங்கங்குப்பி-பலம்-1, நுணாப்பட்டை-பலம்-1, அவுரிவேர்-பலம்-1, புங்கம்வேர்-

பலம்-2, மீாகரனை -பலம்-ு, கொடுவேலிவேர்-பலம்-ு, பிரப்பங்கிழங்கு பலம்-2 யிவையெல்லாம் இடித்துக் கருங்குருவை மாவில் சாப்பிடுகிறது.

இரண்டு தேங்காய்ப்பால் பத்து கழச்சிப் பருப்புப்பால் வார்த்தரைத்துக் காச்சிக் கொடுக்கவும். சடுகு திண்டப் பிள்ளையுண்டாம்.

குஉஷ்டரோகத்துக்கு

சேருழம்பட்டை, துளசிப்பட்டை, தருசிப்பட்டை, அரசம்பட்டை, வாகைப்பட்டை, காட்டுமுருங்கைவேர், காட்டுமல்லிகைவேர், ஆலம்பட்டை, ஆயிலம்பட்டை, கூளர்த்திப்பட்டை, செங்கத்தாரிப்பட்டை, கள்ச்சிப்பட்டை, நவ்வல்ப்பட்டை, இலுப்பைப்பட்டை, கூளாத்திப்பட்டை, சிறுகுறிஞ்சாவேர், பெருமருந்துவேர், கடைச்சரக்கு -சேங்கொட்டை, கார்போகவரிசி, கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், நீர்வெட்டி முத்து, எட்டிக்கொட்டை, கண்டுதிப்பிலி, கடுகுனாயகம், கடுகு, ஓமம், சதகுப்பை, வசம்பு, உள்ளி, பேய்ப்புடல், நிலவேம்பு, கொத்தமல்லி, வாய்விளங்கம், தேத்தாம்விரை, பூவரசம்பட்டை வித்து, நிலவாகை, தூக்குக் கருங்குருவை மாவில் உழக்கில் ஒரு தட்டிடைனதயிலம்விட்டுப் பிசறி கடிகையில்க் கொண்டு வந்து பானையிலடைத்துப் பிட்ட வித்துச் கொள்ளவும். ஒருபோதுனதயிலம் அந்திசந்தி கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி - குஉஷ்டரோகம், செங்குட்டம், கருங்குட்டம், பெரியரோகம், எல்லாந் தீரும். பத்தியம் பிடித்தால் -20 நாள். இச்சா பத்தியமானால் - நாற்பதுனாள் இந்தப் படிக்கு சாப்பிடவும். சகல விஉஷரோகமுந் தீரும்.

இரசமேறினால் மருந்து

தாமரை சமூலம் அந்திர தாமரை சமூலமுஞ்சாறு, கெந்தகம், விராகணிடை-இ உள்ளுக்குக் கொடுக்கவும். மேல்த்துவாலை போடவும். பத்தாளாள்ப் போடவும். எருமைச் சாணியுந் தயிருந்தலை உடம்புக்குமிட்டு முழுகவும். மறுபடி விளக்கெண்ணையில் முழுகவும்.

கெந்தகஞ் சுத்தி ஒரு சட்டியில்த் தண்ணீர் விட்டு வேடுகட்டி அதில் வைத்து எரிக்கக் கீழே தயிலமிறங்கிப் போ௶ம். அதைக் கூட்டி சுத்பங் கொள்ளவும்.

ஆறாத புண்ணுக்குக் களிம்பு

துத்தம்-விராகனிடை-இ, தருசு-விராகனிடை-இ, மருத்து வெள்ளை விராகனிடை. 1 ரசம்-விராகனிடை-இ, மிருதார் சிங்கி-விராகனிடை-1, கொட்டைப்பாக்கு சுட்டது-விராகனிடை-3, ரசத்தை வெற்றிலைச் சாற்றில் முறித்து மற்றதையுங் கூடப்போட்டு அரைத்துப் புங்கம்பால் விட்டரைத்து பசுவின் வெண்ணை கூடப் போட்டரைத்து நன்றாகச் சேர்வை யானவுடனே பரணியில் வைத்துக் கொண்டு கிரந்திப் புண், ஆறாத புண்ணுக்கு சீலையில் தடவிப் போடவும்.

வேறு:=- தருசு அம்மியில் வைத்து நல்லெண்ணை காய்ச்சிக் குத்த வெணுக்கும் கூறிய சுண்ணாம்பு கூட்டி யரைத்து உதிய மஞுப்பு வாட்டி அதில்த் தடவிப் போட்டுக் கட்டவும். எந்தப் புண்ணும் ஆறும். புளியிலைத் தண்ணீர் விட்டுக் கழுவிப் போடவும்.

பிள்ளைப் பிணி நாற்றெட்டுக்கும் மருந்து

எலுமிச்சம்பழம்-15, மிளகு-படி-தெ, உத்தாமணிவேர்-பலம்-இ சானாக்கிவேர்-பலம்-வ, ஆடாதோடை-பலம்-வ, வெதுப்படக்கிவேர், கோழியவரைவேர், சின்னிவேர், பேய்மிரட்டிவேர், செம்முள்ளிவேர், துளசிவேர், வட்டக்கிலுகிலுப்பைவேர், மாவிலிங்கைவேர், முருங்கைப்பட்டை, குப்பைமேனிவேர், மணத்தக்காளிவேர், சாரணைவேர், வில்வவேர், கத்தாழஞ்சருகு, வெருகங்கிழங்கு-பலம்-இ, கருநொச்சி, விடத்தலைவேர், கற்பூரவள்ளிவேர், வெள்ளருகு, சங்கங்குப்பிவேர், வறப்பூலாவேர், அவுரிவேர், நல்லதும்பைவேர், முலைப்பால்-நாளிபிடிவேலம்பட்டை, சுடுதரட்டிவேர், செங்கத்ததாரிப்பட்டை, வெம்பாடம்பட்டை, முடக்கொத்தான்வேர், சங்கிலை, பழம்பாசி, நன்னாரி, வல்லாரை, முளக்குறண்டி, கழுக்கொடி, சேந்தொட்டி, காட்டு மல்லிகைவேர், கஞ்சாங்கோரை, செப்புநெருஞ்சி நாய்க்கொட்டான், கண்டங்கத்திரி, சீரா செங்கழுநீர், பொன்முசுட்டை, குங்குமப்பூ, விராகனிடை-1, கம்பிப்பிசின் விராகனிடை-1, நாய்க்கடுகு, கார்போக அரிசி, நல்ல கடுகு, சுக்கு, மிளகு, ரோகணி, பாக்கு, திப்பிலி, குரோசானி, ஓமம், கருஞ்சீரகம், காட்டுச் சீரகம், நல்லசீரகம், வெந்தயம், சதகுப்பை, ஓமம், கடுக்காய்-20, வசம்பு, அதிவிடையம், உள்ளி, மாசிக்காய், கிராம்பு, லவங்கப்பத்திரி, கோஷ்டம், மரமஞ்சள், வெப்பாலைஅரிசி, கசகசா, பெருங்காயம் அதிமதுரம் வகைக்கு பலம்-வ,

இவ்வளவும் முலைப்பாலும் யெண்ணையும் பொடியும் யெரித்து வைத்துச் கொள்ளவும். தூதுவளை, செப்புநெருஞ்சி, சிறுசெருப்படி, தகரை, குழமிட்டான், பூவரசயிலைச்சாறு, சங்கங்குப்பி, மிளகுதக்காளி, முடக்கொத்தான், கிரந்திநாயகம், தவசிமுருங்கை, ஓரிதழ்த் தாமரை, விஷ்ணுகிரந்தி, பற்பாகடம், வெள்ளையவரை, கோவையிலை, பிரமியிலை, என்னை-படி-1 சாறுவகைக்கு படி-வ இத்தோடே கலந்து எண்ணெய் எரித்துக் கொள்ளவும்.

சூலைப்புண், கிரந்தி, மேகம், இதுக்கு மருந்து

பரங்கிப்பட்டை-சேர்-1, வஸ்திரகாயம் பண்ணி கெந்தகம் விராகனிடை-1, துத்தம் விராகனிடை-1, தாிசம்-விராகனிடை-1, அரிதாரம் -விராகனிடை-1, சாம்பிராணி-விராகனிடை-1, மெழுகு-விராகனிடை-1 அந்த மெழுகை அடையாய்த் தட்டி இந்த அடைமேல் அஞ்சு மருந்தும் தூள்ப் பண்ணி பரப்பித் துணி விரித்து அதின்மேல் அடையை வைத்துத் திரியாகத் திரித்து திரி-பலம்-4, கால்ச்சேர் நல்லெண்ணெய் வாங்கி அதில்த் திரியைத் திரித்து வைத்து விளக்கில் கொளுத்திப் பிடிக்கத் தயிலம் விழும். மாவில் ஒரு காசிடை தயிலங் கொள்ளவும். பத்தியம் காக்கவும்.

முக்குரட்டைக் கற்பம்

நரை திரை மாறும்

முக்குரட்டை சமூலம், கையான்தகரை சமூலம், பொடுதலை சமூலம் இம் மூன்றும் சமன் தூள்ப் பண்ணி தேனிலாவது வெல்லத்திலாவது நாற்பது நாள் சாப்பிடவும். அந்தி சந்தி சாப்பிடவும். இதுக்குப் பின்னை ஒன்றுமாகாது. பால் நெய், சர்க்கரை நாற்பதுநாளி கூட்டிக் கொள்ளவும். ஸ்திரி சம்போகமாகாது. இதுக்குச் சோதனைகொஞ்சம் நிலத்தைக் கொத்தி யிந்தப் பொடியைப் போட்டுப்பரவி பசுவின்மோர் வார்க்கப் பூவு கறுப்பாகும்.

பஞ்சாட்சரத்தயிலம்

எருக்கிலம்வேர்-பலம்-100, தழை -பலம்-10, காய் பலம்-10, பூவலம்-10, பால் படி-வ, ஆயில்ப்பட்டை, மாவிலங்கம்பட்டை,

...9

தழுதாழைவேர், கொடுவேலிவேர், புங்கம்பட்டை, நொச்சிவேர்ப்பட்டை, முருங்கைப்பட்டை இவைகள் வகைக்கு பலம்-10, இத்தோடே முன் சொன்ன எருக்கிலை வகையுங் கூடப் போட்டு எட்டு வள்ளத் தண்ணீர் விட்டு இரண்டு படியாகக் காய்ச்சி இறுத்துக்கொண்டு அந்தக் கஷாயத்திலே எருக்கம்பால் கூடவிட்டு தழுதாழைச் சாறு, நொச்சிச்சாறு, உத்தாமணிச்சாறு, பசுமஞ்சள்ச்சாறு, குதிரை வாலிச்சாறு, பொடுதலைச்சாறு, சதிரக்கள்ளித் தண்ணீர் இது வகைக்குப்படி-வ, வெள்ளாட்டுப் பால்ப்படி -2இ, வேப்பெண்ணை படி-இ, புங்கெண்ணெய், அரத்தை மிந்தப்பு, ஏலம் மிலவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, கோஉஷ்டம், கடுகு, கோரோசினை, சுக்கு திப்பிலி, மிளகு கண்டுபரங்கி, கற்கடகசிங்கி, தாளிசபத்திரி இவை வகைக்கு விராகனிடை-1 முன்சொன்ன கஷாயத்தில் சாறுவகையேழும் சகலமுங் கூடவிட்டு அதிலே வெள்ளை வெங்காயம்-பலம்-4 அரைத்துக் கூட்டவிட்டுக் காய்ச்சி கடைமருந்து சூரணம் பண்ணிக் கூடப் போட்டுத்தயிலத்திலிறக்கிப் பின்பு கருங்குங்கிலியம் இரண்டுபலங் கூடப் பொடி பண்ணித்தயிலத்தில்க் கூட விடவும். இப்படி அதில்ச் சேர்ந்த மருந்தெல்லலாம் கிளறிக் கிண்டி அடுப்பில் வைத்து மெழுகு பதத்திலிறக்கிக் கொள்ளவும். இதுக்கு வாதமெண்பதும் சூலை பதினெட்டும் தீரும். ஒரு சாசிடை கொள்ளவும். சந்தத்தை மேல்ப்பூச்சு பூசவும். கைகண்டது.

ஏலாதிச் சூரணம்

ஏலம்-விராகனிடை-4, சடாமாஞ்சி-விராகனிடை-4, லவங்கம்-விராகனிடை-4, குக்கில்-விராகனிடை-4, திப்பிலி, விராகனிடை-4, கொத்தமல்லி-விராகனிடை-4, கோரைக்கிழங்கு விராகனிடை-4, பேரிச்சம் பழம் -விராகனிடை-4, முந்திரிகைப்பழம்-விராகனிடை-4, அதிமதுரம்-விராகனிடை-4, சீரகம் -விராகனிடை-4, கருஞ்சீரகம்-விராகனிடை-4, சிறுநாகப்பூ-விராகனிடை-4, சாதிக்காய்-விராகனிடை-4, தானிக்காய்-விராகனிடை-4, நெல்லிப்பருப்பு-விராகனிடை-4, நெருஞ்சிவேர்-விராகனிடை-4, விலாமிச்சம்வேர்-விராகனிடை-4, நிலப்பனைக்கிழங்கு-விராகனிடை-4, கடுக்காய்-விராகனிடை-4, சீந்தில் சர்க்கரை -விராகனிடை-4, இவைகளைக் கூட்டி யிடித்துச் சூரணம் பண்ணி சீலை வடிகொண்டு இதுக்கு நேர்சமன் சர்க்கரை கூட்டி நெய்யிலே மூனறு விரல்க் கொண்டது ஒரு

மண்டலங்கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதி பித்தபாண்டு, அஸ்திசுரம், கட்டியும், ஆம்பல், பித்த மூல வாய்வுங் குணமஞ் சுவாசாசம் பிரமியம் -உஷ்ண மாதம் அரோசிகம், காமாலை, மூத்திரக்கிரிச்சம், உஷ்ணம் ஆகிய இவையெல்லாம் தீரும். பத்தியம்-பயத்தம் பருப்பு, பசுவின்பால், சிறுகீரை, பொன்னாங்காணி, உப்பு கூட்டவும். மிளகாய் தவிரவும். எல்லா வியாதியும் தீரும்.

காமாலை, பாண்டுவுக்கு

அர்ப்பொடி -பலம்-1, கிட்டம்-பலம்-1, இடித்து வஸ்திரகாயம் பண்ணி இதிலே ஓமம்-பலம்-உ, சீரு-பலம்-1, மிளகு-பலம்-2, வெள்ளைப்பூண்டு -பலம்-இ. இது பொடி பண்ணி பெருமிச்சம் பழம் -50 அதைச் சீத்தாகக் கீறி சூரணத்தை உப்பிட்டு வைக்கிறது போலே துணித்து வைத்து சட்டியில் வைத்து இதில் மொசுமொசுக்கைச் சாறு படி-இ விட்டு முக்கால்படி நல்லெண்ணைவிட்டு பனங்கருப்புச்சட்டி ஒன்று போட்டு ஒரு கலசத்தில் வைத்து சீலையிட்டு மூடிச் சீலை வேடு கட்டி மேல்ச்சட்டி யிட்டு மூடி குப்பையில் மூன்று நாள்ப் புதைத்து வைத்து நாலா நாளெடுத்து முதல்நாள் நாலுபழந் தின்னவும். நாலுவிசை பேதியாம். இந்தப்படி ஒன்பது நாள்ச் கொள்ளவும். பத்தியம்-உப்பு, புளி ~~விடவும்.~~ தவிர்க்கவும் துவரம்பருப்பு, பசுவின்நெய் மிளகு பொடி பண்ணி, வெந்நீர் காயடவும்.

மேகத்துக்கு நெய் பண்ண

பசுவின்நெய் -சேர்-2, பால்படி-2, நாலிலொன்றாய்ச் சாறச்சி சம்பங்கிச் கிழங்கு , தாழை விழுது, ஆவரைவேர், பொன்னாங்காணி சமூலமும் சிறுக்கீரை சமூலமும், தண்ணிவிட்டான் கிழங்கு, பனைவேர், பூமி சக்கரைச் கிழங்கு, இவைகளில் வகைக்கு சாறுபடி-வ நெய்யில்ச் கலந்து இதுக்குச் கற்கம் ஏலம்-விராகனிடை-4, வெங்கலம்-விராகனிடை-4, லவங்கம் -விராகனிடை-1, சாதிபத்திரி -விராகனிடை-1, சாதிக்காய்-விராகனிடை-1 இதுவெல்லாஞ் சூரணம் பண்ணி வைத்துச் கொண்டு நெய் திரண்ட பதத்தில் சூரணம் போட்டு வைத்து வடித்துச் கொண்டு சர்க்கரை படி-1 கூடப் போட்டு காலமே ஒரு கரண்டி கொள்ளவும். அந்தி சந்தி கொள்ளவும். இதற்குப் பத்தியம்-துவரம்-பருப்பு, மிளகுநீர், முருங்கையிலை அரைக்கீரை,

...11

பசுவின்பால், நெய் கூட்டவும். இதுக்கு மேகம், வறட்சி, இருமல், அத்திசுரம் காசி முதலானது தீரும்.

பூதிகாத்தைலம்

அகில்ப்பட்டை-பலம்-100, வில்லைவேர், தழுதாழைவேர், கொடிவேலிவேர், நொச்சிவேர், புன்னைவேர், கண்டங்கத்திரிவேர், சரந்தைவேர், சிவகரந்தைவேர், பெறாமுட்டிவேர், செம்புளிச்சைவேர், அமுக்கிறாவேர், குமிழம்வேர், அரத்தை பலம்-19 பெருக்கலம்வேர், வெட்டுவகை மருந்து யருஇ வகைக்கு பலம்-1 இதுக்கு மட்டும் எட்டுமரக்கால் தண்ணீர் விட்டுக் கஷாயம் நாலுபடியாகக் காய்ச்சி இருத்துக் கொண்டு இதில் விடுகிறசாறு - நொச்சிச்சாறு, துளசிச்சாறு, கையாந்தகரைச்சாறு, சங்கிலைச்சாறு, தழுதாழைச்சாறு, பொடுதலைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, முசுமுசுக்கைச்சாறு ஆக வகை ஒன்பதுக்கு வகைக்கு சாறு படி-1, பசுவின் பால் படி-4, எண்ணை-படி-4, கஷாயம் படி-4, கடைமருந்து மயிரோசினை, செவ்வியம், அகில்ப்பட்டை, அரத்தை, செம்புளிச்சம், பட்டை, சடாமாஞ்சி, அதிமதுரம், நற்பாலை, பூலாங்கிழங்கு, பச்சை, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சந்தனக் கட்டை, மஞ்சட்டி, நன்னாரிவேர், விலாமிச்சம்வேர், பச்சைக்கற்பூரம், கோரோசினை, இதுவகைக்கு விராகனிடை-2 கூட்டி யிடித்துச் சூரணம் பண்ணிதைலம் காய்ச்சி பதத்தில் வடித்து அதின்பிறகு கஸ்தூரி குங்குமப்பூ, கோரோசனை இதுவெல்லாம் பொடி பண்ணிதைலத்தில் போட்டு தானிய புடத்தில் வைக்கவும். இதுக்குத் தீரும் வியாதி பினிசநேர்ச்சம், தலையிடிப்பு, அண்டவாதம், நேத்திரவாதம் இவையெல்லாந் தீரும். தினந் தலைக்கிட்டு முழுகவும்.

அமுர்தகிரத பற்பம்

பசுவின்பால்-படி-1 சாதிக்காய் சாதி பத்திரி, லவங்கம், கோரோசினை, வகைக்கு-விராகனிடை-1 ஓமம், விராகனிடை-1, திப்பிலி-விராகனிடை-3 சீரகம்-விராகனிடை-1, திப்பிலி மூலம் -விராகனிடை-4, செவியம் -விராகனிடை-4, கண்டுபரங்கி விராகனிடை-1, கோஷ்டம் விராகனிடை-1, கோரைக்கிழங்கு -விராகனிடை-1, மிளகு விராகனிடை-5 மதுரம் -விராகனிடை-1 கொற்றுமல்லி -விராகனிடை-1, வாய்விளங்கம்

...12

விராகனிடை- 1, சுடுகு-விராகனிடை.5, பெருங்காயம்-விராகனிடை-5, தானிக்காய்-விராகனிடை.4, கடுக்காய்-பலம்-உ, தாளிசபத்திரி-விராகனிடை.1, இவ்வளவும் சேகரம் பண்ணி இதிலே விட்டு அருக்கீரைச்சாறு சரிப்பான்சாறு-படி-வ, மணத்தக்காளிச்சாறு படி-வ, சுற்பர வள்ளிச்சாறு படி-வ, கிரந்திநாயகஞ்சாறு-படி-வ, துளசிச்சாறு-படி-வ, முள்ளிச்சாறு-படி-வ, சீந்தில்ச்சாறு-படி-வ, சங்கிலைபடி-வ, வெள்ளருகு, சாறுபடி-வ, இதுவெல்லாம் விட்டு அரைத்து சட்டியிலிட்டுக் காய்ச்சி லேகிய பதமானதின் பிறகு இறக்கவும். இதுக்குத் தீரும். வியாதிகீ- உடம்புக் கடுப்பு, அக்கினிமாந்தம், வாய்வு, உஷ்ணமானதுக்கெல்லாம்.ஆம். சுவாசகாசம், வெள்ளைக்காசம், ரெத்தகாசம், பயித்திய காசம் இசுவெல்லாந் தீரும். ஒரு மண்டலங் கொள்ளவும். இச்சா பத்தியம் திருநக்ஷேமம் குருபாதமே கெதி.

வீரிய விர்த்திக்கு

சிவனார் வேம்பு கொண்டு வந்து சிறுகச் சிறுக நருக்கி இது மிதக்கப் பசுவின்பால் விட்டு பால்த்தீயப் பத்தாமல் சுண்டின பருவம் பார்த்து எடுத்து ஆற விட்டுக்காயப்போட்டு எடுத்து சூரணம் பண்ணி வெருகடி வென்னீரில் சாப்பிடவும். சைப்பு புளிப்புத் தவிர்க்கவும்.

பயித்திய வாய்வுக்கு

சீனி-பலம் 1 இந்துப்பு, திப்பிலி, அதிமதுரம், ஏலம் வகைக்கு விராகனிடை-உ கூட்டி இடித்து சாப்பிடவும். எல்லாப் பித்தமுந் தீரும்.

இன்னும் பச்சரிசி மா, உளுந்துமா, துவரைப் பருப்பு மா, சம்பமா, சேவ்வுறுமா, வரகுமா, சாமை மா, கடலை மா, சாதிக்காய் மா இவையெல்லாஞ் சமன் கூட்டிக் கால்விராகனிடை கூடக் கலந்து இடித்து ரொட்டி சுட்டுத் தின்னவும். வகைக்கு ஒரு சிரங்கை கூட்டிக் கொள்ளவும். தீரும் வியாதி அரோசிகம் வாந்தி பண்ண வருகிறது விலவின்னை இவையெல்லாந் தீரும்.

மேகத்துக்கு

கருவேப்பிலை-விளங்காயளவு, கடுக்காய் -பலம்-உ பொடி பண்ணி ஒரு பானையில்ப் போட்டு ரெண்டுபடி தண்ணீர்விட்டு அடுப்பில்

வைத்துப் பானைவாயில் வேடுகட்டி அந்த வேட்டின் மேலே கருவேலம்பிலையை வைத்துக் காசுக்கட்டி பலம்-வ, அபின்-விராகனிடை- உ கூட விட்டுடனே வைத்து சட்டிகொண்டு ஆவி வரந்தனையு மொரித்து எடுத்து கடுக்காய்ச் சாறு விட்டரைத்துக் கொட்டைப்பாக்களவு உருட்டி தினசரி அந்தி சந்தி வடித்து வடி கட்டின தயிரில் கொடுக்கவும். கைப்பு புளிப்பு தவிர்க்கவும் மேகமெல்லாந் தீரும்.

நீரடைப்புக்கு

நொச்சியிலை, குப்பைமேனியிலை, சாரணைவேர், எருக்கலம்வேர் இடித்து வெண்ணை போட்டு வறுத்து ஒற்றிட நீர்விடும்.

மாவிலங்குவேர், நெருஞ்சிவேர், சிறுபூளைவேர், பெறாமுட்டிவேர், அருகம்வேர், வெள்ளரிவிரை வகைக்கு விராகனிடை கூட்டி இடித்துக் கஷாயம் பண்ணிக் கொடுக்க நீர்விடும். சங்கிலை காடி வார்த்துத் துவைத்துச் சர்க்கரை போட்டுக் குடிக்கவும்.

இந்தச் சாம்பலை வவகுத்துச் சீலையில் பொட்டணமாகக் கட்டி ஊமத்திலையை அடி வயிற்றிலே போட்டு ஒற்றிடவும் சலமராடும்.

காச்சல் வயிற்றுக் கடுப்புக்கு

கோட்டஞ் சுக்கு, மரமஞ்சள், அதிமதுரம், சொம்பரக்கு, இம்பூரல், நாயுருவி நெல்பொரி வகைக்கு விராகனிடை-1 யெட்டொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்க நிற்கும். கைகண்டது.

பயித்திய மேகத்துக்கு என்ணெய்

ஆவரம்பட்டை முத்தின பட்டை கொண்டுவந்து அஞ்சு மரக்கால் தண்ணீர்விட்டு ரெண்டுனா குறக் காய்ச்சி அந்தத் தண்ணீரிலே சித்தா மணக்கு முத்து ஊறப்போட்டு மத்தனாள் வேகவிட்டுச் சாயப்போட்டு இடித்து அந்தத் தண்ணீரில் என்ணை வடித்து அந்த வெதுப்பத்திலே கடுகுரோகணி, ஏலம், கிராம்பு, அதிமதுரம், சாதிக்காய், பத்திரி வகைக்கு விராகனிடை-உ பொடி செய்து போட்டுச் சாப்பிடவும். புளி நீக்கவும்.

வயிற்றுக் கடுப்புக்கு

பனரை வேர் எலுமிச்சங்காயளவு அரைத்து திப்பிலியும் பலம்

இ கூட அரைத்து பசுவின் பாலில் போட்டுக் கொடுக்க நீர் தெரிக்கும்.

பின்னும் சுக்கு -பலம்-இ, கடுக்காய் விராகனிடை-க, தானிக்காய் -விராகனிடை-க, சீரகம்-விராகனிடைவ, கிராம்பு -விராகனிடை அதிவிடையம்-விராகனிடை-க, கருவேப்பிலை -விராகனிடை-இ, சாதிக்காய் விராகனிடை-உ, சாதிபத்திரி -விராகனிடை-வ இந்த மருந்துக்கு இ வட்டதுத்தி வேரும், சிறு தேக்கும் கசாயம் வைத்து - மருந்தெல்லாம் பொன்னிறமாக வருத்து இந்தக் கசாயம் விட்டரைத்து அதை அடைசுட்டு இப்படி யேழுதரம் கஷாயம் விட்டரைத்து அடை சுடவும். பிறகு அரை விராகனிடை உண்டை பண்ணி வடிகட்டின தயிரிலே அப்பானந் தின்னவும். யெந்தக் கடுப்பும் யெந்தக் கழிச்சலும் நிற்கும். இந்தக் கஷாயத் துடனே அபின் விராகனிடை-இ கூடக் கூட்டி அரைத்து உண்டை பண்ணவும். தீரும்.

வண்டு கடிக்கு

பிராய மரத்துப் பட்டை இடித்துக் கருவை நெல்லரிசி மாவில் கொழுக்கட்டை வேக வைத்துத் தின்னத் தீரும்.

மேக ரோகத்துக்குப் பூரணச்

சந்திரோதையம்

ஸ்ரீ/ காரியம்-பலம்-4, பொட்டிலுப்பு -பலம்-4, புதுச்சட்டியிலிட்டு வருக்கிறபோது ஊமத்திலைச் சாறு விட்டு மஞ்சள் பொடி பண்ணி கிட்ட வைத்துக் கொண்டு போட்டுப் போட்டு நாயுருவிக் குச்சி சுட்டி வைத்து வருக்கவும். இப்படி வருதிக்கிறபோது மாதளம்பூப் போலேயாம். பதமாக விட்டு யிறக்கவும். இறக்கி சீந்தில் சர்க்கரை விராகனிடை- 1 இந்த ப்பற்பம்-விராகனிடை- 1 தேனில்க் குழைத்துக் கொடுக்கவும். இதில் குணமாகிற வியாதி - தர்மாங்கிஷம், அடைப்-பிட்டிருக்கிற நன்க்குண நீர்க்கட்டு அடிப்பட்டு யிறங்கும். பத்தியம்- பசுவின்பால், நெய், கத்திரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, அரைக்கீரை துவரம்பருப்பு இந்த வகை உப்பு புளிப்பில்லாமல் வன்னெயில்க் கூட்டிக் கொள்ளவும். இந்த ரோகங்கள் மாறும்.

பவுந்திரத்துக்கு

திரிபலை, திரிகடுகு, சோரைக்கிழங்கு, வாய்விளங்கம், செவ்வியம், ஏலம், திப்பிலி மூலம், தேவதாரம், பேய்த்தும்மட்டிவேர், மஞ்சள், மரமஞ்சள், பொட்டிலுப்பு, இந்துப்பு, எவச்சாரம், ஆனைத்திப்பிலி, யிதுவெல்லாஞ் சமன் இதுக்கு சரிநுசர் முக்கில் நிறுத்துக் கொண்டு தேன்விட்டு நன்றாக அரைத்துப் பாவட்டைக்காய் பிரமாணம் உண்டை பண்ணி நெய்யுடனே கொள்ளவும். இதில்த் தீரும் வியாதி -உஷ்ணம், உப்பிசம், பாண்டு, உள்மூலம், கண்டமாலை, குளிர்காச்சல், குட்டம், புண், சகல உஷ்ணம் இவையெல்லாம் அரை மண்டலங் கொள்ளத் தீரும். உப்பு வருத்துக் கொள்ளவும்.

பால், நெய், முருங்கைப்பிஞ்சு, கத்திரிப்பிஞ்சு, துவரம் பருப்பு, சிறுகீரை யிதுகள் கூட்டிக் கொள்ளவும்.

அமுர்தாதி கிருதம்

இளநீர் படி-1, பசுவின் நெய்படி-1, சர்க்கரை பலம்-உ, தேன்படி-வ, பசுவின் பால்படி-1, சாதிக்காய் விராகனிடை-1சாதிபத்திரி விராகனிடை-1, லவங்கம் விராகனிடை-1, கோரோசினை - விராகனிடை-1, ஓமம் -விராகனிடை-1, திப்பிலி -விராகனிடை-3, சீரகம் - விராகனிடை-1, திப்பிலி மூலம் -விராகனிடை-4, செவியம் -விராகனிடை-4, பரங்கிப்பட்டை விராகனிடை-1, கோஷ்டம் -விராகனிடை-1, கோவைக்கிழங்கு - விராகனிடை-1, அதிமதுரம் -விராகனிடை-1, மிளகு -விராகனிடை-5, கொத்தமல்லி,-விராகனிடை-1, வாய்விளங்கம் விராகனிடை-.1, கடுகு விராகனிடை-5, பெருங்காயம் -விராகனிடை-5, தானிக்காய் -விராகனிடை-2, கடுக்காய் - விராகனிடை-2, தாளிசபத்திரி -விராகனிடை-1, இவ்வளவுஞ் சேகரம் பண்ணி அதில்விட்டு அரைக்கிறசாறு கரிப்பான்சாறு -படி-வ, மணத்தக்காளிச்சாறு -படி-வ, கற்பூர வள்ளிச்சாறு -படி-வ, தூதுவளைச்சாறு படி-வ, வல்லாரைச்சாறு படி-வ, கிரந்திநாயகஞ் சாறு -படிவ, துளசிச்சாறு -படிவ, முள்ளிச்சாறு -படிவ, சீந்திச் சாறு படி-வ, சங்கிலைச்சாறு படி-வ, வெள்ளருகுச் சாறு படி-வ, இதுவெல்லாம் விட்டு அரைத்துச் சட்டியிலிட்டுக் காச்சி லேகிய பதமானபிறகு இறக்கவும். இதற்குத் தீரும் வியாதி - உடம்புக் கடுப்பு, அக்கினி மந்தம், வாய்வு,

உடந்ஊமாலதெல்லாந் தீரும். சுவாசகாசம் வெள்ளைக்காசம், ரெத்த காசம், பயித்திய காசம், இவையெல்லாந் தீரும். ஒரு மண்டலங் கொள்ளவும். இச்சா பத்தியம்.

அமுர்தாதிச் சூரணம்

பசுவின்தயிர் - ஆறுமரக்காலொரு பானையில் விட்டு தினமொன்றுக்கு மூனுசாம மெரிக்கவும். இது பொடியாக எரித்து அதன்பிறகு பசுமஞ்சள்த் சாறு ஒரு வள்ளம், கல்லுப்புஒருபடி, பிரண்டை ஒரு வீசை யிடித்து கையான் தகரைச் சாறு - ஒருவள்ளம், சிறுக்கீரை வேர் பலம்-20, சித்திரமூலம்-பலம்-உ, ஆயில்ப்பட்டை-பலம்-1, மாவிலிங்கம்பட்டை-பலம்-1, சதுரக்கள்ளிச்சாறு படி-1, இலைக்கள்ளி இலை-5, பேய்த்துமட்டிக்காய்-10 வாட்டிப் பிழிந்து யெல்லாம் பற்பம் பண்ணி பின்பு கடைச்சரக்கு -வாய்விளங்கம்-பலம்-உ, ஓமம் -பலம் உ, திப்பிலி-பலம்-1, சுக்கு பலம்இ, மிளகு-பலம்-ச, இதுவெல்லாங் கோமியத்தில் மூன்னா ஊறப்போட்டு சீரகம் -பலம்-1, கடல்நுரை பலம்-1 பெருங்காயஞ் சுட்டுப் போடவும்.

வெள்ளைப் பூடு -பலம்-உ, முந்தின பற்பம் மூனு பங்கும் கடைச்சரக்கு -ஒரு பங்குங் கூட்டி இளவெந்நீரில்ச் கொடுக்கவும். வயிற்றிலுள்ள வியாதியெல்லாந் தீரும். இச்சா பத்தியம்.

வாத கிராணி சங்கர கிராணிக்கு மருந்து

திப்பிலி-கிராகனிடை-3, மிளகு-பலம்-6, பேய்மிரட்டிச்சாறு படி-4, சாறு வடி கொண்டு வெல்லங் கரைத்துப் பாகு பதத்தில் முந்தின மருந்தெல்லாம் ஆக்கப் பொடி செய்து போட்டு அடி பத்தாமலச் கிளறி மெழுகு பதத்தில் எடுத்துக் கலசத்தில் வேடுகட்டி ஒன்பதுநாள் வைத்து நிதம் ரெண்டு வேளையும் புன்னைக் காயளவு கொள்ளவும். உப்புக் கூட்டிக் கொள்ளவும். புளிப்புகையிலை தள்ளவும். கசப்பும் அவபத்தியமுந் தள்ளி பத்துநாள்ச் கொள்ளவும்.

நீர்ப்பீனிசத்துக்கு

நல்லெண்ணை படி-1, வேப்பெண்ணெய்-படி-1, எலுமிச்சம்

பழச்சாறு படி- 1, ஆடாதோடைச்சாறு -படி- 1, சாரணைச்சாறு -படி- 1, குப்பைமேனிச்சாறு படி- இந்தயே படியும் அளந்து ஒரு சட்டியில் விட்டு வசம்பு, வெள்ளுள்ளி, கடுகு திரண்டபதத்தி லெண்ணையை விட்டு பிற்பாடு யிறக்கி வைத்துக் கொண்டு ஒருநாள் முழுகவும். இரண்டு நேரமும் நாசியில் நசியம் பண்ணவும். பத்தியம் முழுகின அன்றைக்குத் துவரைப்பருப்பு, அரைக்கீரை கூட்டிக் கொள்ளவும். புளிப்பாகாது ஒரு மண்டலங் கொள்ளவும்.

மண்டையிட நோவுக்கு

நொச்சிக் கொழுந்து -பலம்- 4, ஆவாரைக்கொழுந்து-பலம்- 4, வேலிப்பருத்திக் கொழுந்து பலம்- 4, ஒற்றைப் பூண்டு பலம்- 1, மிளகு- 5, வசம்பு- 1 சிறுநீரில் நசியம் பண்ணவும். மண்டை நோவுள்ளதெல்லாந் தீரும்.

சூலைக்கட்டுக்கு மருந்து

சுக்கு, மிளகு, திப்பிலி, தாளிசபத்திரி, சடாமாஞ்சி, கொத்தமல்லி, திரிபலை, சீரகம், கருஞ்சீரகம், அதிமதுரம், திப்பிலிமூலம், கண்டுபரங்கி, சித்தரத்தை, கஸ்தூரிமஞ்சள், வாய்விளங்கம் இது வகைக்கு பலம்- 1 இதக்குச் சமன் பரங்கிப்பட்டை, நெல்லிக்காய், கெந்தகம் சுத்தி பண்ணினது கூடப் போடவும். சர்க்கரை பலம்- 4, கூட்டிக் கொள்ளவும். உப்பு வறுத்துக் கூட்டிக் கொள்ளவும். அரை பத்தியம்.

குன்மத்துக்கு

வளையலுப்பு -பலம்- 5, பொட்டிலுப்பு -பலம் -5, கல்லுப்பு-பலம்- 5, இந்துப்பு -பலம்- 5, அட்டுப்பு-பலம்- 5வகைக்கு இ -கடைச்சரக்கு -லவங்கம் -வீராகனிடை- 1, திப்பிலி வீராகனிடை- 1, சுக்கு -வீராகனிடை- 1, ஓமம்-வீராகனிடை- 21 மிளகு வீராகனிடை- 20 பெருங்காயம்-வீராகனிடை- 5, ஏலம்வீராகனிடை- 5, சாரைப்பருப்பு, வீராகனிடை- 3, கருஞ்சீரகம் -வீராகனிடை- 10 சதுரக்கள்ளி சிறுகச்சிறுக அரிந்தது -படி- 1 கடைச்சி வேரிலை, விழுதி சிறந்தி சமூலமும் -படி- 1 தூதுவளை சமூலம் -படி- 1இ சாத்தொட்டிவேர் சமூலமும் -படி- 1 நிலக்குன்றிவேர்-படி- 1 இவையெல்லாஞ் சிறுகச்சிறுக நறுக்கிப் பொடியாகச் செய்து கடைச்சரக்கு நேர்கூறாக்கலந்து உப்பு வகையுங் கலந்து அதின்பிறகு ஒரு பானையில் மருந்தெல்லாம் வைத்துச் சட்டி மூடிச் சீலைமண் செய்து

ஒரு விராட்டியிலிப் புடம் போடத்தைலமிறங்கும். தைலம்பிரம்பா யெடுத்து வைத்து பானைக்குள்ளிருக்கிற மருந்தைப் பொடி பண்ணித்தைலம் விட்டு அரைத்து அனுப்பானம் தேனில்க் குழைத்துக் கொள்ளவும். அலலானால் பசுவின் நெய்யில்க் கொள்ளவும். வெத்திலையில் அஞ்சு விராகனிடை அளவு கொள்ளவும். நல்லெண்ணை யிட்டு முழுகவும். அரைமண்டலங்கொள்ளவும். மூன்று நாளில்த் தெரியும்.

வாய்வுக்குச் சூரணம்

இந்துப்பு -விராகனிடை- 1இ, சீரகம்-விராகனிடை-3, ஓமம்- 1இ, சுக்கு விராகனிடை-6, திப்பிலி, விராகனிடை-எஇ, கடுக்காய் -விராகனிடை- 12இ, இவ்வளவும் வறுத்துச் சூரணம் பண்ணிச் சாப்பிடவும்.

மருந்தீடுக்கு

பசுவின்பால் நெய் படி-2, சிறுகீரை விரையும் விளாங்காய்ச்சதையும் பலம்-1 அரைத்து நெய்யிலிக் காச்சி உள்ளுக்குக் கொடுக்கவும். சுவி நெய்முதல்ச் சகல மருந்தீடும் தீரும்.

பவுந்திரத்துக்கு

கருங்குருவை அரிசி -படி-3, நல்லெண்ணெய்-படி- 1, தெற்கத்தி வெல்லம்-பலம்-3, திப்பிலி-பலம்-1, வல்லாரை -பலம் ௵ திப்பிலி மூலம்-பலம்-4௵வ, சாதிப்பத்திரி -பலம்-இ, சாதிக்காய் விராகனிடை-3, வாய்விளங்கம்-பலம்-இ, மிளகு -பலம்-தெ, பூண்டு -பலம்-இ, சுக்கு -பலம்-தெ, முடவாட்டுக்கால்-3, ஓமிளாத்திப்பட்டை-பலம்-கஇ, கொடுவேலி வேர்ப்பட்டை-பலம்-இ, பேய்ப்புடலம் -பலம்-க, பறுபாகல்க்கிழங்கு -பலம்-6, கருநொச்சி வேர்ப்பட்டை-பலம்-வ, அப்பைக்கிழங்கு பலம்-3, தொட்டால்வாடி பலம்-இ இதுவெல்லாம் சூரிய புடம் வைத்து வேறே வேறே அரைத்துக் கொண்டு கடைச்சரக்கும் வேறே வேறே அரைத்துக் கொண்டு கருங்குருவை அரிசியிடித்து இந்த மருந்தை ஆறாய்ப் பிரித்து ஆறு நாளைக்கு அரிசிட்டி -இ இடித்து யிளநீர் விட்டுப் பிசறிப் பிட்டவித்துக் கஷாயம் நல்லெண்ணை வார்த்துக் கொண்டு தெற்கத்தி வெல்லம்

...19

போட்டுத் தின்ன நாலு நோக்காடுந் தீரும். பத்தியம்-கருங்குருவை அரிசியும், வெள்ளாட்டுப்பால், வெல்லம், போட்டு அசனம் பண்ணவும்.

புகை மருந்து

அரிதாரம்-விராகனிடை-1, ரசம்-விராகனிடை-1, சாதிலிங்கம்-விராகனிடை-1, வெள்ளைக் குங்கிலியம்-விராகனிடை-1, கஸ்தூரி மஞ்சள் விராகனிடை-1, எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து மெல்லிய துணியில் தடவி நிழலுலர்த்தித் திரியாகத் திரித்துச் சுருட்டி மூக்கில் வலை புண்ணுக்குப் பிடிக்கவும். உப்பு புளி தவிரவும்.

செவி கேளாததுக்கு

கையாந்தகரைச்சாறு, ஒத்தைப்பூடு வாழைக்கிழங்கு, முருங்கை, துளசி பாலில் நசியம் பண்ணிக் காதிலிடவும் வலியுந் தீரும்.

நீரிழிவுக்கு

வெள்ளீய்யம் -விராகனிடை-6, கொட்டாங்கிரந்தை பொடி-படி-4, புண்ணாக்குப்பொடி -படி-40, கடுக்காய்-60 பொடி பண்ணி குழி கெல்லி நாலு எரு அடுக்கி மேலே இருநாழிக் கரந்தைப் பொடி போட்டு வைத்து அதின்மேல் புண்ணாக்குப் பொடி பரப்பி அதின்மேல் நாலு விராட்டி அடுக்கிப் புடமிடவும். பற்பமாம். ஆறவிட்டுயெடுத்து நெல்லி முள்ளிப்பொடி, மஞ்சள்ப்பொடி இடித்து வஸ்திரகாயம் பண்ணி இந்த பற்பமுஞ் சமன்கூட்டி வெருகடிப் பிரமாணம் தயிர் வடிகட்டித் தப்பாமல் கொள்ளவும்.

முந்தின வெள்ளீயம் -விராகனிடை-6, தகடு ஈசலிறகு போலே தட்டிக் கீழ் மேலும் ரெண்டுவகை பொடியும் இட்டு வைக்கப் பற்பமாம். இதுக்குத் தீரும் வியாதி நீரிழிவு தீரும்.

வெண்ணையிலும் தயிரிலுமிட்டுச் சாப்பிடவும். நீரிழிவு நிற்கும் சுக்கிலப் பிரமியம், ரத்தப்பிரமியம், கடுப்பு, எலும்புருக்கி இவையெல்லாந் தீரும். வெள்ளாட்டுக் கொழுப்பு முன்னே உருக்கிக் கொடுத்து அதின்பிறகு மருந்து கொடுக்கவும். பத்தியம். உப்பு கூட்டிக் கொள்ளவும் தீரும்.

சகல உஷ்ணத்துக்கு மருந்து

வெட்டிவேர், கோஷ்டம், சீரகம், இலவம்பிசின், ஏலம், இலவங்கம், கற்பூரம், பச்சைக் கற்பூரம், சத்திசாரணை, மிளகு, பேரிச்சம்பழம், தாளிச பத்திரி, குங்குமப்பூ, நாகரச பற்பம், செத்தகம்சத்தி சாரணைச் சாற்றில் சுத்தி பண்ணிக் கொண்டு முப்பது நாழிகை ஊறவைத்து நல்ல சந்தனம், நரிப்பயற்தங்கொடி, நெருஞ்சிவேர், இது வகைக்கு பலம்-1 சீந்தில்ச் சர்க்கரை ரெண்டு பங்கு இது சமன் சர்க்கரை கூட்டி பால், தேன் நெய்யில் கொள்ளவும். இருபத்தோரு வகை உஷ்ணமுந் தீரும். இச்சா பத்தியம்.

நீர்க்கடுப்புக்கு

கோவைத்தண்டு வெளிதாமரையிலை, ஈரவெங்காயம் இது வைத்து ஒரு தண்ணீர் கொடுக்க ஊறவிட்டு நன்றாய்ப் பிசைந்து வெங்காரம் பொரித்து ஒரு விராகனிடை போட்டு உழக்குத் தண்ணீர் கொடுக்கத் தீரும்.

நீர்க்கட்டுக்கு

தாழை விழுது சில்லுப் போலே நறுக்கி புதுச்சட்டியில் அரைப்படி தண்ணீர் விட்டுப் பனியிலூறவைத்து அரைப்படி தண்ணும் ஒரு விராகன் சீரகம் - தெற்கத்தி வெல்லம்-பலம்-1, வெங்காரம்-விராகனிடை-1 ~~பொரித்து~~ பொரித்துப் போட்டு சுத்தாளஞ் சோறு -பலம்-1 மூனுதிரங்கமுவிப்போட்டுக் கூட வைத்துப் பிழிந்து கொண்டு வெங்காரம் பொரித்துப் போட்டு மூன்றுநாள் கொடுக்கவும். உப்பு, புளி தவிர்க்கவும்.

பவுத்திரத்துக்கு

சிறுபுள்ளடி, பெரும்புள்ளடி ரெண்டும் சமனாகக் கொண்டு வந்து பெருக்கலங்காய் கொண்டு வந்து உள்ப்பஞ்சு எடுத்துப் போட்டு அது கொண்ட மட்டும் திணித்து புடமிட்டுக் கீரை போலே நெய் கொள்ளவும். யிருபத்தோரு வகை உஷ்ணமுந் தீரும். இச்சா பத்தியத்துக்கு -கீரைபோலே ~~தீ~~ வெந்த பிறகு உழக்குப் புழுங்கலரிசி நனைத்து இந்த வெந்த மருந்து கூட வைய்த்து அரைத்து தெற்கத்திக் கருப்புச்சட்டியுங் கூட வைத்து ரேசித்துக் கருத்த எள்ளெண்ணை வார்த்து அடை சுட்டு மூனுநாள் சாப்பிடவும்.

பத்தியமானால் உப்பு வருத்துக் கூட்டினால். பத்துநாள் சாப்பிடவும். சித்திர மூல வேரரைத்து ஒரு கொட்டைப் பாக்களவும் பசுவின் வெண்ணை ஒரு கொட்டைப் பாக்களவும் ரெண்டும் ரேசிச்சு மூன்றுநாள் சாப்பிட்டு ஆறுநாள் பத்தியம் பசுவின்பால் பசுவின் நெய் கூட்டிக் கொள்ளவும்.

சகல பவுந்திரத்துக்குமருந்து

பவளமல்லிகைச் சமூலங் கொண்டு வந்து நிழலுலர்த்தலாக உலர்த்தி இருசாண் குழி செல்லி குழிக்குள் விட்டு மூணுசட்டி செங்கல்த் தீப்பறக்கக் காயப் போட்டு கலயத்தி லெடுத்துப் போட்டு வேது மூணுநாள் பிடிக்கவும். மேல்மருந்து. சிப்பியைச் சுட்டு விளக்கெண்ணையில் குழப்பிப் பூசவும்.

நீர்க்கட்டுக்கு

கதலிவாழைச் சாம்பலில் அரைபொடியும் வெண்காரமுங் கூட்டிக் குகையில் வைத்து சீலைமண் செய்து உருக்க உருகும். சாதிலிங்கம் வைத்து நறுக்கி சட்டியில் வைத்து மேல்ச்சட்டி கொண்டு மூடி சீலைமண் செய்து தீபாக்கினியாக எரிக்கவும்.

ஆசன பவுந்திரத்துக்கு

சிறுகுறிஞ்சாயிலை ஒருபிடி. சாமையரிசி உழக்கு கூட யிடித்து பிட்டவித்து நல்லெண்ணை நல்ல வெல்லங் கலந்து தின்னவும். பதினைந்து நாள்த் தின்னவும். உப்பு, புளி, எண்ணை கூட்டிச் கொள்ளவும். மறுபத்தியம் - பதினைந்துநாள்த் தின்னவும்.

மேல்ப்புண்ணுக்கு - பழுபாகல்த் கிழங்கு அரைத்துக் கட்டவும்.

கை கால் முடங்கினதுக்கு - மயிலிறகு சுட்டகரி -பலம்- 1, முடக்கொத்தான் -விரை-பலம்- 1, பெருங்காயம்-பலம்- 1, வெள்ளைப்பஞ்சு பலம்- 4, மிளகரணைப் பட்டை-பலம்- 1, புலிதுடக்கி வேர்ப்பட்டை பலம்- 1 வேப்பெண்ணெய் படி 1 தனியாக கொதிக்க வைத்துக் கடுகு திரண்ட பதத்திலே கடுகும் வெண்ணையும் ஒரு கரண்டி கைகால் மேல்ப்பிடித்து உள்ளுக்குக் காசத்தனை கொடுக்கவும். பத்தியம் - துவரைப் பருப்பு, உப்பு, பாசிப்பயறு, அரைக்கீரை கூட்டவும். தீரும்.

பிரளிக்கு

கணைப்பூடுச்சாறு, வெத்திலைச்சாறு, முங்கையிலைச்சாறு

குப்பைமேனிச்சாறு, மிளகுதக்காளிச்சாறு, பேய்க்குமட்டிச்சாறு, தும்பைச்சாறு, அவரையிலைச்சாறு, அவுரிச்சாறு, இரண்டுச்சாறு, தைவேளைவேர், மூக்கரணைவேர், சிறு புள்ளடியிலை, சொறையிலைச்சாறு, முருங்கைப்பட்டை சடைமருந்தும் - கடுக்காய்-20, பச்சை மஞ்சள், வெள்ளைப்பூடு பலம்-இ, வசம்பு விராகனிடை-இ, பெருங்காயம் -விராகனிடை-4, கருஞ்சீரகம் -விராகனிடை-4, பொடித்தும் பொரித்தும் எண்ணெயில்ப் போட்டு பதமாயெரிக்கவும். பத்தியமாயிருக்கவும்.

கண்டங்கத்திரி லேகியம்

இஞ்சி-பலம்-10, கற்கண்டு -பலம்-4, சீனிக்கற்கண்டு-பலம்-1, கூகைநீறு-பலம்-1, ஏலம், சீரகம்; அதிமதுரம், கோஷ்டம், விராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, லவங்கப்பத்திரி, தாளிசபத்திரி, சுக்கு, மிளகு, சிறுநாகப்பூ, சுண்ணலவங்கம், தேத்தான் விரை, இந்துப்பு, வங்காளப்பச்சை, கடுகுரோகணி, சிவதை, வெங்காரம், விளாம்பிசின், சந்தனப்பொடி, முந்திரிகைப்பழம், பேரிச்சம்பழம் வகைக்கு விராகனிடை?3, கடுக்காய் -20, தான்றிக்காய்-15, நெல்லிப்பருப்பு -பலம்-இ யிதுசெல்லாம் வஸ்திரகாயம் பண்ணிக் கொண்டு இஞ்சி மேல்ப்புரணி சீவிப் போட்டு சிறுக அரிந்து பசுவின் நெய்யில்த் கருகாமல்ப் பொன்னிறமாக வருத்துப் பொடி பண்ணவும். பசுவின் சட்டியில்ப் போட்டு சர்க்கரை போட்டு பனங்கற்கண்டு சீனிக் கற்கண்டு போட்டு உருகி வருகிற பக்குவத்தில் இஞ்சிப் பொடி போட்டு சரக்கு வகைப் பொடியுங் கூடப் போட்டு கை நீறும் போட்டு தேனுமுக்கு விட்டுக் கிண்டி இறக்கி வைத்துக் கொண்டு ரெண்டு புன்னைக்காயளவு சாப்பிடவும். இதற்குத் தீரும் வியாதி சத்தி குன்மம், எரிகுன்மம், வலிகுன்மம், அஷ்டகுன்மமும், பீலிகை குண்டல வாய்வு, சூசிகா வாய்வு, சூலை காமாலை, பாண்டு, உள்ச்சுகாச்சல், மேக வெட்டை, இரைச்சல், உப்பிசம், இவ்வளவுந் தீரும். உப்பு சங்கிலை வருத்துக் கூட்டவும். புளி, புகையிலை, மோர் தள்ளவும்.

மஞ்சக் காமாலைக்கு

சையான்தகரைச் சாறு உழக்கு, எலுமிச்சம்பழச்சாறு உழக்கு, மிளகு காசிடை அரைத்து கூடக் கலந்து ஏழுநாளிக் கொடுக்கவும்

பத்தியம்-உப்பு, புளி ஆகாது. துவரம் பருப்பு, மிளகுநீர், அரைக்கீரை, மருபத்தியத்துக் சேரும். ஏழுநாள் பசுவின்பால் அரைவாசி அஞ்சனா ளிச்சா வைத்துவிலை பத்தியம்.

வாய் நாற்றத்துக்கு

விளாம்பிசின் கோஉக்டமுந் தின்னத் தீரும்.

முளை மூலத்துக்கு

நெட்டைப் பேய் மிரட்டி கொண்டு வந்து இடித்து சூரணம் பண்ணிப் பொடி நாழி அஞ்சு பலஞ் சக்கரை கலந்து வைத்துக் கொண்டு அந்தியுங் காலமும் வெருகடிப் பிரமாணம் மண்டலஞ் கொள்ள மூலமுளை யோடே விழுந்துபோம். புளிவிட்டுச் சகலமுங் கூட்டவும்.

வயிற்றுக் கடுப்புக்கு

வயிற்றுக் கழிச்சல் ரத்தக் கடுப்புக்கு:-

சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், லவங்கம், சாதிபத்திரி, அதிவிடையம், இலவம்பிசின், மாதளந்தோடு, வில்லபத்திரித்தோடு, அபின், வட்டத்திருப்பி, குரோசாணி, ஓமம், வாய்விளங்கம், வகைக்கு விராகனிடை-1 பொன்னிறமாய் வருத்து சூரணம் பண்ணி நெல்லிக்காய் மரியாதித் தேனில்க் குழைத்துக் கொள்ளவும்.

வேறு:-

தேற்றான் கொட்டை நெய்

தேற்றான் கொட்டையைப் பாலில் ஊறப்போட்டு எடுத்து அரைத்து அமுர்தவள்ளிக்கிழங்கு, தண்ணிமிட்டான் கிழங்கு, பொன்னாங்காணிவேர், இவ்வகைக்கு பலம்-1 பசுவின்பால் வார்த்தரைத்து பசுவின்நெய் முன்னாளி கலந்து காய்ச்சி பதத்தில் வடித்து தானியப்புடம் வைத்து நித்தம் கொட்டைப் பாக்களவு கொள்ள ரத்தபித்தம், சுவாசகாசம், தோஷம் முதலான வியாதியெல்லாந் தீரும்.

வரட்சி யிருமலுக்கு

தேற்றான் கொட்டை பசுவின் நெய்யில் வருத்து சிவக்க வெந்த பதத்திலே அரைத்து மிளகுபொடி உழக்கு கலர்து நெல்லிக்காயளவு

கொள்ள வறட்சியுள்ளது, இருமலுள்ளது, சேட்டும, கோழையுள்ளது நோய்களுக்கும் ~~இவையெல்லாந்~~ தீரும்.

தாகத்துக்கு

வேலாம்பட்டை பொரித்து எருமை மோரில் அரைத்துக் குடிக்க தாகந் தீரும்.

விலாமிச்சம்வேர், மிளகு தக்காளிவேர் இது இரெண்டுங் கசாயம் வைத்துக் குடிக்கவும்.

செவியில் நீர் விழுந்து கேளாததுக்கு

தேள்கொடுக்கிலை சமூலமும், சாதிக்காய், சாதிபத்திரி, வலம்புரிக்காய், செண்பகப்பூ, கருஞ்சீரகம், வேம்பாடம்பட்டை, கடல்நுரை இவையெல்லாம் அரைத்து நல்லெண்ணையில் கொதிக்க வைத்து பதத்திலிறக்கிச் காதிலே இத்தி பஞ்சு கொண்டு அடைக்கவும். எட்டுநாள் பத்துநாளடைச்சு தலைக்குத் தேய்க்கவும். சீழ் மாறும்.

அதிரத்தக் கடுப்புக்கு நாலஞ்சுவகை

ஆவரம் வேர்ப்பட்டை ஒரு பிடி நாளி நீரிலிட்டு உழக்காய்க் காய்ச்சி இலவம் பிசினின் மேல்ப்பொடி தூவிக் கொடுக்கவும்.

அன்றிட்ட கோழி முட்டையுங் குங்கிலியமும் நல்லெண்ணையில் சாரித்துக் கொடுக்கவும்.

விளாங்காய் உதியம்பட்டைச் சாற்றிலரைத்துக் கொடுக்கவும்.

எருமைப் பாலில்க் காய்ச்சிக் குழப்பிக் கொடுக்கவும்.

வேப்பம்பிசினும் அதிவிடையமும் வெந்நீரில்க் கொடுக்கவும். நிற்கும்.

மூலச் வாய்வுக்கு

காட்டுக் கரணைக்கிழங்கும் மாகாளிக் கிழங்கும் வெருகங்கிழங்கும் பிரண்டை சமூலமும் மாவிலிங்கம் வேர், கொடிவேலிவேர், முருங்கைவேர், சிறுவைவேரும் யிலையும் கள்ளிவேர், சிவதைவேர், சிவந்த நாயுருவி சமூலமும் இவை வகைக்கு பலம்-5 இடித்து பதக்கு நீர் விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி யிருத்துக் கொண்டு இந்துப்பு கல்லுப்பு சீனக்காரம் சவுக்காரம் வெங்காரம் அதிமதுரம், கோஷ்டம்,

லவங்கப்பட்டை சுக்கு, மிளகு, திப்பிலி, திரிபாலை, கருஞ்சீரகம், மரமஞ்சள், நேர்வாளம், காந்தம், கிட்டம் இவை வகைக்கு களஞ்சி யிடை அரைத்துப் பசுவின்பால் நெய் நாளி - முந்தின கஷாயத்தில் விட்டு அரைத்துப் பொடியும் போட்டுக் காய்ச்சி பதத்தில் வடித்துக் கொண்டு தினசரி ரெண்டு கரிசினை கொள்ளவும். மூல வாய்வு தீரும்.

இரத பற்பம்

வாழைச்சருகு, செம்முள்ளி, சிவந்த நாயுருவி, நீர்முள்ளி, புடவைத் துணி, வெங்காரம், கல்லுப்பு, கொடிவேலிவேர், சேங்கொட்டை ஓர் வகைக்கு ஒரு பலம் பாண்டத்திலிட்டு சாரணிச்சாறு நாழி விட்டுப் பிசறி யிரதம் நாலு பலம் நடுவே வைய்த்து கொடிவேலி வேரரரைத்து அதின்மேல் மூடிப் பானைவாய் சீலைமண் செய்து எருவுக்குள் வைத்துப் புடமிட பற்பமாம்.

முன்னாளி கொமட்டிக்காய்ச்சாறு உழக்காய்க் காய்ச்சி முந்தின பற்பமும் ஒரு களஞ்சி பெருங்காயமுங் கூட்டித் தூளாக்கி எட்டுநாள்த் தானியப்புடம் வைத்து ஒரு நெல் பிரமாணம் கொள்ள பெருவயிறு, கவுசி முதலான பக்கப் பீலிகை, அனுவைப் பீலிகை, மகோதரம் நீர்க்கோவை இவைகள் தீர்ந்து போகும்.

மூலத்துக்குப் புகை

தலைமயிரும் சாதிக்காயும் வெள்ளாட்டு எருவும் குங்கிலியமும் பொடி செய்து கலயத்தில் நெருப்பிட்டு இந்தப் பொடி போட்டுப் பவவாயில் மூன்று நாள்ப் புகைகாட்ட மூலந் தீரும்.

சகல கிராணிக்கு மருந்து

குப்பைமேனி யிலையை விளக்கெண்ணை விட்டுப் பசுமை போகாமல்க் கருகாமல் வருத்தப் பொடி பண்ணி வெருகடிப்பிரமாணம் உள்ளுக்கு சாப்பிடவும். சகல கிராணியுந் தீரும். புளி, புகையிலை யாகாது.

மூலக்கடுப்புக்கு மூலவ வாய்வுக்கு மருந்து

வெள்ளை ஊரிச்சதை எலுமிச்சங்காய ளவு அரைத்து ஓமம் பல மூனு கடைக்கஞ்சாச்சாறு உழக்கு - வாழைப்பூச்சாறு உழக்கு உகாயிலைச்சாறு

உழக்கு, சீரவெங்காயச்சாறு ஆழாக்கு பன்றிநெய் உழக்கு மெழுகு பதத்தில் வடித்து கடுகுடனே வைத்துக் கொண்டு தட்டுக் காசளவு உள்ளுக்குக் கொடுக்கவும். புளி மாங்கிஷமாகாது.

வயத்து வலிக்கு

பேய்க்கொமட்டிக்காய் வளையமாய் அறுத்து விரைதள்ளிப் போட்டு மேல் மருந்து சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்வெங்காயம், பெருங்காயம், இந்துப்பு, பொட்டிலுப்பு, கல்லுப்பு, காச்சுப்பு, வளையலுப்பு, வெண்காரம், நவச்சாரம், சீனாக்காரம், சவுக்காரம், காந்தம், சிறுதேக்கு, அரிதாரம், அரத்தை, கடுகு, மரமஞ்சள், திப்பிலிமூலம், செவியம், கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், கடுகுரோகணி, வெப்பாலை, அரிசி, விளாவரிசி, நேர்வாளம், வெட்டிவிரை வகைக்கு ஓரொன்றுக்கு பலம்-இ, கொடுவேலிவேர், வீழிவேர், பிராயவேர், சாரணைவேர், சித்தாமணக்குவேர், வெள்ளைக்காக்கணம்வேர், சுத்திசாரணைவேர், சிவதைவேர், சங்கம்வேர், அசில்பட்டை, நிலவாகைவேர், அழிஞ்சிவேர், எருக்கலம்வேர் இவை யோரொன்றுக்கு ஒரு பிடி கூட்டி இவையெல்லாம் சரிசமன் வெள்ளாட்டுக் கோமியம் விட்டரைத்து சதிரக்கள்ளிப் பால்விட்டுப் பிசைந்து பேய்க்கொம்மட்டிக் காய்க்குள்ளே அடக்கி எரு முட்டை கீழும் மேலும் அடுக்கிப் புடமிட்டு இரவு முழுதும் வெந்து விடிந்தபின்னெடுத்து நிழலுலத்திப் பொடி செய்து வஸ்திரகாயம் பண்ணிக் கொண்டு வெருகடிபிரமாணம் அந்தி சந்தி தின்னவும். மெத்த வயறு கழிந்தால் மோருஞ் சோறும் தின்னவும் வயத்திலுள்ள வியாதியெல்லாந் தீர்ந்துபோம்.

பீனிசத்துக்கு

நொச்சில்ச்சாறு கையான்தகரைச்சாறு, குப்பைமேனிச்சாறு, சமனாகக் கூட்டி யெண்ணையும் சமனாகக் கூட்டி கற்கம் அதிமதுரம், கோஉ்டம்ம, சித்தரத்தை, வாய்விளங்கம், சுக்கு, ஏலம் இலவங்கம் ஓரொன்று வீராகனிடை-2 இவை பொடி செய்து காய்ச்சி வடித்துத் தலைக்குத் தேய்த்து மூணு சாமமான பிறகு முழுகிப் போடவும் நான்கு

நாட்களுக் கொருனாள் முழுகிவரவும். யிச்சா பத்தியம்.

(கு)

தேளுக்கு மருந்து

தெற்கத்தி வெல்லம் பாக்களவு கொண்டு வந்து தண்ணீரில் கலக்கிக் கொடுக்கவும் தீரும். கண்டது.

யின்னம் - எருக்கம்பாலில் புழுங்கலரிசியை நனையப்போட்டு நிழலுலத்தலாய் உலர்த்தி வைத்துக் கொண்டு தேள்த்தடுக்கினவனுக்கு அஞ்சாறு அரிசியைத் தின்னக் கொடுக்கவும். நிற்கும்.

தாதுவிர்த்திக்கு

நிலப்பனைக் கிழங்கும் பூனைக்காலியிலையும் சக்கரையும் பசுவின் பாலில் குடிக்கத் தாது வர்த்திக்கும்.

தேளுக்கு மருந்து

வேப்பிலையும் உப்புந் தேய்க்கத் தீரும்.

திரளாத பெண்ணுக்கு

குப்பைமேனிச்சாறு உழக்கில் காசிடை நல்லயெண்ணை ஊற்றி சாப்பிடத் திரளுவாள் யிது நிச்சயம்.

பிள்ளையில்லாதவர்களுக்கு பிள்ளை யுண்டாக

நாளி -ஆவரம்பூ, நாளி -கருங்காலியிலையும் யரிசிமா யிடித்துக் களிக்கிண்டி குளித்த நாளன்று தன்னுடைய பத்தாமுகத்தைப் பார்த்துத் தின்னப் பிள்ளையுண்டாம். கைகண்டது.

திரள மருந்து

செம்பருத்திப் பூச்சாறு பசுவின் பாலில்க் கொடுக்கத் திரளுவாள்.

இருமல் தொண்டைக்கட்டுக்கு

கண்டங்கத்திரியிலை ஒரு பிடி, சங்கிலை- ஒருபிடி யிது மூன்றுங் கூட்டி யிடித்துப் புட்டவியலாக வைத்து அதைப் பிழிந்து கொண்டு மேல்ப்பொடி -திப்பிலி -விராகனிடை-கழி பொடி செய்து போட்டுக்

கொடுக்க தேன் ரெண்டு காசிடை விட்டு மத்தித்துக் கொடுக்கத் தொண்டைக்கட்டு அரிசிரல் யிருமல்த் தீரும். /

பதினெட்டு குன்மத்துக்கும்

உகாயிலை நாலு மரக்காலிலை ஒரு பானையிலடைத்து இதில் கரியுப்பு நாழி வெடியுப்பு கால்ப்படி, இந்துப்பு கால்ப்படி ஓமம் படியொன்று இதுவெல்லா மிடித்துப் பானையில்ப் போட்டுக் கொள்ளவும். ஊமுத்தி முன்னாழி கூடப் போட்டுக் கொள்ளவும். இதுவெல்லாம் பானையிலடைத்து சட்டி கொண்டு மூடிச் சீலைமண் செய்து எரியிடவும். இரவு பகல் அறுபது நாழிகை எரியிடவும்.

பானை வெடிக்குமளவும் யெரியிடவும் ஒன்றாக விளைந்து திரளும். திரளுமுன்னே பானை வெடித்தால் மறுபானையிலிட்டுச் சீலைமண் செய்து எரியிடவும். ஆறவிட்டு எடுத்துக் கலசத்திட்டு வைத்துக்கொண்டு நேரமொன்றுக்கு ஒரு பணவிடைத் திட்டம் நாற்பதுநாள்ச் சாப்பிடவும். வயத்திலுள்ள வலி குன்டல வாய்வு குன்மம் இவையெல்லாந் தீரும். கைப்பு புளிப்பு தவிர்வும்.

கெற்பந் தரிக்க

ஆடாதோடையிலை, சீந்தில் தேவதாரம், பிரமியிலை, பாகலிலை, களக்கொடி குறிஞ்சிச்சாற்றில் அரைத்துக் கொடுக்கவும்.

~~நீரேற்றத்துக்கு~~ நீரேற்றத்திற்கு

துளசிச்சாறும் சிற்றாமணக்கெண்ணையுஞ் சரிநிரையாகச் சிரசில் தேய்க்க நீரேற்றமும் பீனிசமும் போம்.

காதில்சீய் விழுகிறதுக்கு

சங்கம்வேர் சிவித்தட்டி வசம்பு, வெள்ளுள்ளி, ஏலம், வலம்புரிக்காய், சுக்கு இவ்வளவும் நன்றாய்த் தட்டிச் காதில்ப் பிழிந்து அடைக்க சீய் மாறும். /

யின்னம் - முத்திருக்கஞ் செவியிலையும் தைவேளை யிலையும் மிளகு, வசம்பு, ஒன்றைப்படும் தட்டிச்சாறு விட்டு அடைக்க சீய்மாறும்.

சூதக வாய்வுக்கு மருந்து

நல்ல வெல்லம் -பலம்- 1 கற்றாளைச் சோறு பலம்- 1 பொட்டிலுப்பு பலம்- 1 கூடப்பிசைந்து மூன்றுநாள்க் கொடுக்கவும். இப்படி மூனுமுறை கொடுக்கவும். உப்பு, புளி தள்ளிப் போடவும்.

வெகுமூத்திரத்துக்கு

புத்தாம்பழஞ்சோறு கொண்டு வந்து அரைத்து எருமைத் தயிரிலே குழப்பிக் கொடுக்கவும். நோய் நிற்கும் கைகண்டது.

வயற்றுச் கடுப்புக்கு

மாதளங்காய் பெருங்காய் ஒன்று அதைக் குடைந்து விதையைக் கொட்டி விட்டு அதினுள்ளே வைக்கு மருந்து-சாதிக்காய்-வீராகனிடை-2, சாதிப்த்திரி - வீராகனிடை-1, சிராம்பு -வீராகனிடை-1, காய்க்குள்ளே வைத்து துவாரத்துக்கு சில்லுப்போட்டு மூடிச் சீலை மண்செய்து குக்குடப் புடம்போட்டு தண்ணீர்விட்டு அரைத்து குளிகை திரண்டி வைத்துக் கொண்டு பசுவின் மோரில்க் கொடுக்கவும். அதில் ரத்தக் கடுப்புஞ் சீதக்கடுப்பும் நிற்கும்.

சிரங்குக்கு

எருக்கஞ்ம்பால், மிளகு, வேப்பந்தளிர் மஞ்சள், உப்பு புளிச்ச மோரில் ஒன்றா யரைத்து சொரி சிரங்கு மேலப் பூச நிசம், தீரும் தப்பாது.

அப்பைக் கிழங்கு, வெம்பாடம்பட்டை, அவுரிச்சாற்றி, லரைத்துருட்டி வேப்பந்தையிலத்தில்க் குழப்பி வெயில்ப்படுத்தி சாம்பல் பறக்கத் தேய்க்கத் தழும்பு காணக் கிடையாது. நிசம். தப்பாது.

இருமலுக்கு மருந்து

கையான்தகரை, நாயுருவி, மிளகு தக்காளி தூதுவளை, பெருக்கலமொட்டு வேலிப்பருத்தி நெல் நொய்யரிசி இடித்து அடை சாட்டுத் தின்ன யிருமல் நிற்கும்.

சிரங்குக்கு

எருக்கலம்பூ, மஞ்சள், புளியிலை, அவுரி, முருக்கிலை, கள்ளிச்சார் வார்த்தரைத்து நல்லெண்ணை விட்டு மூசு வேக வைத்து சிரங்குக்குப் பூச நிற்கும்.

முலைப்பாலூற மருந்து

குறுங்கொடித்தேவர் சொன்னது - குருவை, நெல்லரிசி, தேங்காய்ப்பால், அதிமதுரம், அமுதவள்ளிக்கிழங்கு, சாதிக்காய், சர்க்கரை சீனி கூட்டி பக்குவத்தில் வெந்திறக்கிப் பால்ச்சோறுண்ண பதக்கு முலைப்பால் சுரக்கும்.

முனிவர் சொன்னார் வயத்துக் கடுப்புக்கு

ஆனைக் காயில் ஒருபடியும்
அரசம் வேரும் இளம்பிஞ்சும்
கானக் குதிரை மேல்த்தொலியும்
கையில்த் கனியுங் கலந்தொன்றாய்
தாயைச் சொன்னால் பூச்சாற்றில்த்
தானே குழப்பிக் கொடுப்பீராய்
மாயஞ் செய்த குழல்மடவீர்
வயற்றுக் கடுப்பு நீங்கிவிடுமே

மூலகிராணி பெரும்பாடு எரிகுன்மித்துக்கு மருந்து

துத்திவேர், மாதளை, நற்செங்கல், வாழைக்கச்சல், ஆத்திப்பூ, முசிலி, முந்திரிகைப்பழம், மாம்பட்டை, சந்தனம், வாழைக்கிழங்கு, நாவல்ப்பட்டை, மோதைக்கிழங்கு, தாமரைவளையம் கருவேம்பு, வெள்ளிலோத்திரம், ஆனைத்திப்பிலி, அமுக்கிலாவேர், ஆடாதோடைவேர், முத்தக்காசு வகைக்கு விராகனிடை- 2½ கூட்டி செம்பருத்திப் பூச்சாறு இருநாளி பசுவின்பாலிருநாழி பசுவினெயிருநாழி இதுவொன்றா யெரித்து வடித்து துட்டுக் காசிடை அந்தி சந்தி கொள்ள மூன்று வியாதியுந் தீரும்.

அசீரணத்துக்கு

சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், சீரகம், இந்துப்பு, .../...31

கருஞ்சீரகம் பெருங்காயம் இதவெல்லாம் தட்டிப் பொடி செய்து சமன் பிரமாணங் கொண்டு வென்னீரில் வெருகடி பிரமாணங் கொள்ள அசீரணந் தீரும். மூல கிராணியுந் தீரும்.

கைகால் வீங்கினதுக்கு

கையாந்தகரை, நெருஞ்சிவேர், சங்கம்வேர்ப்பட்டை, நீர்முள்ளியிலை வகையொன்றுக்கு ரெண்டுபலம், மிளகு ½பலம்-இ, முடிஞ்சு போடவும். அரைநாழி நீர்விட்டு மருந்தும் போட்டு மிளகுப் பொட்டணமும் போட்டு இருநாளியாக வத்தவிட்டு ரெண்டு பொழுது ரெண்டு நேரம் உள்ளுக்குக் குடிக்கவும்.

வீக்சத்ரக்கு

நீலிச்சாற்றில் ஆழாக்கு சாறு பிழிந்து கால்ப்பலம் மிளகு பொடிபண்ணி ஆளுக்குத் தக்கனை பொடி போட்டுக் கொடுக்க சகல வீக்கமும் சகல வண்டு கடியுந் தீரும்.

இரத்த பித்தத்துக்கு மருந்து

சீந்தித்தண்டு மேல்ப்புரணி சீவிப்போட்டு சிறுக அரிந்து உரலில்ப்போட்டுத் துவைத்துத் தண்ணீரில் போட்டுப் பிசைந்து வடிகொண்டு [illegible] புத்தோட்டில் வைத்தால் சர்க்கரையும். யிதில் ~~[illegible]~~ விலாமிச்சம்வேர், சீரகம், இலவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, செங்கழு-நீர்க்கோட்டம், நெல்லிப்பருப்பு, நிலப்பனைக்கிழங்கு, சுக்கு, ரேணுகம், பேரிச்சம்பழம், குங்குமப்பூ, நாகேசுரம், தாமரைவளையம், தாமரைப்-பூவரிசி, பச்சைக்கற்பூரம், பச்சை வெட்டுச் சந்தனம், திப்பிலி, மிளகு, அதிமதுரம், நெல்பொரி, சாதிக்காய், அமுக்கிறாங்கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, நெருஞ்சிக்காய் இவையெல்லாஞ் சமன்கூட்டி ரெண்டு கூறு அமுர்த சர்க்கரையுங் கூட்டி வஸ்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு இதற்கு அனுப்பானம் பசுவிநெய்யிலாகுதல், தேனிலாகுதல் கொடுக்க ரத்தபித்தம், சயரோகந் தீரும். இச்சா பத்தியம் கடைபயுக்கவேண்டும்

சகல வியாதிக்கும் அமுர்தாதி சூரனம்

சாதிக்காய், சிறுநாகனிடை-4, கிராம்பு, சீரகம், மாச்சக்காய்,

சாதிபத்திரி, அதிவிடையம், அக்கிராகாரம், கோஷ்டம், ஏலம், வால்மிளகு, சுக்கு, திப்பிலி, நெல்லிப்பருப்பு, மாளந்தோடு, வில்வத்தோடு, புளியம்விரைத்தோடு, சிறுநாகப்பூ, பற்படாகம், கச்சோலம், சடாமாஞ்சி, ஓமம், குரோசாணி ஓமம், சன்னலவங்கம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, செண்பகப்பூ, குங்குமப்பூ, கோரோசினை, அதிமதுரம், கஞ்சாப்பொடி, அபின்மருந்து, இதுவகைக்கு விராகனிடை-4, இளவருப்பாய் வருத்துப் பொடி செய்து அந்தப் பொடியைச் சட்டியில் சீலை வடிகொண்டு அனுபான விசேஷத்தில் இடவும்.

உட்புண்ணுக்கு

நீர்ப்பூலா வேரும் வில்லை வேரும் விஷ்ணுகிரந்திவே ரிம் மூன்றுங் கஷாயம் வைத்து மேல்ப்பொடி வெருகடிஅளவு போட்டுக் கொடுக்க தீரும்.

வாய்வுக்கு

முக்குறட்டை வேரும் முடக்கணத்தி வேரும் கஷாயமிட்டு இந்தப்பொடி (மேற்கூறியபொடி) போட்டுக் கொடுக்கவும்.

அதிசாரங்கண்டால்

அவரைப்பிஞ்சு, மூல கஷாயத்தில்க் கொடுக்கவும். இச்சா பத்தியம். பண்ணிக் கொள்ளவும்.

கிரந்தி சூலை வெட்டை வாதத்துக்கு

பரங்கிப்பட்டை வேண்டியது கொண்டுவந்து முசுமுசுக்கைச்சாறு, கரிப்பான்சாறு யிதிலே யூறவைத்து நிழலலர்த்தி வஸ்திரகாயம் பண்ணிப் பசுவின்பால் தெளித்து உதரப்பிடித்து பாணைக்குள்போடு மருந்து.

துத்தம், துருசு, சாம்பிராணி, குங்கிலியம், சூடன், துத்தநாகம், சாதிலிங்கம், ரசம், இவ்வளவுஞ் சமனா யெடுத்துப் பொடி செய்து பாணைக்குள்ளே போட்டுப் பொடியைக் குழிபண்ணி ரசம்விட்டு பாணைக்குள் தண்ணீர்விடாமல் பொடியை மாத்திரம் வைத்து வேடுசட்டி வேட்டின் மேலே சட்டி கொண்டு மூடி ரட்டை சீலைமண் செய்து அடுப்பேத்தி ஒரு விறகு கொண்டு கமலாக்கினியாக யெரித்துப் போட்டு வேகிற பதம் உள்ளே போட்ட பொடி சலசலப்பு யேறச் சலம் வந்தவுடனே யிறக்கி வைத்துக் கொண்டு

...33

ஆறவிட்டு யெடுத்து அபைப்பாலம் நெய்யில்க் குழப்பிக் கொள்கிறது. அதில்ச் சூடு கொண்டால்ப் பசுவின் நெய்யில் கொள்ளுகிறது. பத்தியம் - வேண்டினது கூட்டிக் கொள்ளுகிறது. அவபத்தியம் தள்ளிப் போடுகிறது. அரை மண்டலம் வெருகடிப் பிரமாணம் சாப்பிடுகிறது. தீருமென் சொல்லப்பட்டது.

மேகவெட்டைக்கு மருந்து

பாசிப்பயறு -படி-இ, குமரிச்சாறு - யிருக்க வகை - பச்சை நெல்லு உம்போட்டு நன்றாய்ப் பிசைந்து கொண்டு வடிக்கச் சாறு வரும். அந்த சாற்றிலூ றப் போட்டு மறுநாள்ப் பார்க்க முளை காணும். பிறகு நிழலுலர்த்தலாக உலர்த்தி வைத்து சிறுக்கீரைவேர் படி இ பதமாய் நிழலுலர்த்தவும்.

நற்சீரகம் -பலம்-1 மூன்றும் நன்றாய்த் தூள் பண்ணி யிதுகண்ட யிடைக்குப் பாதி சர்க்கரை கூட்டித் தின்ன மேகந் தீரும். வெருகடியளவு உண்ணவும். கைகண்ட வுக்து.

பித்த மயக்கத்துக்கு

வெருகங்கிழங்கு கொண்டு வந்து மேல்த்தோல் போக்கி நருக்கிப் பச்சை அரிசிக் கழுநீரில்ப் போட்டுக் கஷாயம் வைத்துக் கொடுக்க பித்த மயக்கந் தீரும்.

அதி சாரத்துக்கு

கோஉஷ்டம், அதிமதுரம், நெல்லிப்பருப்பு, இலாமிச்சம்வேர், நல்லமலர்க்கை சந்தனம், கோவைக்கிழங்கு,நெல்பொரி யிவைநீர்நாளி யிதைப் பாதியாய்க் காச்சி உள்ளுக்குக் கொடுக்க நாலுவகைக் கழிச்சலும் நிற்கும்.

தாகம் நிற்க

சுக்கு, கடுக்காய், கொத்தமல்லி சேவுகனார் வேர் வகைக்கு விராகனிடை-கஇ கூட்டி இருநாளித் தண்ணீர்விட்டு அரைப்படியாகக் காச்சிக் கொடுக்கத் தாகம் நிற்கும்.

உஷ்ணத்துக்கு

பூமிச்சக்கரைக் கொழுந்து அரைத்து எலுமிச்சங்காயளவு பசுவின்பாலிலாகுதல் இளவெந்நீரிலாகுதல் கொடுக்கவும். உஷ்ணம் நிற்கும்.

பயித்தியத்துக்குப் பஞ்ச பாஷாணம்

ஏலங்கிராம்பு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கஸ்தூரி மஞ்சள், சிறுநாகப்பூ, சடாமாஞ்சி, நாகேசுரம், கற்பூரசிலாசத்து, கள்ச்சிப்பருப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, அதிமதுரம், கஞ்சாவிரை, முந்திரிகைப்பழம், பேரிச்சம்பழம், யிந்த ரெண்டு பழமல்லாமல் மற்ற மருந்தெல்லாம் இளவறுப்பாய் வறுத்து சூரணம் பண்ணி இந்தப் பழ மருந்து கண்டயிடைக்கு சமனாகச் சர்க்கரை கூட்டி காலமே மூன்று விரல் அளவு ~~கொண்டு~~ கொள்ளவும். கார்ப்பும் புளிப்பு தவிரவும்.

விக்கலுக்கு

புற்றுமேல் நிற்கின்ற வீழிவேர்ப்பட்டை கொண்டு வந்து அரைத்துப் பசுவின்பாலில் மூன்றுநாள்க் கொடுத்து ஆறுநாள் பத்தியங் கார்க்கவும்.

வண்டுகடிக்கு

வீழியிலையை வாய் பேசாமல் கொண்டு வந்து துவைச்சுப் பசுவின் பாலில் பிழிந்து மூன்றுநாள்க் கொடுத்து ஆறுநாள் பத்தியங் கார்க்கவும். எந்த வண்டுகடியும் தீரும்.

பிள்ளையுண்டாக

கொம்மட்டி, மாதளம்விரை யெலுமிச்சங் காயளவு அரைத்து மூன்றுநாள் திண்ணவும். அரசின் மேல் புல்லுருவி மூன்று நாள்த் திண்ண பிள்ளையுண்டாகும்.

வயற்றுக் கடுப்புக்கு

சுக்கு -பலம்-இ, கடுக்காய்த் தோடு -விராகனிடை-1, தான்றிக்காய் -விராகனிடை-1 சீரகம் -விராகனிடை-வ, கிராம்பு-விராகனிடை-5 கடுக்காய்ப்பூ -விராகனிடை-1, அதிமதுரம் -விராகனிடை-1, கருவேப்பிலை ½ -விராகனிடை-இ, சாதிக்காய் -விராகனிடை-உ, சாதிபத்திரி ½ -விராகனிடை-இ, அதிவிடையம் ½ -விராகனிடை-இ, மாதளந் தோடு -விராகனிடை-1 இவையெல்லா மிளவறுப்பாய் வறுத்துப் பொடிபண்ணி அதுக்கு மேல் சிறுதேக்கு கஷாயம் போட்டு அந்தக் கஷாயத்தில் அந்தப் பொடியை அரைத்து அடைதட்டிச் சுடவும். ~~அப்படி வழுதிரங் கஷாயம் விட்டு அரைத்து நெய்யிலாவது எண்ணையிலாவது~~ முழுகாமல் அடை சுடவும்.

அப்படி எழுதிரங் கஷாயம் விட்டு அரைத்து நெய்யிலாவது என்னையிலாவது முறுகாமல் அடை சுடவும். மறுபடி அந்த அடையின் கூட ஒரு வீராகனிடை அபின் கூட்டி அந்தக் கஷாயத்திலரைத்து 1/2 வீராகனிடை-இ உன்டை பண்ணி தயிர் நீர் வடித்ததில்க் கொடுக்கவும்.

பிள்ளையுண்டாக

உரலுலக்கைச் சத்தங் கேளாத வீட்டிலே யிருக்கிற துத்தியிலையில் மூணுபடியிலை வாய் பேசாமல் பரித்து வந்து குருவை நெல்லரிசியிலிடித்து வைத்துக் கொன்டு இந்த மாவில் மூணுபிடி தின்று மத்தமாவை உப்பு போடாமல் களிக்கிண்டி பிறகு கொடுத்து சாப்பிடவும். சாப்பிடும்போது நல்லெண்ணை விட்டு சாப்பிட்டால் பிள்ளை யுண்டாம்.

செற்பப் புழு விழ

புரசம்விரையைப் பொடி செய்து தேனில் கொடுக்கப் புழு விழும். நிசம்.

கையான்தகரை காலில் தேய்ச்சு கழுவி வரவும்.

கன் புகைச்சலுக்கு

கையான்தகரைச்சாறு நாளி, என்னை -நாளி, பால்-நாளி, அதிமதுரம் -பலம்-1 அரைத்துக் கரைத்து வடித்துத் தேய்க்க புகைச்சல் தீரும்.

அதிசாரத்துக்கு அதிசாரக் கடுப்புக்கு

நெல்லியீர்க்கு, புளியீர்க்கு, மட்டைக்குருத்து, ஆவிரைவேர் வகைக்கு ஒரு பிடி ஈரவெங்காயம் - உழக்கு, விளாம்பசின் நாலுபிடி தண்ணீர்விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி கிராம்பு மரைத்துக் கொடுக்கவும். தீராத கடுப்பு தீரும்.

மிளகு -வீராகனிடை- 3 பொரிச்சடைத்து பசுவின்பால் படி இரண்டு விட்டுக் காய்ச்சி ஆழாக்கு ஆனதும், மேலதுக்கு மிளகு வீராகனிடை- 1 அரைத்துக் கலந்து கொடுக்கவுந் தீரும். கைகன்டது.

தேளுக்கு

காட்டுக் கரணைக் கிழங்கு எருக்கம் பாலிலூறப்போட்டு

அரைத்துப் போடவும். நிற்கும்.

<u>காமாலை, சோகை, பித்த பான்டுவுக்கு</u>

வெள்வெங்காயம் -பலம்-1, கடுக்காய் -பலம்-1, மிளகு-பலம்-½, கடுகுரோகணி -விராகனிடை-2, அடிசக்காந்தம் -விராகனிடை-உ, கல்நார் -விராகனிடை-உ, திர்துப்பு-விராகனிடை-உ, மகரம்பு-விராகனிடை-உ, கரிப்பான் சாறு -படி-1, அதிமதுரம் -விராகனிடை-உ, யெலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்துப் பெரிய கரண்டியிலிட்டு சக்கரையும் போட்டுக் குழப்பிக் கொதிக்க வைத்துப் படுத்த படுக்கையில் மூன்றுநாள் கொள்ளவும். கைப்பு, புளிப்பு தவிரவும்.

அக்கிக்கு மருந்து

நல்லெண்ணையும் கூரிய சுண்ணாம்பும் குழப்பித் தடவித் தீரும்.

சத்தி குன்மத்துக்கு

நாயுருவி இலையை எலுமிச்சங்காயளவு அரைத்து பாலில் குடிக்க நிற்கும். பாக்களவு அரைத்து எலுமிச்சம் பழச்சாற்றில் கொடுக்க நிற்கும்.

அண்ட வாதத்துக்கு

இலுப்பைப் புண்ணாக்கு எலுமிச்சங்காயளவு அரைத்து இளவெந்நீரில் குடிக்க நிற்கும்.

குப்பைமேனி வேரரைத்துத் தேங்காய்ப் பாலில் கொடுக்கவும். நிற்கும்.

பின்னும் - வெள்ளைப்பூண்டு -விராகனிடை-20, ஓமம்-விராகனிடை-20, நாலுபடி தண்ணீர்விட்டு நான்கிலொன்றாகக் காச்சி விளக்கெண்ணெய்-படி-1 விட்டு அதில் முடக்கத்தான்வேர் எலுமிச்சங்காயளவு அரைத்துப் போட்டு தண்ணீர் வற்றக் காய்ச்சி எண்ணை வடித்து உள்ளுக்கு ஒருசின்னக் கரண்டியளவு கொடுக்கவும். தினம் சாப்பிடவும். நோய் தீரும்.

<u>திமிர் வாதத்துக்கு</u>

எட்டிப்பழச்சாறு-குறுணி, காடிபதக்கு, எலுமிச்சம்பழச்சாறு-நாளி இது மூன்று வகையும் -இதில் விடுகிற எண்ணை நல்லெண்ணை விளக்கெண்ணை நெய் இது மூன்று வகைக்கும் வகைக்குப் படியொன்று முன்மருந்து கூடவிட்டு அடுப்பில் வைத்து மெழுகு பதத்தில் வடித்து எட்டிவிரை காடியிலூறப்போட்டு

இடித்து காயவைத்து அரைப்படிதூள் கூடப்போட்டு மெழுகு பதத்தில் வடித்து யிறக்கவும். இந்தத்தையிலம் உடம்பில் சர்வாங்கமும் போடவும். திமிர் வாதந் தீரும்.

முதல்நாள் எண்ணையிட்டுத் தலை முழுகிப்போடவும். மறுநாள் காட்டுமுள்ளிங்கி கொண்டு வந்து வைத்துத் துவாலையிடவும்.

நெஞ்சு நோக்காட்டுக்கு.

சுண்டைவேர், சண்டங்கத்திரிவேர், பொடுதலைவேர், குழிமீட்டான் வேர் கல்மதம், ஓமம், பசுவின் நெய்யில் வேக வைத்து கொடுக்கவும். நெஞ்சு நோக்காடு தீரும்.

மூலத்துக்கு மருந்து

சாதிக்காய் -விராகனிடை-1, அபினி ஒரு பணவிடை, பெருங்காயம் -பணவிடை-1, சுக்கு -பணவிடை-3, கிராம்பு -பணவிடை-5, பூண்டு -பணவிடை-3 இவையெல்லா மரைத்துக் குளிகை திரட்டி ஒருகுளிகை பசுவின் மோரில் கொடுக்கத் தீரும்.

பிள்ளையுண்டாக

புளிமணடலைக் கிழங்கு கொண்டு வந்து மேல்த்தொலி உரித்துக் குருவை நெல்லரிசியிலிடித்துக்களிக் கிண்டி கருப்புக் கட்டி கடித்துக் கொண்டு எருமை மோரில் திண்ணவும். பிள்ளையுண்டாகும்.

ஆலம் விழுது தனியரும்பு அரைத்துப் பசுவின் பாலில் குடிக்கப் பிள்ளையுண்டாகும்.

கரப்பான் வண்டுகடிக்கு மருந்து

விளக்கெண்ணை -படி-4, கருஞ்சீரகம்-பலம்-5, கஸ்தூரி மஞ்சள் பலம்-2, அதிமதுரம்-பலம்-1, செண்பகப்பூ -பலம்-உ, பெருநளைவேர் -பலம்-3, ஈரவெங்காயம்-படி-1, வில்லைப்பட்டை-பலம்-2 இது வெல்லாங் கூட்டி யிடித்து விளக்கெண்ணையில் போட்டு சூரிய புடமாக வைத்து மறுநாள் குடிக்கவும். வயறு கழிஞ்சால் கஞ்சி குடிக்கவும். உஷ்ணமானால் அதிமதுரஞ் செண்பகப்பூ, லவங்கம் சமன்கூட்டி வெந்நீரில் குடிக்கவும். நிற்கும். புண், குஷ்டம் கரப்பின் வண்டுகடி தீரும்.

குடிப்பதற்கு முன்னே தலை முழுகவும். பின் சாப்பிட்டு நாலு நாட்களுக்கு ஒருக்கால் தலை முழுகவும்.

பத்தியங் சார்ப்பு புளிப்பு தவிர்க்கவும்.

கண்டமாலை கிரந்தி புண்ணுக்கு

அப்பைக்கிழங்கு, செங்கத்தாரிப்பட்டை புளிநடலைக்கிழங்கு, சிற்றவரைக்கிழங்கு, சிறுகொறட்டை, மனத்தக்காளிவேர், கொன்னைப்பட்டை, கொடிவேலிவேர், மிளகரணைப்பட்டை இதல்லாமல் அரத்தை, பூதகரப்பன் கருங்குங்கிலியம் உள்ளி, வசம்பு, வெளிச்சிப் பிசின், நல்லெண்ணை உரி - விளக்கெண்ணை - உரி பசுவின்நெய் -உரி, இந்த மூன்று வகை எண்ணையுங் கூடக் கலந்து அந்த மருந்தெல்லாமரைத்துக் கலந்து பதத்தில் வடித்து உச்சி முதல் புறங்காலளவுந் தடவவும். ரெண்டு காசளவு உள்ளே கொடுக்கவும்.

அரத்தையும் பூதகரப்பான் பட்டையுமரைத்துக் கரைத்துக் கொடுக்கவும். கிரந்தியோடே சேர்ந்த முன்னூற்றிருபது வியாதியுந் தீரும்.

வெள்ளெழுத்துக்கு

வெள்ளைச் சாக்கணம் வேர், நல்லெண்ணையில்க் குழப்பிச் கண்ணில்விட வெள்ளெழுத்து மாறும்.

பல் அசைவுக்கு

புளியம்பொழுக்கு எடுத்துவந்து எண்ணையில் எரியிட்டுப் புகைக்கப் பல்கிட்டி விடுமே.

குப்பைமேனியிலையும் சுக்கும் மிளகுமரைத்துப் பாகமாறி அடைக்கி மிஞ்சினதை முழங்காலித் தடவியிருக்கவும். புழுவிழும்.

கீரிப்பூச்சி விழ

நல்ல முசுட்டை கொண்டு வந்து துண்டு துண்டாய் நறுக்கிப் பதக்குத் தண்ணீர் விட்டு உரியாகக் காய்ச்சிக் காலமே கொடுக்கப் புழுவிழும்.

வயறுகடுப்புக்கு

சூரையிலை அரைத்து அறுபது நாளிகை தயிரில்க் கொடுக்கவும்.

ா பற்படாகமுங் கிழுவை வேருமரைத்து நாற்பது நாளிகை தயிரிலக் கொடுக்கவும்.

சகலகணைக்கும்.

கூத்தங்குதம்பை வெள்ளைத்தண்டாய் இருக்கிறவேர் பிடுங்கி அரைத்துப் பச்சை விளக்கெண்ணையிலக் கொடுக்கவும். தீரும் கைகண்டது.

உள்மூலம் புறமூல வாய்வுக்கு

கலிச்சிப் பருப்பு -30, கடுக்காய், ஓமம், நெல்லிக்காய், கெந்தகம், சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம், இந்துப்பு, சீனக்காரம், பொரிகாரம், நவச்சாரம், நற்சீரகம், கருஞ்சீரகம், காந்தம், வசம்பு, சித்திரமூலம், பூடு வாய்விளங்கம் ஓரொன்றுக்கு பலம்-உ இவை சேர இளவருப்பாய் வறுத்துப் பொடி பண்ணி வொன்றாய் கரைத்துத் தண்ணீர்படி-இ பசுவின்பால்ப்படி-இ, பசுவின்கோமியம்படி-இ, ஒரு தேங்காய் உடைத்துத் துருவினதோடே இந்தக் கோமியமெல்லாம் விட்டுக் காச்சி யிறுகி வருகிறபோது முன்சொன்ன பொடியைப் போட்டுக் கிண்டிக் குழம்பாகக் காச்சி இறக்கவும். மத்தனாளெடுத்து வைத்துக் கொண்டு மற்றநாள் ஒரு சுண்டைக்காயளவு பசுவின் நெய்யிலக் குழப்பித் தின்னவும். முன்சொன்ன வியாதிகள் தீரும்.

வல்லாரைநெய்

வல்லாரை சமூலமுந்து துவைத்து சாறுபடி-ரு பசுவின்பால்ப்படி பழங்காடி -படி-உ, பசுவின்நெய் -படி-1 இதுசேரக் கலந்து அதிமதுரங் கோஉத்டம், செங்கழுநீர்க் கிழங்குவெந்திவேர், அவுரியிலை, கோரோசினை, நல்ல கற்பூரம் ஓரொன்றுக்கு நாற்களஞ்சு கூட்டிப் பால்விட்டரைத்து மூனுநாள்க் சிறுகொதியிட்டு நாலாநாள் வடித்துக் காலமே துட்டிடை நெய்கொள்ள கைகா வடம்பெரிவு, வாய், நாக்கு, நெஞ்சுவலிக்கிறது, உள்க்காச்சல், யீளை, யிருமல், மருந்தீடு உடனே தின்ற நஞ்சுகளுக் கெல்லாமாகும். உடம்பு யிளைத்தால் பருக்கும். இது துரைகளுக்குப் பண்ணிக் கொடுக்கவும்.

சிறுபிள்ளைகள் கிராணிக்கு
பொன்முசுட்டை நெய்

பொன்முசுட்டைவேர், கொடுவேலிவேர்ப்பட்டை, மாதளம் வேர்ப்பட்டை

மாதளை பழத்தோடு, அதிவிடையம், கோஉஷ்டம், தேவதாரம், திப்பிலிமூலம், சுக்கு, திப்பிலி, ஆனைத்திப்பிலி, வாலுளுவை அரிசி, மஞ்சள், மரமஞ்சள், யிலந்தைப்பட்டை, வெப்பாலையரிசி, அரத்தை, ஓமம், ஏலம், சிற்றேலம், கடுகுரோகணி, பேய்ப்புடோல், இலவங்கப்பத்திரி, மிளகு, வகை ஒன்றுக்கு விராகனிடை- 1 கூட்டி பால்விட்டரைத்து ஒருபடி நெய்யும் ரெண்டுபடி பாலும் கலந்து ஒரு காசிடை, ரெண்டு காசிடை பிலமறிந்து கொடுக்கப் புழுபோம். உடம்பு பருக்கும்.

காதில் சீழ் விழுகிறதுக்கு

எருக்கலம் பழுப்பு, மஞ்சள், வெங்காரம், சுக்கு, மிளகு, வசம்பு யிதெண்ணையில் கொதிக்க வைத்துச் செவியில் வார்க்க உடனே நிற்கும்.

எலிக் கடிக்கு

அமுக்கிறாவேர் எலுமிச்சங்காயளவு அரைத்துப் பாலில் குடிக்க பதினெட்டு எலிக் கடியுந் தீரும்.

வருவுக்கு

நல்லெண்ணை, வசம்பு, மிளகு, பூடு, மாவிலிங்க மிலை, குண்டுமணியிலை, வெத்திலைக்காம்பு பதமாய் - யெரித்துத் தடவத் தீரும்.

குப்பைமேனியிலை வாய் பேசாமல் பிடுங்கிக் கசக்கிப் பெருங்காயமும் வைத்து இடமானால் வலது புறத்திலும் வலமானால் இடது புறத்திலும் கால்மாறித் தெலசித் தேய்க்கவும்.

நரம்புச்சிலந்திக்கு

ரசமுங் குப்பைமேனிச்சாறும் விட்டு மத்திச்சுப் புண்ணில் போட்டு வெத்திலை வாட்டி மேலே போட்டுக் காட்டவும். தீரும். மறுபடி களிம்பு போடவும்.

பீனிசத்திற்கு

சீந்தித்தண்டு, வட்டதுத்தி, தூதுவிளை, சிவனார்வேம்பு, நிலப்பனைக்கிழங்கு, பொன்னாங்காணி, நிலக்குமிள்வேர், சீதேவியார் செங்கழுநீர், தாமரைவளையம், சிற்றாமல்லி, பேராமல்லி, முத்தக்காசு, வகைக்குச் சாறுழக்கு இந்தச் சாறு கண்ட அளவுக்குப் பசுவின்பால் விட்டு

அஞ்சுரன்டாய்க் காச்சிப் பிழிந்து கொள்ளவும். சதாயம் ஆறின பிற மசுவின்நெய்படி 1இ நல்லெண்ணை படி- 1இ, வேப்பம்பட்டைச்சாறு படி- 1இ இவ்வளவுக்குங் கடைமருந்து -சுக்கு, திப்பிலி, மிளகு, கோஉஷ்டம், ஏலம், அதிமதுரம், வசம்பு, பூண்டு கற்கடகசிங்கி, நெல்லிப்பருப்பு, இருவேலி, கிராம்பு, வசுவாசிகிளியூறல்ப்பட்டை கன்றில் வெண்ணை தற்கோலம், ஓமம், கச்சோலம், கருஞ்சீரகம், கொத்தமல்லி, குக்கில், சடாமாஞ்சி, அரத்தை, கடுகுரோகணி இதுவெல்லாம் வகைக்கு- இ இவ்வளவும் இடித்து வஸ்திரகாயம் பண்ணி மெழுகுபதத்தில் வடித்து இறக்கி உள்ளுக்கு சாப்பிடவும். வங்க பற்பம் போடவும்.

சாமாலைக்கு

யேரண்டங் கொழுந்தும் பிஞ்சும் ரெண்டு விராகன் சீரகம் அம்மியில் வைத்து பசுவின் தயிர்விட்டரைத்து உன்டை பண்ணி கீழ்மேலுநீ தயிர்வைத்து நடுவே மருந்து வைத்து ஒன்று உருண்டை கொடுக்கவும். உதைய காலத்தில் மூனு நாள் கொடுக்கவும். பத்தியம் -உப்பில்லாமல்த் தயிருஞ் சாதமுங் கொடுக்கவும். ஆறுநாள்ப் பத்தியம். ஏழாநாள் விளக்கெண்ணை தேய்த்து முழுகிப் போடவும். குணமாகும்.

மேவெள்ளை காணுகிறதுக்கு

சுண்ணாம்புக்கல் ஒருபடி கொண்டு வந்து புதுக்கலயத்தில்ப் போட்டுத் தண்ணீர்விட்டுச் சுண்ணாம்பானதின் பிறகு அந்தத் தெளிவுத் தண்ணீரில் ஆழாக்கு நல்லெண்ணை விட்டுக் கொடுக்கவும் தீரும். இச்சாபத்தியம்.

பெரும்பாட்டுக்கு

கருத்த எள்ளு -படி- 1, காவிக்கல்-பலம்- 3, கருப்புக்கட்டி- பலம்-சாஇ இந்த மூன்றும் அரைத்து உன்டை பண்ணி இரண்டு வேளையுஞ் சாப்பிடவும். மிளகாய் நீக்கி யிச்சா பத்தியம்.

வெகுமூத்திரத்துக்கு

ஆவாரை அரிசியும் சீரகமும் ரெண்டுங் கலந்து பிட்டவியலாக அவித்து அதை அம்மியில் வைத்து தயிர் வார்த்தரைத்து கீழு மேலும் தயிர் வைத்து மூனு உன்டை வீதம் ரெண்டு வேளையுங் கொடுத்து வரவும்.

மஞ்சள்க் காமாலைக்கு

சங்கு பொடிபண்ணி அரைத்து எலுமிச்சங்காயளவு கீழ்காய் நெல்லி வேரரைத்து அந்த அளவு பசுவின் பாலில் கொடுக்கவும். பத்தியங் கார்க்கவும்.

உள்மாந்தைக்கு

ஏலம்-பலம்-வ், கிராம்பு-பலம்-வ், அதிமதரம்-பலம்-உ, செஞ்சந்தனம்-பலம்-4, கடுக்காய்-பலம்-4, சாதிக்காய் -பலம்-1, சாதிபத்திரி -பலம்-உ, ஈரவெங்காயம்-பலம்-இ, இதுவெல்லாங் கூட்டி பொடிபண்ணி எண்ணையில் போட்டு அடுப்பில் வைத்து மெழுகுபதத்திலிறக்கி கிண்டி ஏழுநாள் ஒன்பது நாள்க் சாப்பிடவும். துவாலை போடவும்.

தலைச்சுருளி சமூலம் இடித்துச் சிறுநீரில்ச் குழப்பித் தின்னவும். ~~போடவும்.~~ மூன்று நாளைக்கு ஒருக்கால் தாளைச்சாறு கொண்டு வந்து வேது விட்டுக் குளித்துப் ~~போடவும்~~ இடவும். புகை தவிர்க்கவும்.

பவுந்திரத்துக்கு

சீந்தித்தண்டு நன்னாரிவேர், விடத்தலைவேர் ~~இதுவெல்லாம்~~ இவைகளெல்லாம் ஓரொன்றுக்கு ஒரு எலுமிச்சங்காயளவு அரைத்து நாழி பசுவின் பாலிலேயும் நாளி வெள்ளாட்டுப் பாலிலேயும் வேக வைத்து எல்லாங் கூட்டி வைத்து மெழுகு பதத்திலே வடித்துச் கொண்டு பத்து நாளைக்கு அந்தியுஞ் சந்தியும் ஒருநாளொன்றுக்கு மூன்று கழஞ்சி மரியாதி உள்ளுக்குச் கொள்ளவும்.

புண்ணுக்கு அப்பால் மூன்றுநாள் வெள்ளறுகு வேரரைத்துப் பூசவும். பத்தியம்-உப்பு, புளி தவிர்க்கவும். முருங்கைப்பிஞ்சு, கீரைத்தண்டு, துராக்கருவாடு, வெள்ளாடு, முசல்ப்புழுக்கை தள்ளி கறி கூட்டவும். உப்புக்கண்டம்-பசுவின்நெய் வென்னீரில்ச் சூட்டவும் தீரும்.

கரணை கரையச் சுட்டும் மருந்து

சுண்டையிலை கொண்டுவந்து இடித்துக்கொண்டு வெள்ளைக்கல்லும் வெள்வெங்காயப் பிரமாணம் ஒருவிறகில்த்தானே யெரியிட்டு சீலைவாயில் வைத்து மருந்து வைத்து அதிலே கல்லும் வைத்து மருந்திடவும்.

அரைப்புக்கட்டிக்கு -ஆதளம்பால் நல்லெண்ணையில்க் கூட்டி அரைத்து சீலையிலூட்டிப் புண்ணில்ப் போடவும்.

33

...43

தூதுவளைச் சற்பம்

எருமைத்தயிரில்க் கொள்ள எலிக்கடி தீரும்.

எருமைக் கோமியத்தில் கொள்ள குளிர்ந்த தண்ணீரில்க் கொண்டு கடி வாயில்ப்பூச செய்யான்கடி தீரும்.

விளக்கெண்ணையில்க் குழப்பிக் குடித்து கடிவாயில்ப் பூச தேள்விஷம் தீரும்.

குப்பைமேனிச் சாற்றில் குடித்து கடிவாயில்ப்பூச தேள் விஷந் தீரும்.

உப்பிலிச் சாற்றில் ஆண்கட்டு காடியுடன் கொடுக்க உடம்பு எரிப்புத் தீரும்.

வேப்பஞ்சாற்றில்க் குடிக்க ஒடுவை தீரும்.

புளியிலைச் சாற்றில் குடிக்கவும் பித்த மயக்கந் தீரும்.

பதினெட்டு வகை எலிக்கடிக்கும்

வரகரிசி நனையப் போட்டு பிரான்பட்டை வடக்கு போறவேர் வெட்டிவந்து மேல்ப்பட்டையும் வெட்டி அரைப்படி அரிசியிலிடித்துப் பச்சை மாவிலேயுந் தின்னவும். மறுபடி புட்டாகிலுங் கொழுக்கட்டையாகிலும் அரைவாசி வெந்தபிறகு எடுத்து ரண்டு தேச காலம் மூன்றுநாள் அஞ்சுநாள் சாப்பிடவும். உப்பு புளிப்புகை தவிர்க்கவும். பத்தியங் காக்கத் தீரும்.

வலிப்புக்குஞ் சன்னிக்கும்

வேலாயுதஎண்ணை

ஊசிக் காந்தம் மடல்துத்தம்
உயர்நெல் லிக்காய் கெந்தகமும்
பேசிய சிஉத்ண அப்பிரகம்
பொரிகா ரஞ்சாதி லிங்கம்
வாசிப் பொன்னி னாரிதாரம்
வகையோர் களஞ்சு தான்பொடித்து
பூசிச் சீனி தனில்திரித்துப்
புகழே ரண்டத் தெண்ணையிடே

என்னை உழக்கில்த் தரிகொழுத்தி
    யிசைந்த சுடரி யென்னைதனை
உன்னப் பணவிடை நாள்மூன்று
    உகந்த கடுகை மேல்த்தடவி
பன்ன கையில் வாள்மூன்று
    பணவிடை மெய்யில்த் தான்முறுக்கி
நண்ணாய்ப் பிடித்துப் புங்கின்பட்டை
    நன்றாய் வேது கொளித்திடுமே.

இடவே சன்னி பதினெட்டுநு
    இசைந்த வர்த சுரசன்னி
படவே பித்த சன்னியுடன்
    பகர்ந்த காக்கை வலிப்புடனே
தொடவே ஓமர கண்டமுடன்
    துடர்ந்த அமர கண்டனுமே
அடவே கெட்ட வலிப்பெல்லாம்
    அலறுங் கடலே செதியென்றே

34 பாம்பே மேனா மலை

சந்தனாதி தைலம்

நூல் அகவல்

தேசிக ரருளால்ச் சிவனமதீ உரைத்தப்
பேசிய சந்தனப் பெருந்தயி லத்தை
வாசமாய்ச் சொல்ல வயித்தியர் கேளீர்
பொன்னாங் காணி பொறுஞ்சிறுக் கீரை
மின்னார் தாழை விழுதுட னாவாரை
சிற்றா முட்டி சீரா செங்கழுநீர்
முடக்கொத்தான் கொட்டிப் பூவுட னவுரி
கோவைச் சாறுடன் கொடிமுன்னை முசுட்டை
தரிவிய குருவீச்சுத் தாமரை வளையம்
தென்னம் பாளை சிறியதோர் நங்கை
அன்னையர் குழவி அனமா விச்சும்
ஆடுதின்னர்ப் பாளை அருநெல்லிக் காயுடன்
[illegible] வகையொரு படிசார் வளம்பெற யெடுத்துத்

தகையவே காய்ச்சித் தாழியி லிட்டுத்
தகைபதச் சாகத் துனிதனி லிறுத்துத்
திரிகடுகு ரோகணி சிறந்திலுப் பைப்பூ
குறுசிய சிராம்பு கூவிளை கோஉஷ்டம்
இலவங்கத் தோடு யிலாமிச்சம் வேரும்
மலையதி விடையம், மஞ்சிட்டி, மசிளம்
நல்ல சந்தனம் நலச்சிறு னாகம்
ஓலைப் பூவுடன் ஒருபலம் வகைக்கு
வளமா யிடித்து வங்குடி நீறிடு
குலமாம் பசுநெய் கூட்டிரு படிதான்
நல்லதோ ரெண்ணை நாலிரு படிசேர்
மெள்ள வெறித்து மெழுகுபதத் திறக்கி
புழுககாடு சட்டம் போட்டிடு நாவு
பழுது படாமல்ப் பத்திரில் வடித்து
முழுகிவா நீயும் மூன்றொரு நாளில்
தீரும் பிணிகள் செப்பவுங் கேளு
சோருந் தலைவலி சூடுகண் னோவு
பாரும் நயனம் படர்ந்ததோர் காசம்
காமலை சோகை கண்குஉஷ்டம் பாண்டு
சிரசினிற் குத்துச் சீர்மேக வெட்டை
குலையினி லிருமல் கொடிநீர்ச் சூலை
பேசு காபலம் பெருத்ததோர் சூலை
நாசியில் ரத்தம் நல்வெட்டைச் சாச்சல்
போசிய குன்டநோய் பிணிபல சுரமும்
தாசிய மேலி தாழ்ந்ததோர் வெக்கை
பழைய தலைவலி பக்க வலியுடன்
களையற உடல்நோய் கருதிடிற் போகும்
மனிதனைத் தவிர்க்க மாயவ னருளால்
தகையது பெரியவர் சொன்னது வாமே.

அஸ்திக்கு அரக்கெண்ணைத் தயிலம்

சிற்றாமுட்டி, பேராமுட்டி, அமுக்கிறாவேர், வில்வவேர்,

சீந்திக்கொடி, கோரைக்கிழங்கு, பொன்னாங்காணி, விஷ்ணுகிரந்தி, பற்படாகம், கண்டங்கத்திரி, தூதுவிளை, ஆடாதோடைவேர், ஆதண்டை, நொச்சிவேர், துளசிவேர், நாயுருவிவேர், கீழ்காநெல்லிவேர், நெல்லிப்பருப்பு, காட்டு மாகாளிவேர், நீலிவேர், சிறு செந்தொட்டிவேர் ஆக வகை 22க்கு வகைக்கு -பலம்-உ யிடித்து நாலு வள்ளத் தண்ணிவிட்டு யெட்டிலொன்றாய்க் காச்சி யிதுக்கு யெண்ணைபடி-உ விடவும். கொம்பரக்கு பலம்-8 யிதுக்கு நாலுபடி தண்ணீரும் ரெண்டுபடி பசும்பாலும் விட்டு யெட்டிலொன்றாய்க் காச்சி யெண்ணையில் விடவும்.

இதுக்கு கடைச்சரக்கு -யேலம், லவங்கப்பட்டை, தக்கோலம், சாதிக்காய், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், சமுத்திராப்பச்சை, செண்பக அரும்பு, பூலாங்கிழங்கு, கல்னார், தேவதாரம், ரத்தச் சந்தனக்கட்டை, நல்ல சந்தனக்கட்டை, கடாமாஞ்சி அதிமதுரம், கோஷ்டம், மஞ்சட்டி -பலம்-1 மத்த வகைகள் வகைக்கு விராகனிடை-உ யிவையெல்லாம் பசுவின்பால் விட்டரைத்து வெள்ளையில்ப் போட்டுக் கலக்கி யெரியிட்டு மெழுகு பதத்தில் வடித்து நான்கு நாட்களுக்-கொருக்கால் உச்சியிலிட்டு முழுகவும். இதுக்கு அந்திசுரம், மேகசுரம், நெடுனாள்த் சுட்ட சுரம், யெலும்பில் ஒட்டிய சுரம், கண்ணெரிவு யிவைகளெல்லாம் குணமாகும்.

சந்தனாதித் தைலம்

விலாமிச்சம்வேர், சீந்தித்தண்டு, நெல்லிப்பருப்பு யிதுவகைக்கு பலம்-சா, குறுணி நீர்விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு வந்தனம், அதிமதுரம், அகில்க்கட்டை, கோஷ்டம், ஏலம், லவங்கப்பட்டை, சமுத்திராப்பச்சை, நன்னாரிவேர், செங்கழுநீர்க்கிழங்கு, நாகப்பூ, இருவேலி, தக்கோலம், சாதிக்காய், புனுகுசட்டி கர்ப்பூரம் ஈரவெங்காயம் ஒரொன்று மூனுவிராகனரைத்து நாழி உழக்கு நல்லெண்ணைவிட்டு பதத்தில் காய்ச்சி வடித்து உள்ளுக்கு ஒரு கழஞ்சி தைலங்கொண்டு முழுகவும். இதனால் தீரும் வியாதி - உடம்பில் சிரசில் உள்ள உஷ்ணமெல்லாந் தீரும்.

இளநீர் என்ணெய்

இளநீர் -நாளி, பசுவின்பால் - நாழி என்ணெய் நாளி

கலந்து இதக்குக் கற்கம்-விலாமிச்சம்வேர், யிருவேலிவேர், நன்னாரிவேர், கோஉஷ்டம், ஏலம், லவங்கம், அதிமதுரம், குங்குமப்பூ, சந்தனம், அகில்க்கட்டை, நெய்தல்க்கிழங்கு, சென்பகமொட்டு, கோரைக்கிழங்கு, சாதிக்காய், வெள்ளுள்ளி, கடுகுரோகணி, புனுகு, கற்பூரம் ஓரொன்று கழஞ்சு கூட்டி இளநீரிலே பதத்தில் வத்தக் காச்சி மெழுகு பதத்தில் வடித்து தலைக்கிட்டு முழுகி நசியம் பண்ணவும். இதக்குத் தீரும் வியாதிநாற்பதுவகைப் பயித்தியம், நயனரோகம், சிரோவேதனை இந்த வியாதிகளெல்லாந் யிந்த என்னெயில்க் குணமாகும். நல்ல கோக்யிமான என்னெய் ஆகும்

சர்வ பயித்தியத்துக்கும் நெல்லிக்கா யென்னெய்

நெல்லிக்காய்ச்சாறு, கத்தாளஞ்சாறு, கரிப்பான்சாறு, சீந்திக்கொடிச்சாறு இவைநால்வகைக்கு சாறுபடி நாழி பசுவின்பால் படி நாளி, என்னை நாளி, அதிமதுரம், பலம்-4 பசுவின் பால்விட்டு அரைத்து என்னெயில் தலைக்கிட்டு மேலுக்கும் பூசி முழுகி வர சர்வ பயித்தியமுங் கண், கை, கால் யெரிவு இவைகள் தீரும்.

குமரிநெய்

கத்தாளஞ்சாறு, சதாவேரிச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, சிறுகீரைச்சாறு, சீந்திக்கொடிச்சாறு, நன்னாரி வேர்க்கஷாயம் தாமரைக்கிழங்குச் சாறு, நெய்தல்க்கிழங்குச்சாறு ஆக சாறு வகைக்கு படி-உ, நெய்யிருநாளி, பசுவின் பாலிருநாளி இதக்குக்கற்கம் ஏலம் சிராம்பு, அதிமதுரம், லவங்கப்பத்திரி, முந்திரிகைப்பழம், கொத்தமல்லி சுக்கு, மிளகு, திப்பிலி, பேரீச்சம்பழம், விலாமிச்சம்வேர், சந்தனம் சென்பகமொட்டு சீரகம் இவை வகைக்கு விராகனிடை-1 பால்விட்டு அரைத்துக் கரைத்து பதத்தில் வடித்துக் கொள்ள முளிவர் இதற்கு தீரும் வியாதி-சர்வசுரம், உள்க்காச்சல், மேகவெட்டை யிவையெல்லாங் குணமாம். இதற்குப் பத்தியம் -பீர்க்கங்காய், அவரைக்காய், முருங்கைக்காய், துவரம்பருப்பு, உப்பு, இவை கூட்டவும். புகையிலை, புளிவிட்டு விடவும்.

சகல பித்தத்துக்கும் ஆடாதோடை.

நெய்

ஆடாதோடைச்சாறு இருநாழி, நெய்இருநாழி, பாலிருநாழி கடைமருந்து நிலவேம்பு, குடசப்பாலை, அரிசி, கோரைக்கிழங்கு, அதிமதுரம், சந்தனம், சீந்தித் தண்டு, இலுப்பைப்பூ, நன்னாரிவேர், விலாமிச்சம்வேர், தாமரைக்கிழங்கு, பெருங்குரும்பை யிவை வகைக்கு விராகனிடை-1 பால்விட்டு அரைத்துக் கரைத்து நெய் பதத்தில் வடித்துக் கொள்ள ரெத்த பித்தந் தீரும்.

நாவல்நெய்

நாவல்ப்பட்டை-பலம்-4 எடுத்து நாநாழி நீர்விட்டு நாளியாகக் காய்ச்சி கசாயம் வடித்துக்கொண்டு தயிர்நீர்படி-புளியாரைச்சாறு நாழி, நெய் நாளிவிட்டு இதற்குக் கற்கம், சந்தனம், அதிமதுரம், வெள்ளி லோத்திரம், இலவம்பிசின், தாமரைக்கிழங்கு, சிறுநாகப்பூ, முந்திரிகைப்பழம், அதிமதுரம், குடசப்பாலை, அரிசி, காட்டத்திப்பூ, பேரிச்சம்பழம், அதிவிடையம், மாதளங்காய், வட்டத்திருப்பி முத்தக்காசு அசமதாகம், மாமலிவிரை, நாவல், கோஷ்டம் இவையெல்லாம் வகைக்கு விராகனிடை-½ கட்டி அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்துக்கொள்ள ரெத்தபித்தம், ரெத்தகிராணி, ரெத்தமூலம், எலும்புருக்கி வியாதியெல்லாம் தீரும்.

இதற்குப் பத்தியம்:- உப்பு, புகை, புளி தவிர்க்கவும்.

லெகுவு சந்தனாதித் தைலம்

சந்தனம் -பலம்-1 (நன்றாக உயர்ந்த தாய் இருக்க வேண்டும்) கையாந்தகரைச்சாறு-படி-½, சிறுக்கீரைச்சாறுபடி-½, பொன்னாங்காணிச்சாறுபடி-½, சீதேவி செங்கழுநீர்ச்சாறு படி-½, சீரகம் -பலம்-½ கூடப்போட்டு இவையெல்லாங் காய்ச்சி மெழுகுபதமா யிறக்கி நான்கு நாட்களொருக்கால் முழுகு சகலவெட்டை, உஷ்ணமுந் தீரும்.

அரக்செண்ணெய்

அரக்கு காச்சின நீருநாளி, எண்ணெய்-நாளி, தயிர்-ரெண்டு வல்லம் இதில் அதிமதுரம், மஞ்சள், முத்தக்காசு, பெருங்குரும்பை, பேரரத்தை, கடுகுரோகணி, சந்தனம், மஞ்சிட்டி, விலாமிச்சம்வேர் சடாமாஞ்சி வகைக்கு பலம்-½ இவை கூட்டி அரைத்துக் கரைத்து பதத்தில்

வடித்து உடம்பிக்கிட்டு முழுக்கித் தலைக்கிட்டு முழுகவும்.

இதற்குத் தீரும் வியாதிகள் - பழவெதுப்பு, சீதசுரம், பித்தசுரம், வற்றி உலர்ந்துபோதல், நீரிழிவு, மூலம், பீளை, இருமல், அரோசிகம் இவையெல்லாந் தீரும்.

சுரத்துக்கு இன்மொருவகை/அரக்கெண்ணெய்

அரக்கு -தூக்கு- 1 ஆரைவேர் சமூலம் - துலாம்- 1 இவை இரண்டும் வெவ்வேறே பத்தப்படி தண்ணீர்விட்டு ரெண்டு படியாய்க்காய்ச்சி இந்த ரெண்டு கஷாயத்தையும் ஒன்றாய்க் கூட்டிக் குறுணி கஷாயத்தில் ஒரு வருஷத்துக்கு மேற்பட்ட காடி யெட்டு வல்லங் கூட விட்டு யிதுக்கும் சித்திரமுட்டி, செவ்வியம், அமுக்கிறாங்கிழங்கு, சித்திரமூலம் நாணாறு, சுரந்தை வேர் சமூலமும் நொச்சில்வேர், கருநொச்சில்வேர், செம்புளிச்சை, கருசிலாங்கண்ணி, கஞ்சாங்கோரை, துளசி, புங்கம்பட்டை, எழுத்தாணிப்பூடு, அவுரிவேர், மரமஞ்சள் இவை வகைக்கு நாலு பலம் யிடித்து நாலு வல்லந் தண்ணீர் வார்த்து ரெண்டு வல்லமாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு முன்காடியில்க் கஷாயத்தில்க் கூடக் கலந்து கொண்டு நல்லெண்ணை ஒரு வல்லம், வெள்ளாட்டுப்-பால் நாலுவல்லம், தயிர்த்தண்ணீர் நாலு வல்லம், சகாதேவியிலைச்சாறு ஒருபடியிவையெல்லாம் முந்தின காடியில் கூட்டிக் கொண்டு இதுக்குக் கற்கம்- இலவங்கப்பத்திரி, ஏலம், லவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, மஞ்சிட்டி, கற்கடகசிங்கி, செவ்வியம், வாய்விளங்கம், அதிமதுரம், கோஷ்டம், சடாமாஞ்சி மஞ்சள், செம்பிள்ளைச்சட்டை, தேவதாரம், நீர்வள்ளிக்கிழங்கு, திப்பிலிமூலம் சீரகம், கொத்தமல்லி, கச்சோலம், பூலாங்கிழங்கு, கடுகுரோகணி இவை வகைக்கு பலம்- 1 சதுர பாகமாகக் கூட்டி முன்சொன்ன கஷாயங்காடியில்க் கலந்து கொண்டு நாலுநாள் மந்தாக்கினியாக யெரித்து அஞ்சாநாள்ப் பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். இந்தத்தைலத்துக்குத்தீரும் வியாதி. நசியமும் அப்பங்கஉஷ்த்தானமும் பண்ணி வரவும் விஷசுரம் முறைக்காச்சல் யெப்பேற்பட்ட சுரமும் பதினாலுவகை சயமுந் தீரும். செற்பமாயிருக்கிற பெண்களுக்கும் சுரங்கண்டால் முழுகலாம்.

ஷம்மா செற்பத்தின் மேல் முழுகினாலுஞ் சுரம், பழஞ்சுரம், விடாதசுரங்கள் குணமாகும். கிரகசங்கை உ-ம் மாதங்கள் சுரம், இருமல், வாந்தி, உடம்பெரிச்சல்த் தலையெரிச்சல், கண்ணெரிச்சல் அக்கினிதோஷங்கள் தீரும்.

இது அறிவாளரால் சொல்லப்பட்டதைலம் ஆகும்.

:: ௫0 ::

பித்தரோகங்களுக்குக் குமரித் தைலம்

குமிளம்வேர் -பலம்-உ இ, அவுரிவேர் பலம்-ஙு, சிறுகீரை வேர்-பலம்-ஙு, பேராமுட்டிவேர்-பலம்-ஙு, பொன்னாங்காணிவேர் -பலம்-1 கையாந்தகரை வேர்-பலம்--1, சித்தாமுட்டிவேர் -பலம்-1நன்னாரிவேர் வேர் -பலம்-1யிந்தவேர் வகை யெல்லா மிடித்துப் போட்டு பதக்குத் தண்ணீர் வார்த்து யெட்டிலொன்றாய்க் காய்ச்சி வடித்துத்துக் கொள்ளவும். கையாந்தகரைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, செவ்விளநீர், யெலுமிச்சம் பழச்சாறு, சிறுகீரைச்சாறு, கத்தாளஞ்சாறு, ஆதண்டஞ்சாறு, தண்ணிவிட்டான் சாறு இவை வகைக்கு உரி, பசுவின் பால்-உஉ, நல்லெண்ணை -உஉ, விளக்கெண்ணெய் -உஉ பசுநெய் -உஉ இவைதிரையெல்லாமொன்றாய்விட்டு இதற்குக் கற்கம் -பூலாங்கிழங்கு -பலம்-வ, ஏலம் பலம்-சு, செண்பகப்பூ -பலம்-1 கொத்தமல்லியிலை பலம்-இ, வாய்விளங்கம் -பலம்-இ, தாளிசபத்திரி பலம்-இ, கஸ்தூரி மஞ்சள், பலம்-இ, கருஞ்சீரகம் -பலம்-இ, நல்லசீரகம், பலம்-1 சன்லவங்கப்பட்டை-பலம்-இ, நெல்லிமுள்ளி-பலம்-1, வெட்டிவேர்-பலம்-1 விளாமிச்சம்வேர்-பலம்-1, சாதிக்காய் -விராகனிடை-2, சாதிபத்திரி விராகனிடை-உ, மிளகு -விராகனிடை-உ, புனுகு சட்டம்-விராகனிடை-1, பச்சைக் கற்பூரம்-விராகனிடை-1, குங்குமப்பூ -விராகனிடை-1 இவையெல்லா மரைத்துக் கரைத்து பதத்தில் வடித்து அதில் புனுகுசட்டம், பச்சைக்கற்பூரம், கங்குமப்பூ இவைகளின் பொடி நன்றாய் போட்டு வேடுகட்டி தானியப்புடம் பனிரெண்டு நாள் வைத்தெடுத்து நாலுநாளைக் கொருக்கால் முழுகத் தீரும் வியாதி கள் பித்தத்திலே பிறந்த வைகளான, தலையிடி, கண், கைகால் மேலெரிவுகள் யிவை திரையெல்லாந் தீரும். கைகண்டது. இந்த மருந்துக்குப்பத்தியம் முழுகின அன்று புளி புகையிலை நீக்கவும். ~~பிறகள் தவிரவும்~~.

சாமாலைக்கு உள்ளுக்கு மருந்து

காட்டு மொச்சைத்தழை கொண்டு வந்துதனித்து அரைச்சேரை சாறு கொடுக்கவும். மூன்றுநாளைக் குடித்து ஆறுநாள் பத்தியம் காயம் பிடிக்கவும். சாமாலை, அந்திரமாலை, பகல்மாலை, உறுமமாலை, ரெடுகமாலை இவைதிரையெல்லாந் தீரும்.

முக்கூட்டு சந்தனாதித்தையிலம்

சகல ரோகங்களுக்கு காறும்

ஆரணி கயிலை மேவும்

அமரகோன் சொன்ன வரத்தினாலே

தாரணி முனிவன் சொன்ன
சயித்திய சந்த னாதி
வாரணி கொங்கை மாதே
மானிடர் தமக்குச் செய்ய
காரணி உமையா ளீனற்
கணபதி காப்புத் தானே

எள்ளதி லெண்ணை நாளி
யியல்விளக் கெண்ணை நாளி
தெள்ளியபசுவி நெய்யுஞ்
சிறக்கவே நாளி கூட்டி
வெள்ளிய ஆவின் பாலும்
விபரமாய்ப் படியே ஆறு
துள்ளிய இளநீர் தண்ணீர்
சொல்லியவாற் படியும் வாரே

சைய்யாந் தகரை குறுந்தொட்டி
சுசக்குஞ் சந்தம் அமுக்கிறா
மெய்யாங் கொடுப்பை சிறுக்கீரை
மிகவே தாளி நெல்லிக்காய்
செய்யா நாணல் அருகம்வேர்
சிவந்த தாமரை வளையமுடன்
மைய்யால் மருட்டும் புழுக்கை யின்வேர்
மாதே தாழை விழுதாமே

ஆமே சாறு வகை வகைக்கு
அளவா யொருபடி தான்கூட்டி
நாமே சொன்னோம் வேர் வகைகள்
நன்றாம் நிலப்பனை நன்னாரி
தாமே குமரி நீர்வள்ளி
தாமரை யல்லி செங்கழுநீர்
சோமே தவன முகத்தாளே
சொல்வோங் காட்டு மல்லிகைவேர்

முத்தக் காசு மிலாமிச்சம்
முதிர்ந்த சீரா செங்கழுநீர்
சித்த முல்லை கருப்பஞ்சார்
சொல்லு மருந்து வகைக்குவகை
கிறக்சப் பத்துப் பலங்கூட்டி
சீராய்ப் புதிய பாண்டமதில்
சுத்த நீரி லிருநாழி
சுகமாய் விட்டுக் காச்சுவதே

சுகமாய்க் கஷாய மொருபடியாய்ச்
சுருக்கிக் காய்ச்சிச் சார்தனில்
விதமாய்க் கலந்து ஒருவிரகில்
விளக்குந் தீபந் தானெரித்து
பதமாய் மூன்று படியாகப்
பதத்தில்க் குறுக்கி யெண்ணெதனில்
திறமாய்க் கலந்து அடுப்புதனில்த்
தீயே போட்டு யெரித்திடுமே

சந்தனம் பலமே பத்து
தனியகில்ப் பலமே பத்து
முந்தலே பொடியாய்ச் சீவி
முன்னாங்கு படியே விட்டு
விந்தையாய்க் குறுக்கிக் காய்ச்சி
மேவிடு படிமூன் றாக்கி
அந்தமா யிடையி லாளி
அதவுடங் கூட்டிக் கொள்ளே

கூட்டி யேலந் திரிகடுகு
கோரோ சினையுந் திரிபர்லை
நாட்டில்ப் பச்சைக் கிளியூறல்
நன்றாந் தாளிசை பத்திரியும்
சூட்டி மதுரஞ் செண்பகப்பூ
சொல்லோங் கிராம்பு சாதிக்காய்

வாட்ட மணக்குங் கஸ்தூரி
மஞ்ச ளாகு மரமஞ்சள்
கோஉஷ்ட மரத்தை செஞ்சாந்து
குலாவும் பூலர்ங் கிழங்குடனே

வாட்டங் குன்றா யிலவங்கம்
மற்றஞ் சூடன் செவ்வள்ளி
தேட்டம் பெரிய மஞ்சட்டி
தேவ தாரம் சடாமர்ஞ்சி
நாட்டம் பெரிய பேரரத்தை
லவங்கப்பத்திரி னாகப்பூவே

உறியாஞ் கொத்த மல்லிகையும்
கூறு புழுகு சட்டமுடன்
நெறியாஞ் சீரகம் தக்கோலம்
நீதிப் படியே குங்குமப்பூ
மறியாய்ப் பச்சைக் கற்பூரம்
வாரிச் சொருகுங் குழலாளே
அறிய வகைக்கு முக்களஞ்சு
அருவே கூட்டிக் கொள்ளுவதே

அரைத்திடும் பசுவின் பாலில்
அகிடவூட வெண்ணை தன்னில்
கரைத்திடும் மருந்தை யெல்லாம்
கமலமாய்த் தீயைப் போட்டு
எரித்திடு பதந்தப் பாம
லிறக்கியே சட்டி தன்னில்
விரித்திடும் ஓலை தன்னில்
மெல்லிய தாழம் பூவை
மேவியே யிருத்துக் கொள்ளே

இப்படி முக்கூட் டெண்ணை
யியல்புடன் சொன்னார் தன்னில்

மெய்ப்புடன் முழுகு வீரால்
வேர்வைகத் தாழ நாற்றம்
ஒக்கவே கைகால் காந்தல்
லஉஷ்த்தியாஞ் சுரங்கள் மேகம்
கொப்பிடுங் குழலி னாளே
குணமதாய்த் தீர்ந் தாளே

பித்தமு மெரிப்புத் தாவும்
பெரும்பாடு கண்ணெரிப்பு
சித்தமும் நீரில்த் தோஷம்
தொன்டிடு மிருபத் தொன்றும்
மெத்தவே வானீ நூ றல்
மெழுங்காசம் பரளை தீரும்
உத்ததோர் கிரிச்சந் தாவும்
யோனியி லெரிப்புத் தீரும்.

சுரம் பலபல வகைக்கு மெரெண்ணை

பார்தனில் மானி டர்க்கு
பலபல வியாதிக் கெல்லாம்
மேளரெண்ணை தன்னை வைக்க
மோர்படி எட்டுங் கூட்டி
கார்தரும் நல்ல யெண்ணை
கலப்பில்லா நாளி கூட்டி
நேருள்ள அரைத்த சுக்கு
நெறியுடன் கோஉஷ்டங் கூட்டே

நெறியுடன் மதுர மஞ்சள்
நிலையிரு வேலி சந்தும்
குறியுள்ள லாமிச் சம்வேர்
குருந்தொட்டி மிகநன் னாரி
அறிவுள்ள அரக்குத் திப்பிலி
யத்துடன் கடுகு ரோகணி

செறியுள்ள முத்தக் காசு
சேரவே கூட்டிக் கொள்ளே

வகையொன் றொன்றுக் கோர்பலமாய்
மானே அரைத்து எண்ணைதனில்
சரியாய்க் கலந்து வெயிலில் வைத்துச்
சுருக்காய் ரெண்டு நாள்ச் கழித்து
அத்தை யெடுத்து தான்வடித்து
அடவாய்ப் பசித் தான்குளித்தால்
புதையாய்க் காந்தும் அத்திசுரம்
பொல்லா வூஷ்ணம் போய்விடுமே
யெல்லா வியாதிக் கிதுகுருவாம்
யெளிதாய்ச் சொன்னோ மிதைப்பாரே

பெரிய சந்தனாதித் தைலம்

மாதருடன் மோகம் வருந்தினால் மானிடரே
தாதுகெடும் நீரிழிவு தோன்றுந்தான் -போதவே
காந்த லெடுத்துக் கனகனத்து கஞ்சிதண்ணீர்
வாங்கி யுண்பதற்கு மெத்தவரும்ப்பா -பாங்கியரே
வல்லோர்க்கு நல்லபயன் வலிய -சந்த னாதிதன்னை
நல்லோரே வைத்துக்கொள் நாலிலத்தில் யெல்லொர்க்கும்
அம்மை யுமையாளை அறங்கந்கை யால்க்குறித்த
செம்மையுள்ள வாகடத்தைச் செப்பக்கேள் -நம்மைபெறும்

சந்தமொடு கோஷ்டம் சதாவேரி நன்னாரி
முந்திய பொன்னாங்காணி முத்தமுடன்-அந்தகிலம்
வில்வமுடன் சீந்தில் விலாமிச்சு வெட்டிவேர்
சொல்லுமற விந்தமுடன் சித்திரமுட்டி -வல்லோரே
ஒன்றுங் குறையாம லோர்பலங் கொண்டோற்கத்தில்
சென்றயிரு தூ ணிநீரில்ச் செலுத்திக்கொள் நன்றாகக்
காய்ந்த யிருநாழிக் கசாயத் தழலாக
வாய்ந்த யெண்ணை பாலிளநீர் வாய்த்ததிற்பின் தீந்ததொரு

சந்தனங்க ளெல்லாம் சாதிக்காய் கோஉஷ்டமுடன்
வந்த விசுவாசி மகரம்பூ - பைந்தொடியே
பச்சிலை கச்சோலம் பருஞ்சட்டி மாஞ்சியுடன்
நிச்சயமாய் செங்கழுநீர் செண்பகப்பூ -அச்சமற்
யேல மிலவங்கம் யிருவேலி சித்தரத்தை
வால தேவதாரு செவ்வள்ளியுடன்-கோலமுள்ள
தங்க கோலமுங் கடுகு - ரோகணியும் பூலா
சொல்சாதி பத்திரியு மேலப்-பத்தியும் -சரப்பாலி
கிள்ளை யுரையுங் குரோசாணி லாசப்பூ
வெள்ளி லதிமதுரம் வேதிக்கல் -நல்லவிழால்
வெப்பாலையுந் தகரம் வெட்டிய செஞ்சந்தனமும்
ஒப்பாய்க் களஞ்சிநீரை ஓரொற்றி -தப்பாதே
காளிகொடுப்பை நல்ல சாத்திரத்தின் தன்வேதி
வீளி முறுச்சுநொச்சி வேற்குமறி -புளியாரை
குன்றாமல்ச் சாறு கூறையாம வீருழக்கு
ஒன்றாய்க் கலந்து மருந்தேயரைத்து -நன்றாய்க்
கூட்டிச் குழப்பிக் கூசாமல் வேகவைத்து
வாட்டும் வசவைதம் வந்ததென்றால் -வீட்டிலே
வட்டி வெடுத்து மகாதாளம் மூப்பரப்பி
பனைவாய்க் கம்பிளியால்க் கட்டிவடி -செட்டிகடை
கோஉஷ்டமுடன் கஸ்தூரி குங்குமம் கோரோசினையும்
மீட்டும் புனுகுசட்டம் மேவகைக்கு விராகவிடை- பாட்டியரே
கூட்டிப் பொடிசெய்து கலவுஞ்சந்த னாதியின்மேல்
விட்டு விளாவி வேடுகட்டி வைத்துத் திட்டமாய்
வாய்த்த சந்தனாதி தன்னை வார்த்து

வென்னீரி லேமுழுகத்
தீர்க்கும் வியாதிதன்னைச் செப்பக்கேளி நேத்திரத்தில்

மாலைக்கண் கண்ணெரிவு வழந்குக்கிறது கண்ஊறுளைவும்
மாய வலிப்பில்லா லறிநீஞ்ச -ஓயாமல்
மண்டைவலியும் வளாகத்தில் நின்று துரத்தும்
தொன்றை யிருமல்த் துறப்புடனே - துண்டமதில்
பீனிச மீளை பிடரிநோய் பிளைகாலும்

வாய்நாற்றமும் மொத்த வாய்வழுப்பு - தோயாப்பூப்
பிற்றமுமொ றாற்பதுவும் அன்பதுமேகம் மிருபதுடன்
நிந்திர சுண்டி யிதனில்ச் சதையடைப்பகத்
அந்திரமாங் கல்லடைப்ப ன்கல்வாய்வு தந்தியிலரை
மூத்திரப் பாளம் முகமெரிப்புச் -கையெரிப்பு
வாய்ந்தத திரிசூலை வரச்சியுமே தோகையர்க்கு
செற்பமுடன் சூலை சீழ்நீர்ச் கடுப்புடனே
சற்ப நெடும்பாடு தணியுமே - அற்பமென்டு
யெண்ணாதே யாரும் யினிய சந்த னாதிதன்னை
பண்பாக வைத்துப் பரிவுசெய்து - பொன்னாடற்
மேனி தன்க்மே மிந்து உரைபார்க்கி
லாணியிடும் பொன்மேனி யாகுமே - வானவர்க்
சத்தரிஉஷி மாமுனிவன் தான்வகுத்த சாஸ்த்திரத்தை
நிச்சயமே செய்வீர் நினைந்து

44

புண்ணுக்குக் களிம்பு

பச்சைப் பாசாணுட்டஙற வாங்கி சேலைத் துணியிலே சுத்தி தேங்காயளவு எருமைச் சாணியிலே பொதிந்து யிருபது சிராட்டியில்ப் புடம் போட்டு எடுத்து அரைத்து உருண்டை பண்ணி முலைப்பால் ஒருசிரங்கை பாலிலே வேகவைத்து மறுபடி எடுத்து வெண்ணையிலே அரைத்துக் களிம்பு பண்ணிச் சிமிளிலே வைத்துக் கொண்டு புண்ணுக்கு ஒரு எத்தினத்தி லெடுத்துத் தடவவும். வென்னீருற்றிக் கூவிச் கழுவித் தடவப் புண்ணாறுங் கைகண்டது.

அரையாப்பு விப்புருதிக்கு.
எண்ணெய்

நல்லெண்ணை -படி- 1, புங்கம்வேர்ப்பட்டை, கொடிவேலி வேர்ப்பட்டை, பிராயவேர்ப்பட்டை, சிறுகிளாவேர்ப்பட்டை, சிறுகீரை சமூலம், வெள்ளுள்ளி, வசம்பு யிவைகள் வகைக்கு விராகனிடை -2 கூட்டி அரைத்து வெண்ணையில்க் கரைத்துக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக் கொண்டு நேரமொரு கரண்டியாக ரெண்டுவேளையுங் குடித்து மேலுக்கும் பூசி வரவும். தீரும் வியாதி- அரையாப்புக் கட்டிகள், விப்புரூதிக் கட்டிகள் யிவையெல்லாந் தீரும். பத்தியம்- கைப்பு புளிப்பு தவிர்க்கவும்.

...58

இதற்கு மெண்ணெய்:- யிரதம் -விராகனிடை-இ, மனோசிலை - விராகனிடை-1, பெருங்காயம் -விராகனிடை-உ, நெல்லிக்காய்-1 செந்தகம் -விராகனிடை-2இ, வானச் செந்தகம் -விராகனிடை-3 யிவையெல்லாம் நல்லெண்ணெய் விட்டு அரைத்து விளக்கில் வடித்துப் போடவும். இதற்குப் பத்தியம் கைப்பு புளிப்பு தவிரவும். ரெண்டு நேரமும் வெந்நீர் விடவும்.

அரையாப்புக் கட்டிக்குப் பத்து

சொல்லைவேர் யிருகூறுமாக, சுண்ணாம்பு ஒரு கூறுமாக அரைத்துப் பூசினால் படும்.

யின்னம்:- கள்ளிமேல்ப் புல்லுருவி வருத்துக் கோழி முட்டைக் கருவு மரைத்துப் பூச மாறும்.

யின்னம்:- சொன்னையிலையை விளக்கெண்ணெய் வார்த்து வதக்கிக் கட்ட மாறும்.

யின்னம்:- சாரணை, வேளை சமூலமும் சம்பையிலை கல்லுப்பு, அவுரியிலை யிது துவைத்து அமுந்தக் கட்டவும் மாறும் கண்டது.

இன்னம் பத்து:- அத்திப்பால் கட்டிமேல்த்தடவி மறுபடி கட்டி கமுவுதுணி கிழித்து அதில் அத்திப்பாலை ஊட்டிக் கட்டிமேல்ப் போட்டு அதின்மேலும் பால்போட்டு வரவும்.

யின்னம் பத்து:- கொடிவேலி வேர்ப்பட்டை அரைத்துக் கட்டியைச் சுற்றி பத்துப் போடவும். பருத்தாகிலும் போம் அமுங்கியாகிலும்போம். கைகண்டது.

புனலித்தண்டு, உள்ளி, வசம்பு நறுக்கிக் கட்டவும்.

உப்பம் பருத்திக் கொட்டை நறுக்கிக் கட்டவும்.

சமுத்திராச்சோகியிலை நல்லெண்ணை தடவிக் கட்டவும்.

பிராம்பட்டை நறுக்கிக் கட்டவும்.

பிராம்பட்டை, உள்ளி, வசம்பு நறுக்கிக் கட்டவும்.

முருக்கு யேமுயிலை போட்டுக் கட்டவும்.

பிரண்டையும் உப்பும் நறுக்கிச் சுட்டவும்.

வெளிச்சிப் பிசிஜு மாடை யொட்டியுமாக நறுக்கிச் சுட்டவும்.

எருக்கங்காய் பிளந்து உமிக்காந்திலிலே வெதும்ப வைத்து சில்லுப் போட்டுச் சுட்டவும். கைகண்டது.

அரோசிகத்துக்கு

நெல்பொரி, திப்பிலிப் பொடி, சமன்கூட்டி சமன் சர்க்கரையுங் கூட்டி வைத்துக் கொண்டு ரெண்டு வேளையு மூனுமாடை யெடுத்துத் தேன்விட்டு யிழைத்துக் கொள்ளவும். அரோசிகம், வாந்தி, விக்கல், இருமல் யிவையெல்லாந் தீரும்.

அண்ட வாதத்துக்கு

வால்சடுகு, விளாலரிசி, ஓமம், கருஞ்சீரகம், இந்துப்பு, தான்றிக்காய், கடுகு, தளக்கொடி யிவை சமன்கொண்டு யிடித்து வஸ்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு சித்தூாமணக்கு யெண்ணையில் வெருகடி பிரமாணங் கொள்ளவும். அண்டவாதந் தீரும். பத்தியமாயிருக்கவும்.

அசீரணத்துக்கெல்லா முறிவு

பணியாரத்துக்கு முந்தி தண்ணீர் குடிக்கவும்.

தேங்காய்க்குப் புழுங்கலரிசி திண்ணவும்.

வாழைப்பழத்துக்கு மிளகு திண்ணவும்.

மாம்பழத்துக்கு வசம்பு கொடுக்கவும். /

மாங்கிழங்குக்கு யெலுமிச்சம்பழம்

பாக்குச் செருக்குக்கு சர்க்கரை கொடுக்கவும்.

எந்த அசீரணத்துக்கும் வயத்துவலிக்கும் சீலை சுட்ட சாம்பலும் சுண்ணாம்புங் கரைத்துக் கொடுக்கவும்.

அசீரணஞ் செரியாகுணத்துக்கு

ஓமம் சோணியப்பட்டு காடித்தண்ணியில்ப் பச்சை இதமூன்றுஞ் சட்டியில்ப் போட்டுச் சாம்பலாக்கி அதில் அஞ்சு கிராம்பும் அரைப்படி தண்ணீரும் போட்டு சுண்ட யெரித்துச் சிறங்கை தண்ணீர் யிறுத்துக் குடிக்க நிற்கும்.

யெப்பேசிப்பட்ட பேதியுங் கட்டும்.

அச்சரத்துக்கு

மிளகு தக்காளியிலை ஒரு குத்துயிலை போட்டுத் துவைத்து அதில் நாலு யீர வெங்காயம் போட்டு ரெண்டுந் துவைத்து அரைக்கால்ப்படி சாறு கொடுக்கவும்.

இன்னும்:- புளியிலையு மீர வெங்காயமுந் துவைத்து கால்ப்படி சாறு பிழிந்து கொடுக்கவும்.

அயபேதிச் சூரணம்

சிவதை வேரிருபத்தேடு, சிவந்த முத்றம், வாய்விளங்கம், திரிகடுகு, திரிபலை, ஏலம், லவங்கப்பத்திரி யிவை வகைக்கு விராகனிடை-1 கூட்டிச் சிவதையுடன் சூரணஞ் செய்து சமன் சர்க்கரையுங் கூட்டி வெருகடி பிரமாணம் வென்னீரில்க் கொள்ள பித்தம் நாற்பதும் சூலை, குன்மம், வாதமுந் தீரும்.

அரோசிகத்துக்கு

கிவறுத்த பருத்திக்கொட்டைத்தோடு பலம்-கு, நெல்ப்பொரி-பலம்-1, ஏலம் விராகனிடை-உ, சுக்கு-விராகனிடை-உ, திப்பிலி விராகனிடை- இவை கூட்டி யிடித்து வடிகொண்டு சமன் சர்க்கரை கலந்து நேரத்துக்கு வெருகடி பிரமாணம் ரெண்டு நேரமுங் கொள்ள அரோசிகம் பயித்தியம், பசியில்லாம லிருக்கிறது தீரும். கைகண்டது.

அஉஷ்டசூரணம் குன்மத்துக்கு

சீரிய ரிருவரும் சிறந்த மூவரும்
கூறிய ரொருவருங் கொடிய காயரும்
ஆரிய வடகரை யமந்த மோதகம்
நேர்ப்பட வெவைரும் நெருப்போ டொக்குமொக்கு

யிதுக்கறதம் (யிதுக்கு அர்த்தம்) - சீரகம், கருஞ்சீரகம் சுக்கு, மிளகு, திப்பிலி, கொடிவேலி வேர்ப்பட்டை, பெருங்காயம், ஓமம், யிந்த எட்டுவகையுங் கூட்டி யிடித்து யிதுவொரு கூறும் கூட்டி வெருகடிப்பிரமாணங் கொள்ளப் பதினெட்டு வகைக் குன்மமுந் தீரும்.

கைகண்டவித்தை.

அசிலிய சுரத்துக்குக் கஷாயம்

சுக்கு, வெந்தயம், சீரகம், கிராம்பு, குரிஞ்சிப்பட்டை, நிலவேம்பு, சார்வேளை, துளசிவேர், சித்தாமுட்டி, பற்படாகம், கரிசலாங்கண்ணி யிது வகையெல்லாங் கஷாயம் போட்டு அனுப்பான மாத்திரை வைத்துக் கொடுக்கவும். பத்தியம்-புளிப்பு, புகையிலை ஆகாது. யிது கைகண்ட வஸ்துவென்று கமலமுனிவன்.

ஆக்கிரணம்

சமுத்திராப்பழம், கோழிமுட்டை உள்த்தோல் உரித்துப்போட்டு மேல்தோடு கூட்டி ரெண்டுஞ் சமன் இடித்துப் பொடிசெய்து வைத்துக் கொண்டு நாசியில் ஆக்கிரானம் போட்டுவர தலைவலி, சலதோஷம், நீர்ப்பீனிசம் இவையெல்லாம் நிற்கும்.

ஆனந்த வயிரவன்

கருநாவி-கழஞ்சு-3, வெங்காரங் களஞ்சு-3 யிதுவெல்லாங் கூட்டி கல்வத்திட்டுயெலுமிச்சம் பழச்சாறு வார்த்தரைத்து துவரைப் பிரமாணம் மாத்திரை திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு அனுப்பான விசேஷத்தில் ஒரு மாத்திரையிட்டு வரத் தீரும். வியாதி - வாதசுரம், பித்த சுரம், சிலேற்பனசுரம் இவையெல்லாம் நிற்கும் பத்தியம் கைப்பு புளிப்பு தவிரவும்.

ஆறாத புண்ணுக்குக் களிம்பு

முலைப்பால் படி-கு, விளக்கெண்ணெய்-படி-கு யிவை இரண்டையும் சேரித்து அதன்பிறகு குப்பைமேனிச்சாறுவிட்டு மத்திச்சு அதுக்குத் தக்கது வளசிலோட்டை யிடித்து நன்றாய்த் தெள்ளி அதில்ப்போட்டு நன்றாய்ப் பிசைந்து சிமிளில் வைத்துச் சீலையிபிசைந்து சிமிளில் வைத்துச் சீலையிலூட்டி ஆறாத புண்ணின் மேல்ப் போடவும். ஆறுங் கைகண்டது

ஆசனப் பவுந்திரத்துக்குப் புகை

வரிக்கத்தாளைத் தோடு கண்டங் கண்டமாய் நருக்கி வாய்முகின கலசத்திலடைத்து மேலே ஓடு போட்டுச் சீலைமண் செய்து ஓட்டு நடுவிலே துவாரமிட்டுத் துவாரத்தைச் சாணியால் மூடி அடுப்பிலே வைத்து யெரித்து

மேலே ஓடுமூடி யிருக்கிறது நன்றாய் வெதும்பி ஆவியேறினதும் பார்த்திறக்கி வைத்து முடியிருக்கிற சாணியைத் தூக்கப் புகை வரும். அந்தப் புகையை ஆசனத்துக்குள் ளிருக்கிற புண்வாயில்ப் பிடிக்கவும். இப்படி மூன்றுநா ளாறு பொழுது பிடிக்கவும். இது செய்தவுடனே வெற்றிலையைப் புண்ணின் மேலே போட்டுக் கட்டவும்.

பத்தியம் - வென்னீருஞ் சாதமும் தண்ணீர் குடிக்கலாகாது.

ஆண்தண்டு அசந்துபோனால்

இளவென்னீரில் வாகை விரை அரைத்து யிள வயத்தில்ப் பூசவும்.

லேபனத்துக்கு

அமுக்கிராக் கிழங்கு -ஏழு, உளுந்து, தண்ணீர்மிட்டான் கிழங்கும் புசுவின் பாலிலே யரைத்துக் குழப்பி ராத்திரி காலத்திலே போருக்கவும்.

வேறு:- சமுத்திராப்பழம் விராகனிடை-1, திப்பிலி -விராகனிடை-1 தேற்றாம்பழத்தோடு -விராகனிடை-1 யிது மூன்றும் யிளவறுப்பாய் வறுத்துப் பொடிசெய் வெண்ணையில்க் கலந்து தின்னவும். இப்படி மூனு காலமே தின்னவும். யிதுக்கு தண்டு அசந்து போறது, லேபன முண்டாம்.

ஆறாத புண்ணுக்கு

எலுமிச்சயிலை யேழுயிலை வைத்துக் கட்டி தினமொரு யிலையெடுத்துப் போட்டுக் கட்டவும்.

முசக்காது யிலையை யேழுயிலை வைத்துக் கட்டி தினமொரு யிலை யெடுத்துப் போட்டு கட்டவும்.

யிரதம் -விராகனிடை-வ, வெள்ளைக் குங்கிலியம் -விராகனிடை-1, காசிக்கட்டி -விராகனிடை-1, களிப்பாக்கு விராகனிடை-1, கடுக்காய் விராகனிடை-1 மெழுகு விராகனிடை-2, துத்தம் -விராகனிடை-2, துரிசு விராகனிடை-2 நல்லெண்ணெய் படி-வ, விளக்கெண்ணெய் -படிவ இவைகள் கூட்டி யெரித்து பதத்தில் வைத்துக் கொண்டு சீலையிலூட்டிப்போட புண்ணாறும் கைகண்டது

திப்பிலாதி சூரணம் இருமலுக்கு

திப்பிலி, மிளகு, சுக்கு, சிறுநாகப்பூ, அதிமதுரம், ஏலம்,

திருந்துப்பு, கடுக்காய் நெல்லிமுள்ளி, தாளகம், தாணிக்காய்ப் பிஞ்சு, கையாந்தகரை இவை ஓரொன்றும் சமனாகக் கூட்டி இடித்து வஸ்திரகாயம் பண்ணி இதற்குச் சரிச்சர்க்கரை கூட்டி அந்தி விடிஞ்சு வெருகடி பிரமாணங் கொள்ள யிதுக்கு நாலுவகை யிருமலுந் தீரும். கரையும்.

கஷாயம்

சித்தரத்தை சீவிப்போட்டுச் கஷாயம் வைத்து அந்தக் கஷாயத்தில் கல்க்கண்டு போட்டு ஏழுநாள்க் குடிக்க இருமல் மாறும். தீரும்

உச்சித விநோதம்

பசளை வேரம்மியிலே தடவி சாணி பிசைந்து உருட்டி வைத்து செம்பிலே தண்ணீர்மொண்டு அதின்மேல் வைத்துத் தூக்கினால் அம்மியுந் தூக்கப்படும்.

வேறு:- சுடுகாட்டுச் சிறுக்கீரை மடியிலே கட்டிக் கொண்டு முக்குறுணி சாதஞ் சாப்பிடலாம்.

மூலத்துக்கு

காட்டுக் கரணைக் கறிக்கறணை
 சாறும் பிரண்டை கொடிவேலி
கோஷ்டம் புளியறுணைக் கிழங்குடனே
 கூடி யரைத்து வறுத்து - நெய்யில்
-------- -------- -----
 குழைத்து மிழுங்க வல்லீராய்
கூட்டிக் கிடந்த மூலமெல்லாம்
 குடிபோ மென்று கூப்பிடுமே

இந்த விழுது பசுநெய்யிலேயுங் கொடுக்கலாம்.

பின்னும்:

பேய்ப்பீர்க்கம் விரை அரைத்து யெலுமிச்சம் பழச்சாற்றில்க் குழைத்துப் பவன வாயில்த் தடவ மூலம் அத்து விழும்.

குன்டுமணி தள்ளிப் பருப்பு - சஉ வெள்ளாட்டுக் கோமியத்தில் யெட்டுநாள் ஊறப்போட்டு மைபோலே அரைத்து ஒரு கலசத்தில் நிரப்பி

வெயிலே வைக்கத் தையிலமிறங்கும். அந்தத் தையிலத்தைப் பரணியிலடைத்து வைத்துக் கொண்டு பேய்ப்பீர்க்குங் குன்டுமணிப் பருப்பும் துருசும் நெல்லிக்காய் கெந்தகம் சமனாகக் கூட்டி ஒரு விராகனிடை பொடிபண்ணி வைத்துக் கொண்டு முளைக்குச்சியிலே தையிலந் தடவி முளையிலே அந்தப்பொடி தூவி முளையிலே குச்சி யேத்தவும். மூனுநாட்களுக்கு வைக்கவும். வலமிறங்காமல்க் கஞ்சி கொஞ்சமாய்க் கொடுக்கவும்.

உள்மூலம் புறமூலத்துக்கு

உத்திராக்ஷக் கரந்தையிலையை உப்பிலே புழுக்கி சோத்திலே யிட்டுச் சாப்பிடவும். வேறே கரிபாலாகாது.

யிந்தப் புழுக்கின் மருந்தையிட்டுச் சாப்பிடுவது.

புற மூலத்துக்கு:- சிவந்த நாயுருவிக் கொழுந்தும் அரபொடியை யெலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து ஈரவெங்காயத்தை உரலிலே துவைத்து யிந்த யீருள்ளிச் சாறுடனே பதிஞ்சு யெலுமிச்சம் பழச்சாறும் பிழிந்து யிது ரெண்டுங் கூட்டி முன்னரைத்த மருந்தும் அரைபொடியு மிந்தச் சாற்றில்க் கல்ச்சட்டியைக் காயவைத்து ஒரு காதிடை வெண்ணை போட்டு யிந்த மருந்தை மறுசட்டி தாளிச்சு யிறக்கிவைத்து நித்தமாழாக்கு மாத்திரங் கொள்ள முளை கரைந்துவிழும் ~~கண்டது~~ துளிரும்.

சாரடைவேர், அதிமதுரம், மஞ்சள், வேப்பங்கொழுந்து கிராமகள் யிது சமன்கூட்டி அரைத்து குழைத்து முழுங்கவும்.

பாதாள மூலிகை கொண்டு வந்து கருங்குறுவை அரிசியுடன் பிடித்துத் தெள்ள கனியனைக் கிண்டி நெய்யும் கருப்புக் கட்டியும் போட்டுத் தின்னவும்.

பழுத்த பாகற்காயும் கிழங்கும் கோழிமுட்டையுங்கூட்டி நீர்வார்த்து அரைத்து ஒரு களச்சிக்காய்ப் பிரமாணம் பசுவின்பாலில்க் குடிக்கவும். மூலங் கட்டுடனே அடியித்து வீழும்.

பவளவாய் புண்ணாயிருந்தால்

பாவட்டையிலை வாட்டிக் கட்டவும்.
பேய்ப்பீர்க்கு யிலை வாட்டிக் கட்டவும். கல்மதம் ஒரு பணவிடை தூள் விரலிலே தடவி ஆசனத்தி லேத்தவும்.

...65

மூலங் கரையும். பின்பு பசுவின் வெண்ணெயில்க் கொதிக்கவைத்துப் பூசவும்.

மூலத்துக்கு யெண்ணெய்

திப்பிலி, திருசீரகம், இந்துப்பு, சுக்கு, கடுக்காய், வெள்வெங்காயம், மாதுளங்காய், வெஞ்சீனக்காரம், சதுப்பை, அரிதாரம், கருங்குங்கிலியம், கல்நார் இவையெல்லாஞ் சமனாகக் கூட்டித் தூளாக்கி பொடிசெய்து -கருங்கோழி யீரல், குடல் பிடுங்கிப் போட்டு வேலம் வேரும் வெல்வெங்காயமும் வசம்பு, நல்லெண்ணை, வேப்பெண்ணை யிது யெல்லாம் யெண்ணை பண்ணி யெரிக்கவும். யிது கிராம் நேரத்துக் கொரு கரண்டியாக இரண்டு நேரமுங் கொள்ளவும். மூலம் அறுந்து விழும். சகல மூலத்துக்காகும்.

யிதுவும் - ஈரவெங்காயமும் நாயுருவியும் ரெண்டுங் கூட்டி நாழித் தண்ணீர் வார்த்துச் சுவர வெரு வைத்துக் கீரை கடையிறாப்போலே கடைந்து ஒரு சட்டி காயவைத்து உழக்கு விளக்கெண்ணை வார்த்து நாலு வெங்காயம் வறுத்துப் போட்டுத் தாளித்து முன் கடைந்த மருந்தும் போட்டுக் கடைந்து கொள்ளவும். பத்தியம்-பசும்பாலும் சோறும்.

பேய்ப்பீர்க்கங் கூடு யெடுத்து வந்து மேலிப் பொழுப்பு சீவிப்போட்டு விளக்கெண்ணெயில் தீ தோய்த்துத் திரியாகத் திரித்து ஆசனத்தில் வைத்துக் கொள்ளவும்.

உள்மூலம் ஆற மருந்து

காட்டுக் கரணைக் கிழங்கும் வெருகங்கிழங்கு, நறுணைக் கிழங்கு பிரண்டைவேர், செம்பிரண்டைவேர், முள்ளிவேர், செம்முள்ளிவேர் இவைகளை யெல்லாம் போட்டு குமணித் தண்ணீர் வார்த்து இருநாழியாகக் காய்ச்சி ஆத்தி சுக்கு, மிளகு, வெள்வெங்காயம், இந்துப்பு, கடுக்காய் யிவைகளை அரைத்து கஷாயத்தில்க் கலக்கிக் குடிக்கவும்.

பருத்தியிலைச்சாறும் சர்க்கரையுங் கூட்டிக் குடிக்கவும்.

பசரி பசுவின்பாலிலே அரைத்துக் குடிக்கவும்.

பசரி ஒரு நாரத்தங்காயளவு நாழி பசுவின் நெய்யிலே மெழுகு பதத்திலேவடித்து உடனே ஏலம், சீரகம், அதிமதுரம் ஒரொன்றுக்கு முக்களஞ்சு அரைத்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு உள்ளுக்குக் கொள்ளவும். மூலப்புண் ஆறிவரும்.

உள்மாந்தைக்கு

கண்டங்கத்திரி சமூலமும் ஒருமுறம் போத நறுக்கி ஒரு பானையில்ப் போட்டு முக்குறுணி தண்ணீர் வார்த்து யெட்டிலொன்றாய்க் காய்ச்சி யிதில்க் கோத யெடுத்துப் போட்டு யிதற்கு மென்பொடி சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், சிறுநாவேர் யிவைகளெல்லாந் தனித்தனியே பொடிசெய்து அந்தக் கஷாயத்தில்த் தூவி ஒருபல வெல்லமுங் கூடப்போட்டு லேகியமாய்க் கிண்டி யிறக்குகிறபக்குவத்தில் உறிய பசுவநெய் வார்த்து இறக்கி தினம் ஒரு நெல்லிக்காயளவு அறுபது நாள்க் கொள்ளவும்.

கண்டங்கத்திரி சமூலமும் ஒரு முறம்போத முன்சொன்ன மருந்துடனே கொள்ளுவது பத்தியம் -கைப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

உடலுள்க்கொண்ட பாம்புக்கு

தூதுவளை வடக்கே போறவேர் விழுதோடே அரைத்து வென்னீரில்க் கரைத்துக் குடிக்க மீளும்.

யிதுவும்: நீலகண்ட நீர் விஷநங் காடியிலரைத்துக் குடிக்க மீளும்.

வேறு:- தேவதாரியும் வேப்பெண்ணையுங் கூட்டிக் கடித்த வாயிலிட மீளும்.

உள்மாந்தையின் குணம்

இருமியே செயலு முண்டாய்
இடைவிடாச் சுரமுந் தொண்டி
அரிவியே மிடறு கண்டிர்
அற்பமே வாந்தி யாகும்
மருவிய வசனந் தாகும்
மறுத்தலந் தாமும் வத்தி
சருவியால்க் குறைந்து வாடும்
சுசரோக மென்ன லாமே

நெஞ்சுடன் பழுக்கல் பக்கம்
நினைவழிந் திருமி னொந்து
பஞ்சுகொள்ச் சரமுந் தோன்றி
பழுத்துள்ளே சீயுங் கட்டி

அஞ்சலே அய்யும் பித்தும்
அசமு மொறுத்து வந்தால்
ஒஞ்சிடா துன்மை சொல்வோம்
உள்மாந்தை யென்ன லாமே

இருமிச் சுரமுந் தலைவலியும்
யிறங்கா தன்மை விஷம்போலே
பெருக்கச் குத்திக் குடைந்தொழுகும்
பிதத்து மறிய வாய்வெறுவும்

உருசிச் செல்லும் சேற்றுமமும்
மூர்க்க மறவே விழுந்திருக்கும்
மொருமிப் படவே வருத்திவிக்கும்
உளையு மாந்தை யிதுவாமே

இதுக்கு மருந்து

குண்டி முசுட்டை கொடிவேலி
பருத்தி யிலையுங் குன்றாமல்
நின்ற நிலத்திற்க் குமிளமிலை
நீதிப் பயிலும் பீலியிலை

சென்றே பிடுங்குஞ் சித்தமல்லி
சேரவரைத் தாவின் பாலில்
அன்றே குடிக்க வுள்மாந்தை
அகன்டே சயிர்ப்பின் ஊறிடுமே

உள்மாந்தைக்கெண்ணெய்

நிலக்குமிர் துடறி பூலா
நிலத்தினில் நிறக்குஞ் சம்பு
பலப்படி அஞ்சு கொள்ளப்
பலசரக் கதனை கேள்க்க

நலப்படுங் கோஉஞ்ட முள்ளி
நல்க்கடு நெல்லி தான்டி
குலப்புடு மதரம் பாடலக்
கூட்டிநீ யெண்ணை கொள்ளே

52

....68

சித்தாறுந் துஞ்சி வேம்பு
திருந்து நிலத்திற் குமிர்வேரும்
கொத்தங் கோஉஷ்டம் வேம்பாடல்
குலவுஞ் சீரக மதுரம்
மெத்த மிளகு சிறுதிரோசப்பூ,
வெர்த வெண்ணைதனை முருங்கிலைச்சில்
பத்தே யெவ்வா வாள்தனிலே
பறந்தே போகுமுள் மாந்தையிதே

பத்திய மத்ச மாகில்
வருவிரா லச்சுரா நெய்த்தோலி
சுத்தமாங் ....த்திற் சொல்லித்
துடர்ந்ததோ ருடும்பு காடை
முத்தவெண் கோழி முட்டை
முருங்கை தூ தளை நெல்லிக்காய்
முத்திய பொன்னாங் காணி
முசட்ட னுள்ளான் கூட்டே

யிந்தநோய் நீண்ட நாளி
யீந்திடுங் காச ரோகம்
முந்தவே அய்யும் பித்தம்
முடுகிடாச் குளிர்ச்சி வெப்பு
வந்ததோர் குணங்கள் கண்டால்
மயங்கிடா தெந்த நாளும்
பைந்தொடி ஆவின் பாலும்
சீரையும் பருக லாமே

உள்க்காச்சல் கணத்துக்கு

பசுநெய் -படி-1, வல்லாரைச்சாறு -படி-இ ஈரவெங்காயம்-பலம்-4, ஒருத்தலை வெள்ளைப்பூடு -1, வசம்பு -யிறையளவு, நற்சீரகம் பலம்-வது, ஏலம்-விராகனிடை-3, கிராம்பு -விராகனிடை-1

வல்லாரை யிலையாகிலும் போடவும்.

கடைமருந்தை யிடித்துப் போட்டு யீர வெங்காயத்தை அறுத்துப் போட்டு யீரவெங்காயம் பொன்னிறமாய்ப் பதத்திலிறக்கி வைத்துக் கொண்டு கணம், உள்க்காச்ச லிருகளுக்கு ஒரு கரண்டி கொடுக்கவும்.

53

சிறுபிள்ளைகள் மாந்தம் கணத்துக்கு எண்ணெய்

முள்ளிவேர், கோழியவரைவேர், பழம்பாசி, சித்தாமுட்டிவேர், செம்புநெருஞ்சி, சிறுபுள்ளடி, நரிபயத்தம்வேர், தவசிமுருங்கைவேர், குதிரைவாலி, குழிமிட்டான், தகரைவேர், நொச்சிவேர், நிம்பூரல்வேர், நறுவிளிப்பட்டை, உதியம்பட்டை, கருவேலம்பட்டை இவையெல்லாம் ஒருபடி யெண்ணெய்க்கு வகைக்கு பலம்-வ கூட்டி எண்ணெயில் போட்டெரித்து மாந்தங் கணத்துக்கு ஒருகரண்டி கொடுக்கவும்.

<u>வேறு:-</u>

மாந்தங் கணத்துக்கு மாத்திரை

திரிகடுகு, கடுகுரோகணி, பொன்முசுட்டைவேர், கடுக்காய் இவை கூ சமன்கூட்டி ஆடாதோடையிலை யிடித்துப் பிட்டிட்டு அந்தச் சாத்திலே யரைத்து கடலை பிரமாணம் உண்மைசெய்து சோறுண்ணும் பிள்ளைக்கு வெந்நீரிலிடவும். முலையுண்ணும்பிள்ளைக்கு முலைப்பாலிலிடவும். பத்தியமாய் வரவும்./

உள்க்காச்சல் சரீரம் உணர்ந்து/

போறதுக்கு நெய்

வல்லாரை சமூலம் -பலம்- 15, ஈரவெங்காயம்-பலம்- 10, சீரகம், கருஞ்சீரகம், வசம்பு, சித்தரத்தைசாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், அதிமதுரம், அக்கிறாகாரம், கொத்துமல்லி வகைக்கு பலம்-வ, வசம்பு-பலம்-கு, உள்ளிப்பூடு -உ, பசுவின்நெய் படி- 1.

வல்லாரை யிடித்து காலே அரைக்கால்ப்படி சாறுவிடவும். ஈரவெங்காயத்தை அரிந்து போடவும். வசம்பு, வெள்ளைப்பூடு தட்டிப் போடவும். மத்த மருந்தை அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து உள்ளுக்குக் கொடுத்து வரவும். இதற்குத் தீரும். வியாதி -உள்க்காச்சல் சரீரமுணர்ந்து போறது, உஉந்னவகை கைகால் யெரிவு தீரும்.

..70

உசிலை சந்தனாதி தைலம்

விலாமிச்சம்வேர், நன்னாரி, கோரைக்கிழங்கு, நெல்லிமுள்ளி, சிந்தாமுட்டி, சீந்திற்கொடி, தாமரைவளையம், வெட்டிவேர், சந்தனம் வகைக்கு பலம்-1 யிடித்து பதக்கு தண்ணீர்விட்டு ரெண்டு படியாகக் காய்ச்சி யிருத்து நல்லெண்ணை நாளிவிட்டுக் கற்கம் -அதிமதுரம் சந்தனம், செஞ்சந்தனம் கோஷ்டம், செங்கழுநீர்கிழங்கு, மஞ்சட்டி, நன்னாரிவேர், ஏலம், இலவங்கம், லவங்கப்பத்திரி, தக்கோலம், தகரம், சடாமாஞ்சி, சதகுப்பை, கச்சோலம், வெட்டிவேர், சாதிக்காய், பச்சைக்கற்பூரம், கஸ்தூரி, தேவதாரம், அஞ்சல்சல்லு, கடுகுரோகணி, புழுகு, முந்திரிகைப்-பழம், அகிலம், குங்குமப்பூ, கடுக்காய், தான்றிக்காய், செண்பகப்பூ, வகைக்கு விராகனிடை-1இ, அரைத்துக் கரைத்து நாளிப் பசுவின் பால்விட்டு பதத்தில் வடித்து முழுகத் தீரும் வியாதி உடம்பெரிவு தலையெரிவு, மயக்கம், கிறுகிறுப்பு, காலெரிவு, கையெரிவு, பாண்டு சுரம், இரத்த பித்தம், இரும்விளைப்பு, பிரமேகம் இருபது சேர்ந்த தாதுவர்த்திக்கும். கைகண்டது.

சகல விஷத்துக்கும்

இரசம் கெந்தகம், இருவி, நாவி, கெவுரி, மனோசிலை, அரிதாரம், சுக்கு, திப்பிலி, மிளகு, காயம் மிந்துப்பு யிவை சமன் இவைகளுக்குப் பாதி நேர்வாளம் அரைக்கிறவகை -முருக்கிலைச் சாத்திலேட்டுநாள் தொச்சியிலைச் சாற்றிலெட்டுநாள் கையாந்தகரைச் சாற்றிலெட்டுநாள் நாளொன்றுக்கு ஒருசாமம் அரைத்துக் கம்பிளி நிறமானவாறே யெடுத்து மொத்தையா யுருட்டி ஒரு சட்டியில் வைத்து மறுசட்டி கொண்டு மூடி சட்டி வாய்க்கு சீலை மண்செய்து நாலு சாமமெரிக்கப் பற்பமாம்.

கொம்மட்டிக்காய்ச் சாறு நாலு சிரங்கைப் படியால் ஆறுபடி குழம்பாகச் சாயிறதில் முன்பற்பம் ஒரு விராகனிடை போட்டுத் தளாவி மெழுகு பதத்திலிறக்கி யெடுத்து ஆட்டுத் தோலின் மேல் கொட்டி பருத்தி விரையளவுண்டை செய்து சகல விஷத்துக்கும் கொடுக்கவும்.

மோருரியும், பச்சைப்பயிரும் உப்பில்லாமல் கஞ்சி காச்சிப் பண்ணிப் புத்தியால் விஷம் போக மட்டும் கொடுக்கவும். கைகண்டது.

பித்த பாண்டுவுக்கு லேகியம்

கையாந்தகரைச்சாறு -படி-வ, பொடுதலைச்சாறு -படி-வ, புளியிலைச்சாறு -படி-வ, நீர்முள்ளியிலைச் சாறு -படி-வ, நொச்சியிலைச்சாறு படி-வ, ஆடாதோடைச்சாறு -படி-வ, பிரமியிலைச்சாறு படி-வ, நிலவாகைச்சாறு படி-வ, காட்டுமல்லிகைச்சாறு -படி-வ, வெதுப்படக்கிச்சாறு-படி-வ, எலுமிச்சம் பழச்சாறு படி-வ, ஆக யிந்தப் பதினஞ்சு வகைச்சாறும் பிழிந்து வடித்துக் கொண்டு யிதிற்குக் கடைச்சரக்கு -மிளகு -விராகனிடை-5, திப்பிலி -விராகனிடை-5, திப்பிலி-மூலம், விராகனிடை-5, வாய்விளங்கம் -விராகனிடை-5, அசிமதாகம் -விராகனிடை-5, நற்சீரகம் விராகனிடை-5, அதிமதுரம் -விராகனிடை-5, கோஉஷ்டம் -விராகனிடை-5, சுக்கு -விராகனிடை-5, தேசாபுரம் -விராகனிடை-5, வெள்வெங்காயம் பலம்-1, காந்தம் -விராகனிடை-அ, அரைபொடி-விராகனிடை-5, சிட்டம் -பலம்-1, கடுக்காய் -பலம்-1, ஏலம் -விராகனிடை-5, சாதிக்காய் - விராகனிடை-1, கிராம்பு -விராகனிடை-உ, லவங்கப்பட்டை-பலம்-1, சித்தரத்தை -விராகனிடை-5, பேய்ப்புடல் -பலம்-உ, நெல்லிமுள்ளி -பலம்-1 இவையெல்லா மிடித்து அரைத்து முந்தின கஷாயத்தில் போட்டு லேகிய மாகக் கிண்டி லேகியம் குறுகிவரும் சமயத்திலே முஇறுபலம் சர்க்கரையுங் கால்ப்படி தேனும்விட்டு லேகியமாகப் பண்ணி வைத்துக் கொண்டு நேரத்துக்கொரு பெரிய கொட்டைப் பாக்களவு ரெண்டு நேரமும் பத்துநாள் இதைத் தீரும் வியாதிகள்:- பித்த பாண்டு ரோகம், விஷபாண்டு ரோகம், பித்தகுன்மம், எழுவகைக் காமாலை, வறட்சி காமாலை, பித்த காமாலை, மஞ்சக் காமாலை, வாதசுரப்பான் யிதுவெல்லாந் தீரும். இதுக்குப் பத்தியம் -கைப்பு, புளிப்புத் தவிரவும்.

நீராம்பலுக்கு மருந்து

நிலவாகைச் சாறு படி-1, பிரமியலைச்சாறு படி-1, வெள்ளறுகுச்சாறு -படி-1, சங்கங்குப்பிச்சாறு -படி-1, காட்டாமணக்குச் சாறு -படி-வ, நாரத்தஞ்சாறு -படி-வ ஆகயிந்த ஏழுவகைச்சாறும் ஒன்றாய்க் கலந்து வடிகொண்டு வைத்துக் கொண்டு யிதுக்கு கடைச்சரக்கு -திப்பிலி -விராகனிடை-5 தேசாபுரம் -விராகனிடை-5, கடுகு -ரோகனி விராகனிடை-5, குக்கில் விராகனிடை-5, நீரொட்டி முத்து விராகனிடை-5, துருசு -விராகனிடை-5, நேர்வாளம் விராகனிடை-3, இந்துப்பு -விராகனிடை-5, கல்லுப்பு - விராகனிடை-5, பொட்டிலுப்பு -விராகனிடை-5,

வளையலுப்பு -விராகனிடை-5, பெருங்காயம் -விராகனிடை-3, வெள்வெங்காயம் -பலம் -உ, கடுக்காய் - பலம்-1, தான்றிக்காய் -பலம்-1, பேய்ப்புடல் -பலம்-உ, யிந்தப் பதினைந்து வகையும் இடித்து அரைத்து முன்சாற்றில்ப் போட்டு லேகியமாய்க் கிண்டி லேகியங் குருகி வருகிற சமயத்தில் கால்ப்படி தேன்விட்டு லேகியம் பண்ணி வைத்துக் கொண்டு காலமே ஒருநேரம் பெரிய கொட்டைப்பாக்களவு அரைமண்டலம் தேனில்க் கொள்ள நீராம்பல், மேல்க்கவுசி, கீழ்க்கவுசி, பெருவயிறு யிவையெல்லாம் தீரும். இதற்குப் பத்தியம் -கைப்பு, புளி தவிர்க்கவும்.

வாதகரப்பான் செய்யுங் குணம்

சந்துகள் மொழிபொ ருத்து
தடங்க ளுளைந்து தான்வீங்கி
வந்துதான் புண்போலக் காயும்
வருந்தியே யிருந்து வாடும்
நொந்துதான் திரும்பொண் ணாது
நோவுடன் வெதுப்புத் தோன்றும்
யிந்தநோய் வந்த தாகி
லிதுவாதக் கரப்பான் தானே

கண்ணுறந் தூ ங்கி நடுவுதி
கன்த்த வுடம்பு கிறுகிறுத்து
றெண்டு துடையுங் கலத்திருக்கும்
சற்றே உடம்பு யெழுந்திருக்கும்
மண்ணிற்ப் பிறந்தோர் தங்களுட
வருத்த மறிந்தே வந்திடிலே
யென்னில் வாதக் கரப்பென
யிதுவுஞ் சொல்ல யியலாமே

வாத கரப்பானுக்குச் சூரணம்

சங்கப்பட்டை -பலம்-10, வெள்ளருகு -பலம்-10, சிவனார்வேம்பு-

பலம்- 10, சங்கங்குப்பி -பலம்- 10, சித்திர மூலம் -பலம்- 5, பிரமியிலை -பலம்- 10, நொச்சியிலை -பலம்- 10, செங்காத்திரிப்பட்டை- பலம்- 10, நிலவாகை -பலம்- 10, சிவ்வியிலை -பலம்- 10, அவுரியிலை- பலம்-வ இந்தப் பதினாறு வகையுங் வகையுங் காயப்போட்டு இடித்து வஸ்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு யிதுக்குக் கடைச்சரக்கு திப்பிலி -விராகனிடை- 5, திப்பிலி மூலம் -விராகனிடை- 5, செவ்வியம்- விராகனிடை- 5, தேசாபுரம் -விராகனிடை- 5, அசமதாகம் -விராகனிடை- 5, கருஞ்சீரகம் -விராகனிடை- 5, வசம்பு -விராகனிடை- 5, அரத்தை - விராகனிடை- 5, வெள்வெங்காயம் -பலம்-உ, ஆக இந்தப் பன்றெண்டு வகையும் யிடித்து வஸ்திரகாயம் பண்ணி முந்தின தூள் கூட்டிக் கலந்து நேரத்துக்கு வெருகடி பிரமாணமாக றெண்டு நேரமும் எட்டுநாள் கொள்ள சகல வாதக் கரப்பினும் சட்டுக் கரப்பினும் விஷகரப்பினும் ஊது கரப்பினும், வெடி கரப்பினும் இப்படிக் கொத்த கரப்பானெல்லாம் நிற்கும். யிது கண்ணை கைகண்டது. இதுக்குப் பத்தியம் கார்ப்பு புளிப்பு தவிர்க்கவும்.

பித்த குன்மம் பயித்திய வாய்வுக்குச் சூரணம்

தூதுவிளை வேர் -பலம்- 5, கண்டங்கத்திரிவேர் -பலம்- 5, சிறுவழுதலைவேர்-பலம்-- 5, மொசுமொசுக்கை சமூலம்-பலம்- 5, முடக்கொத்தான் பலம்- 5, சீதேவி செங்கழுநீர் வேர் பலம்- 5, முக்காவேளைவேர் பலம்- 5, சிற்றாமுட்டிவேர், பலம்- 5, சாரணைவேர்- பலம்- 5, சித்திரமூலம்-பலம்- 5, பேய்ப்புடல் -பலம்- 5, நெல்லிமுள்ளி- பலம்- 3, வில்லைவேர் -பலம்- 5, ஆக யிந்தப் பதிமூனு வகையுங் காயப் போட்டு யிடித்து வஸ்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு யிதுக்கு கடைச்சரக்கு மிளகு -விராகனிடை- 5, திப்பிலி -விராகனிடை- 5, திப்பிலிமூலம் -விராகனிடை- 5, தேசாபுரம் -விராகனிடை- 5, அசமதாகம் -விராகனிடை- 5, சுக்கு விராகனிடை- 5, வாய்விளங்கம் -விராகனிடை- 5, கொத்தமல்லி - விராகனிடை- 5, கடுகுரோகணி -விராகனிடை- 5, யேலம்விராகனிடை- 5, லவங்கப்பட்டை -பலம்- 5, லவங்கப்பத்திரி -விராகனிடை- 5, யிந்துப்பு- விராகனிடை -5, கல்லுப்பு -விராகனிடை- 5, பொட்டிலுப்பு -விராகனிடை- 5, வளையலுப்பு -விராகனிடை- 5, சாதிக்காய் -விராகனிடை- 1, கிராம்பு- விராகனிடை- 2, குரோசானி ஓமம் -விராகனிடை-ரு, கடுக்காய்-பலம்- 1,

தாண்றிக்காய் - பலம்-1, வெள்வெங்காயம்- பலம்-உ, இந்த யிருபத்து மூனு வகையு மிடித்து வஸ்திரகாயம் பண்ணி முன்னாள் கூடக் கலந்து கொண்டு நேரத்துக்கொரு வெருகடிப் பிரமாணம் ரெண்டுநேரமும் அரைமண்டலந் தேனில்க் கொள்ளவும். தேனில்லாதே போனால் யிருபது விராகனிடை- சர்க்கரையுங் கூடக் கலந்து கொள்ளசகல பித்தமும் குன்மமும் சகல பயித்திய வாய்வும்சகல வெட்டையும் உஷ்ணவாய்வும் மூல வாய்வு யிவையெல்லாந் தீரும். இதிற்ப் பத்தியம் கைப்பு புளிப்பு தவிர்க்கவும்.

மேகம் இருபத்தொன்றுக்குச் சூரணம்

மிகை ரண்ணப்பட்டை -விராகனிடை-5, கடலிராஞ்சிப்- பட்டை விராகனிடை-5, செங்காத்திரிப்பட்டை -5, ஆவாரம் விரை - விராகனிடை-5, கல்நார் -விராகனிடை-5, பரங்கிப்பட்டை - விராகனிடை-30, நற்சீரகம் - விராகனிடை-5, வால்மிளகு விராகனிடை-5 அதிமதுரம் -விராகனிடை-5, கோஷ்டம் விராகனிடை-5, சாதிக்காய் விராகனிடை -உ, சாதிபத்திரி -விராகனிடை-1, கிராம்பு - விராகனிடை-உ, குரோசணி ஓமம் -விராகனிடை -5, ஏலம் -விராகனிடை-5, லவங்கப்பத்திரி -விராகனிடை -5, தாளிசபத்திரி -விராகனிடை-5, அக்கிராகாரம் -விராகனிடை-5, சிறுநாகப்பூ -விராகனிடை-5

ஆக இந்தப் பதினைந்து வகையும் கல்னாரை யெடுத்து புதுச்சட்டியிலே ஒரு பிடி ஆவரையிலையை வைத்து அதின் பேரிலே கல்நாரை வைத்து மறுபடி ஒருபிடி ஆவரையிலையைக் கொண்டு மூடி அடுப்பிலே வைத்து யெரியிட்டு அந்த ஆவாரை யிலை வெந்து சாம்பலாய்ப் போனதின் பிறகு கல்நாரை யெடுத்து அம்மியிலே வைத்து அரைத்து பற்பம் பண்ணி வைத்துக் கொண்டு மத்த கடைச்சரக்கும் காட்டு மூலிகையும் இடித்து வஸ்திரகாயம் பண்ணி அதினுடனே கல்நார் பற்பத்தையுங் கூடக் கலந்து கொண்டு மேக வனின் வாதத்து மேல்க் கடுப்புக் கண்டதே யுண்டானால் நேரத்துக்கு வெருகடிப் பிரமாணமாக ரெண்டு நேரமும் இஞ்சிச் சாற்றில் அநுபானம் பண்ணி பதிமூன்று நாள்க் கொள்ளவும்.

மறுபடி வெந்நீரிலே அரை மண்டலங் கொள்ள தீரும்.

கொள்ள மேகசூலை, மேகவாதம், மேகவாய்வு, மேகத்தின் பேரிலே நீரிறங்குறது பவுத்திரத்தின்மேல்க் கடுப்பு இப்படிக் கொற்ற யிருபத்தோரு வியாதியும் நிற்கும். இது கைகண்டது கைப்பு புளிப்பு தவிர்த்தவும்.

சயங்காசத்துக்கு மருந்து

தூதுவிளைவேர், அதனிலை, கண்டங்கத்திரிவேர் -அதனிலை சிறுவழுதிலைவேர், அதனிலை, இம்பூரல்வேர், அதனிலை சமூலம், முருக்கிலை, மொசுமொசுக்கையிலை, முடக்கொத்தானிலை, ஆவாரம் வேர்ப்பட்டை, ஆவாரம் நெத்து, ஆவராஞ்சிலந்தி இந்த மருந்தெல்லாம் பசுவின்பால் வார்த்து அரைத்து வகைக்கொரு எலுமிச்சங்காயளவு இந்த மருந்தெல்லாம் பசுவின்பால் வார்த்தரைத்து சட்டியிலே வைத்துக் கொண்டு மிஞ்சின பாலையுங் கூட விட்டு ஒருபடி பசுவின் நெய்யுங்கூடவிட்டு ஒருபடி தூதுவிளம்பழமும் ஒரு ஈர வெங்காயமுந் துவைத்து அதில் கூடச் சாறு பிழிந்து கொண்டு இதற்கு கடைச்சரக்கு மிளகு விராகனிடை-5, திப்பிலி - விராகனிடை-5, ~~திப்பிலி -விராகனிடை-5~~, நற்சீரகம் -விராகனிடை-5, அதிமதுரம் விராகனிடை-5, கோஉஷ்டம் -விராகனிடை-5, சித்தரத்தை - விராகனிடை-8, கஸ்தூரி மஞ்சள் -விராகனிடை-5, வாய்விளங்கம் - விராகனிடை-5, கொத்தமல்லி -விராகனிடை-5, சாதிக்காய் - விராகனிடை-3, சாதிபத்திரி -விராகனிடை-3, கிராம்பு -விராகனிடை-3, ஏலம் -விராகனிடை-5, தாளிசபத்திரி -விராகனிடை-5, லவங்கப்பட்டை- விராகனிடை-10 இவைதனையெல்லாம் பசுவின்பால் வார்த்தரைத்து முன் மருந்தோடே கூடப் போட்டு முப்பது விராகனிடை-சர்க்கரையுங் கூடப் போட்டு பதமாய் லேகியம் பண்ணி வைத்துக் கொண்டு நேரத்துக்கொரு கரண்டியாக ரெண்டு நேரமும் அரை மண்டலங்கொள்ள இந்த மூன்று வகைக் காசமுஞ் சயமீளையும் இருமலும் மேக வெட்டையும் வரக்காசமும் உள்க்காச்சலும் இவைதனையெல்லாம் ~~நிற்கும்.~~ தீரும்.

தாதுவிளம்பழமும் ஈரவெங்காயமும் துவைத்த சக்கையைக் காய வைத்துப் பொரித்த கடித்துக் கொள்ளவும். ~~மிளகுப்~~ இருப்பு பத்தியம் -கைப்பு புளிப்பு தவிரவும்.

மந்தார காசஞ் செய்யுங் குணம்

காது னாசி கறகறத்து

கனத்த வுடம்பு சிமுசிமுத்து
சோது மயினில் நிரிதுபோல

கொடிய னாசி நீர்விழுந்து

வாத முடனே சேத்துமமும்

வந்தே முட்டி யிளப்பெடுக்கும்
யேதென் றறிந்து யிதுவகையை

யியல்பாய்ப் பார்த்துக் கொள்வீரே

மந்தார காசத்துக்கு வவ்வால் நெய்

வைக்கும் வகை

தூ துவிளைவேர், கண்டங்கத்திரி.

இதன் தொடர்ச்சி இல்லை. 86 வது ஓலை இல்லை.

பித்தகாசத்தின் குணம்

....

....

....

முறையாய்ப் பருவம் வந்தவுடன்
தரையைப் பார்க்க வொட்டாது

சரீர நினைவு தெரியாது
பெருகி வடிந்த போதுநிற்கும்

பித்த காசத்தின் குணமுமிதே

காசங்களுக்கு சூரணம்

தூ துவளைவேர் -பலம்-10, கண்டங்கத்திரி வேர்-பலம்-10, திம்பூரல் வேர்-பலம்-10, காட்டாமணக்குவேர்-பலம்-10, கொடி-வேலிவேர்-பலம்-3, சத்திசாரணைவேர் -பலம்-10, முக்காவேளைவேர்-பலம்-15, சங்கங்குப்பிவேர் -பலம்-5, சின்னிவேர்-பலம்-5,

...77

அவுரிவேர் -பலம்-௨, நிலவாகைவேர் -பலம்-10 ஆக யிந்தப் பதினொரு வகையுங் காயப்போட்டு யிடித்து வஸ்திர காயம் பண்ணி வைத்துக் கொண்டு இதுக்கு கடைச்சரக்கு -மிளகு விராகனிடை-5, திப்பிலி -விராகனிடை-5, சுக்கு -விராகனிடை-5, தேசாபுரம் -விராகனிடை-5, அசமதாகம் -விராகனிடை-5, வாய்விளங்கம் -விராகனிடை-5, கொத்தமல்லி -விராகனிடை-5, நற்சீரகம் -விராகனிடை-5, கடுகுரோகணி-விராகனிடை-5, அரத்தை -விராகனிடை-5, கஸ்தூரி மஞ்சள் -விராகனிடை-5, கருஞ்சீரகம் விராகனிடை-5, கடுக்காய் பலம்-1, நெல்லிமுள்ளி -பலம்-1, பேய்ப்புடல் -பலம்-௨, இந்தப் பதினஞ்சு வகையுமிடித்து வஸ்திரகாயம் பண்ணி வன மூலிகைத் தூளுடன் கலந்து கொண்டு நேரத்துக்கு ஒரு வெருகடிப் பிரமாணமாக ரெண்டு நேரமும் பதினாலுநாள் தேனில் அநுபானம் பண்ணிக் கொள்ளவும். தீரும் வியாதி - பித்த காசமும் யிளைப்பும், எலிக்கடி, விஷபாக வீக்கமும் நிற்கும் பத்தியம் -கைப்பு புளிப்பு ஆகாது. இது கைகண்டது.

கிரந்தி குணம்

அதித்தி யெனவே மிகப்பாய்ந்து
அதிகமாய்ப் போக முண்டாம்
வெத்தியே அடிவ யத்தில்
வெதுப்பியே புண்ணே யாகிச்
சத்தியாய்க் கோஉஷ்ந் தன்னில்த்
தகையுட்ன் புண்ண தாகும்
உத்தியா யறிந்து கொள்வீர்
உன்மையு மிதுவே தானே

இந்த வியாதி அனலின் பேரிலேயும் ஸ்திரி சங்கையின் பேரிலேயும் யெடுத்த வியாதியென்றறியவும்.

கிரந்திக்கு மருந்து

சங்கம்பட்டை, செங்காத்தாரிப்பட்டை, சிவனார் வேம்பு ..78

வெள்ளறுகு, சங்கங்குப்பி, சிறுசெருப்படி, சின்னியிலை, நிலவாகை, காட்டாமணக்கு இந்த எட்டு வகையுஞ் சரிகொண்டு காயப் போட்டு இடித்து வஸ்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு இனி கருனே கடைச்சரக்கு பரங்கிப்பட்டை-30, அசமதாகம்-பலம்-1, கருஞ்சீரகம் -பலம்-1 யிந்த மூனுவகையு மிடித்து கூடச் சலந்து கொண்டு நேரத்துக்கு வெருகடி பிரமானமாக ரெண்டு நேரமுஞ்சிறு நீரில்த் தொள்ள அரை மண்டலங்கொள்ள சகல கிரந்திப் புன்னும் சகல கடுப்பும் வாதகரப்பானும் விஷ கரப்பானும் இனிகள் எல்லாம் நிற்கும். சிறு நீரில்க் கொள்ளா விட்டால் இளநீரிலாவது கொள்ளவும். இந்தப்படி இரண்டு நேரமும் யேழுநாள் கொள்ளவும். இதுக்குப் பத்தியம் கைப்பு புளிப்பு தவிரவும்.

சகல கிரந்திப் புன்னுக்குஞ் சூலைச்
சுட்டுக்கு அடைப்பிலே யிருந்து
கொள்ளுங் கஷாயம்.

பரங்கிப்பட்டை -பெரியது -பலம்-2, சங்கம்பட்டை

முத்தினதாய் வெட்டிக் கொண்டுவந்து பரங்கிப்பட்டை மூனுபங்கும் சங்கம்பட்டை ரெண்டு பங்குமாய் எடுத்துக் கொண்டு ஒரு படி தன்னீரிலே போட்டு ஒருபடி தன்னீரும் ஒரு விறகுமாய்ச் காய்ச்சி கால்ப்படி கஷாயமான வாரே. அடைப்பிலே யிருந்து கொள்ளவும். இந்தப்படி ரெண்டு நேரமும் யேழுநாள்க் கொள்ளவும். வெந்த சங்கம்பட்டையை யெடுத்து யெறிந்துவிட்டு பரங்கிப்பட்டையை யெடுத்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு மறுபத்தியத்திலே அந்த ஏழு நாளைக்கும் புழுங்கலரிசியும் பட்டையும் அரைத்து அடை சுட்டுக்கொள்ளவும். இந்தப் பதினாலு நாளைக்குப் பத்தியம் - தினம் ஒரு பெட்டைக்கோழி வெள்வெங்காயம் மிளகுமிட்டு ரெண்டு நேரமுங் கூட்டவும். சகல புன்னுஞ் சூலைச்சுட்டும் கடுப்பும் நிற்கும்.

ஆறாத புன்னுக்குஞ் சூலைக்கும் சீனித்திரி

சாதிலிங்கம், கெந்தகம், அரிதாரம், மிருதார்சிங்கி,

...79

சீனக்காரம், கொடுக்காய்புளி, சித்திரமூலம் இந்த ஏழுவகையும் வாங்கி வந்து சீனாக்காரத்தைப் பஸ்பம் பண்ணி வைத்துக் கொண்டு மற்ற ஆறு வகையும் எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து நல்லெண்ணை சீலையாக ரெண்டு முள அகலம் ரெண்டு முள நீளம் கிழித்துக் கொண்டு சதிரக்கள்ளிப் பாலாகுதல் திருகுகள்ளிப் பாலிலே யாகுதல் காயக்காய் மூணுதிரம் தவைத்துக் காயவிட்டு ஒரு சாண் மூணு விரற்கடை நீளம், பத்து விரற்கடை அகலம் யிந்தப்படி கிழித்துக் கொண்டு அதிலே அரைத்த மருந்தைத் தேங்காய்க் கணதிக்குத் தடவி சீனக்கார பஸ்பமு மட்டாய்த்தூவி திரியாயுருட்டப் பதினொரு திரியாகும். அந்தப் பதினொரு திரிக்குங் கான மட்டுஞ் சீனக்காரத் திரியாயுருட்டி வெயிலிலே நன்றாய்க் காய வைத்து எடுத்துத் தினமொரு திரியாகப் பொடியாய் வெட்டி வைத்துக் கொண்டு சுங்கானிலே வைத்துக் கொண்டு கொடிக்கள்ளிக்கரி சுட்டு வைத்துக் கொண்டு அந்தக் கரியிலே நெருப்புப் பற்ற வைத்துப் புகை குடிக்கவும். குடிக்கிற புகையை விழுங்கிவிடவும். இந்தப்படி தினமொரு திரியாக ஏழுநாளைக்கு ஏழுதிரி குடிக்கவும். இதுக்கு சூலைச்சட்டு, சகல கிரந்திப் புண்ணும், பவுந்திரப் புண்ணுஞ் சகல புண்ணு மாறும் யிந்தப்படி யேழு நாள்க் குடித்து ஒரு நாளாறப் போட்டு ஒன்பதாநாள் விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும். இந்தப்படி மறுபத்தியம் என்பது ஒன்பது நாளிலேயும் மூணு முழுக்கு வென்னீரிலே முழுகவும். இதுக்குப் பத்தியம் - உப்பு வறுத்துக் கொண்டு பசுவின் மோருஞ் சோறுமாக உண்ணவும். அப்புறமிருபது நாளைக்குப் பிறகு மிளகு, சீரகம், துவரம் பருப்பு கூட்டிக் கொள்ளவும்.

வாத காமாலையின் குணம்

வாதகாமாலை பசுமையாயிருக்கும் பித்தகாமாலை கண் பஞ்சடைஞ்சு இருக்கும். சேற்றுமக் காமாலைக்குக் கண் வெளுத்திருக்கும்.

இவை மூன்றுக்கும் அஞ்சனம் :- சிறு பீளையிலையும் வெள்ளைச் சாரணை யிலையுஞ் சாறுவறக் கசக்கிக் கண்ணில் பிழிய யிந்த மூணு வகைக் காமாலையுந் தீரும்.

நீர்க்காமாலையின் குணம்

உடம்பு குளிர்ந்து காலோஞ்சு வரும் தாகமில்லா திருக்கும் யிதுக்கு மருந்து பச்சை மஞ்சள், கையாந்தகரை, செருப்படிக் கொழுந்து யிது மூன்றும் அரைத்து வெள்ளாட்டுக் கோமியத்திலக் கரைத்துக் குடிக்க நிற்கும். வயிறு கழியும். பத்தியம் உப்பு புளி ஆகாது.

ஊதுகாமாலைக்கு மப்படியே காணும் அதுக்கு மதுதான் மருந்து.

வறக்காமாலையின் குணம்

உடம்பு வத்தும், நாவரண்டு கொள்ளும் காலோஞ்சு வரும். யிருகண்ணூ மெரியும் தலை சுற்றி வரும்இருகண்ணூ மெரியும், தலை சுற்றி வரும், உடம்பிலே மயக்கமுண்டாயிருக்கும், வயறு யெரிவு காணும். யிது பித்தத்தினாலே வரக்காமாலை யென்றறியவும்.

பின்னாலே யிதுக்கு மருந்து

வாய்வு பிடிப்புக்கு மருந்து

எருக்கம் பூச்செண்டு எருக்கங் கொழுந்து இலையிரண்டும் சமன் கூட்டி ஒரு மிடாவிலே பதினஞ்சு சேர் தண்ணீர் விட்டு கொழுந்தும் பூவு மதிலே போட்டு மெல்லிய சீலையில் வேடு கட்டி அதின்மேல் புழுக்காத மொச்சைக்கொட்டை சேர் ஒன்று கொட்டி அதின் மேல் அந்தப் பூவில்ப் பாதிப் பூவும் வைத்து மூடி அடுப்பின் மேல் தொண்ணூறு நாளியல் வேடு கட்டின சீலையின் பேரிலே பொங்கப் படாமல் சிறுக அனல்போட்டு யெரியிட்டு யிறக்கி வைத்துக் கொண்டு நேரத்துக்கு ரெண்டு மொச்சைக் கொட்டையாக ரெண்டு நேரஞ் சாப்பிடவும். பத்தியம் நெய் கூட்டவும். புகையிலை ஆகாது.

இரணத்துக்கு நரம்புச் சிலந்திக்கு

சத்தாளை மேல்த்தோடு யெடுத்து சோறு நன்றாய்

...81

சுரண்டிப் போட்டு உள்ப்புறம் விளக்கெண்ணை தடவி அலைிலே காட்டி ரணத்தின் மேல்ப் போடவும். ஆறும்.

நரம்புச் சிலந்திக்கு:- பேர் (பெயர்) கேட்டுக் கொண்டு சுடுகாட்டுச் சாம்பலிலே முளைத்த நெருஞ்சியாவது சிறுகீரையாவது வேர்ப் பிடுங்கிப் போடவும்.

<u>மூச்சுக் குத்துக்கு</u>

களச்சிக் கொழுந்து, யிண்டங்கொழுந்து, வேப்பங் கொழுந்து, வேலிப்பருத்தியிலை யிது தாவு ஒரு விளாங்கா யத்தனை விழுது அரைத்து அதக்கு அரைப்படி என்னையும் விட்டுக் கரைத்து வெள்ளைப்பூடு வசம்பு, சீரகம், கருஞ்சீரகம் யிது மூணும் மூணு காசுக்கு வாங்கி அரைத்துப் போட் டு பதமா யெரித்து வைத்துக் கொண்டு நேரத்துக்கு ஒரு கரண்டி கொடுத்து நாடி நரம்பெல்லாந் தடவவும். பத்தியம் - உப்பு, புளி ஆகாது.

<u>சுழி கணத்துக்குச் சினத்தாள் முறை</u>

மின்னயிலை யிடித்து அரைக்கால்ப்படி சாறு பிழிந்து கால்ப்பலக் கருஞ்சீரகமும் அரைத்துக் கூடக் கலக்கி சட்டி காய வைத்து முறித்து அதிலே ரச கற்பூரம் ஒரு பணவிடை பொடிபண்ணிப் போட்டுக் கலக்கி உள்ளுக்கு ஒரு சங்கு புகட்டவும். ஒரு தரம் ரெண்டுதரம் பேதியுமாகும். பத்தியமாய் வரவும். கைகண்டது.

<u>சுழி கணத்துக்கு வள்ளியம்மை எண்ணெய்</u>

எண்ணெய் சேர், ஒன்றுக்கு சதுரக் கள்ளிப்பால் சேர், காலா பேய்த்தும் மட்டிக்காய் 2 நறுக்கி விரைதள்ளி குறையைக் கூட்டிக் கொண்டு யிதுக்குக் கடைச்சரக்கு -கருஞ்சீரகம், கார்போகவரிசி, வெப்பாலரிசி, வெள்வெங்காயம், வசம்பு, நீரடி முத்து கடுகுரோகணி வகைக்கு விராகனிடை- 1 இவையெல்லாம் யெண்ணையில்ப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வைத்துக் கொண்டு

நேரத்துக்கு ஒரு கரண்டியாக கொண்டு நேரத்துக்கு ஒரு கரண்டியாக மூன்று நாட்களுக்கு மூனறு கரண்டி கொடுக்கவும். சகலமாந்தங்களை யிதுவெல்லாம் நிற்கும். யிதுக்குப் பத்தியம் -புளி, புகையிலை, பச்சைமீன், பச்சைக்கறி, கவுச்சைப் பண்டம் ஆகாது. இது கைகண்டது மருந்தாகும்

மஞ்சள் காமாலைக்கு மருந்து

அரைப்படி வெருமைத்தயிரில் கமுதைலேத்தி காலமே யெடுத்து வந்து கரைத்து வடிகட்டிக் கொடுக்க மூன்று நாட்கள் கொடுக்கவும். சோகை, காமாலை, மஞ்சள்காமாலை யிவைகள் தீரும். பத்தியம் - உப்பு கைப்பு, புளிப்பு ஆகாது.

மூலத்துக்கு-மருந்து-

பெட்டைப் பன்றிக் குடலிலே நெய்யெடுத்து புழுங்கலரிசியும் பிரண்டையும் நேக அரைத்து கால்ப்படி நெய்யில்ப் பிசைந்து மூன்று அடை சுட்டு அந்தக் கரியுமெடுத்து வைத்துக் கொண்டு யிதுப்படி மூன்று நாட்கள் சாப்பிடவும் தீரும். பத்தியம் -மிளகாய் ஆகாது.

பயித்திய பித்தத்துக்கு

கமுதைப்பால் -படி-1 உழக்காய்க் காய்ச்சி அதிலே உழக்கு சீனிச்சர்க்கரை போட்டு அதின்பிறகு பசுவின்பால்படி-உ நெய்யுழக்கு விட்டுக் கலந்து உழக்காய்க் காய்ச்சி முதல் காச்சின மருந்தும் யிதுவும் கூடக் கலந்து காலமே ஒரு கரண்டி கொள்ளவும்.

இதுக்குப் பாவகம் -பொன்னாங்காணிச்சாறுபடி-1, பேய்ப்புடல் சாறு படி-1 இது ரெண்டும் கூட்டி உரியாயக் காய்ச்சி தலைக்குப் புசி தினமிப்படி அந்தி சந்தி பத்திதுமிடறு தண்ணீர் விடவும். பயித்தியம், உன்மாதம் யிதுவெல்லாந் தீரும். இதுக்குப் பத்தியம் - வாய்வுப்-பண்டம், பயித்திய பண்டமாகாது.

தலை நச்சு யிடிப்புக்கு என்னெய்

நல்லெண்ணெய்-படி-உ, நொச்சிச்சாறு படி-உ, பசுவப்-

புத்துச்சாறு படி-2, இந்த ஆறு படியும் ஒரு சட்டியில் வார்த்து அதில் எருக்கம்வேர்ப்பட்டை, மாவிலிங்கம் வேர்ப்பட்டை, நொச்சி வேர்ப்பட்டை, மணத்தக்காளி, வேர்ப்பட்டை இலை, வேப்பிலை, உத்தாமணியிலை, ஆதண்டையிலை யிவை யெல்லாஞ் சமன்கூட்டி யிதில்த் திப்பிலி, மஞ்சள், ஓமம், வெள்ளைப்பூண்டு வகைக்கு பலம்-இ இவைகளெல்லாமிடித்து யெண்ணையில்க் காய்ச்சி பதமாய் ஆக்கி வைத்துக்கொண்டு யெட்டு நாளைக்கொரு வாரந் தலைமுழுகி வரவும். தலைநச்சு, யிடி, ஒரு தலைவலி, கண்பீனிசங்கள் இவையெல்லாம் தீரும்.

சன்னிக் கெல்லாம் அக்கினித் தைலம்

நல்லெண்ணை, விளக்கெண்ணெய், யிலுப்பை யெண்ணெய், புங்கயெண்ணெய், வேப்பெண்ணெய் இவைகள் வகைக்கு படி-வ, ஆக ஒண்ணே கால்ப்படி யெண்ணையும் ஒரு சட்டியில் வார்த்துக் கொண்டு சிறுசெருப்படிவேர் சித்தாமுட்டிவேர், பிராய் வேர், நன்னாரிவேர், குதிரைவாலிவேர், நத்தைச்சூரிவேர், சிறுகார்த்திகைக்கிழங்கு இவைகளெல்லாந் தண்ணீர்விட்டு அரைத்த விழுதுவகைக்கு ஒரு யெலுமிச்சங்காயளவு யெண்ணையில்ப் போட்டு வசம்பு, மிளகு, வெள்வெங்காயம் இவைகளையும் நறுக்கி யெண்ணையில்ப் போட்டுப் பதமாய் ஆக்கி வைத்துக் கொண்டு ஏட்டுநாள் வட்டந் தலைக்கு வார்த்து தலைதுவட்டி சுடுகு புகை காட்டவும்.

இரணத்துக்கு

நல்லெண்ணெய் படி-வ, குங்கிலியம் பலம்-உ, மெழுகு -பலம்-உ, யிவை மூன்றுங் காய்ச்சி பதமாயிறக்கி வைத்து பச்சைத் தண்ணியி லெடுத்து அதில் துகுச்சி போட்டுக் கழுவி புண்ணுக்குப் போடவும். புண்ணாறும்.

விரை வாதத்துக்கு

ஒருத்தலைப் பூண்டு -பலம்- 1அரைத்து உருட்டி அதுக்குள்ளே விராகனிடை பெருங்காயம் வைத்துச் சிற்றாமணக்கிலையில்ப் சுருட்டிக் கட்டி விளக்கில்ச் சுட்டு பிறகு மருந்தையெடுத்து வெந்நீரில்க் மூன்று நாட்களுக்குக் கொடுக்கவும் விரைவாதம் தீரும்.

புரையோடுகிற புண்ணுக்குப் புகை

இரசம் -விராகனிடை-இ, கெந்தகம், விராகனிடை-இ, ..84

கருங்குங்கிலியம் -விராகனிடை-இ, கருஞ்சீரகம் -பலம்-இ, நல்ல சீரகம் பலம்-இ, கடுக்காய் -பலம்-இ இவைகளெல்லாங் கூட்டி அரைத்து மெல்லிய சீலையில்த் தடவி காய வைத்துத் திரியாக்கி திரிப்புகை பிடிக்கவும். எப்படிப்பட்ட புண்ணுமாறும்.

ஞுதக வயத்துக்வலிக்கு (வாய்வுக்கு)

கொடிக்கள்ளி வாட்டிப் பிழிந்த சாறு படி-வ இதில் புழுங்கலரிசித் தவிடும் பேய்ச் கருப்புக் கட்டியும் பிசைந்து ஞுதகத்தின் மேல் வலிகண்டவுடனே மூணுபொழுது சாப்பிடவும். யிப்படி மூணு ஞுதகத்துக்குச் சாப்பிடத் தீரும். இதுக்குப் பத்தியம். புளி புகையிலை ஆகாது.

இன்னமொரு விதம்

புளியறணைக் கிழங்கும் அரைத்த சாந்து நெல்லிக்காய்ாளவு மூணு உருண்டை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு ஞுதக மான காலமே தென்னங் கருப்பட்டியவாது பனங்கருப்பட்டியாவது கால்ச்சேர் சாப்பிட்டு அதின்மேல் உருண்டை சாப்பிடவும். இப்படி மூணு காலமே சாப்பிட்ட யென்ணெய் தேய்த்து முழுகவும். பத்தியம் - பச்சைத் தண்ணி, புளி, புகையிலை ஆகாது.

ஞுதகத்தின் பேரில் ஞுடுவெட்டைக்கு

சீனி சிற்றாமணக்கு வறுத்து ஊத்தின யெண்ணை படி-வ, கருவாழைப்பழம் உரித்து சுளைக்குள்ளே ஏலம் -விராகனிடை-உ, பொடி செய்து மூணு பங்கு பண்ணி ஒரு பங்கு யிந்தப் பழத்துக்குள்ளே வைத்து அந்த யெண்ணையில் போட்டு வேக வைத்து பதத்திலே யெடுத்து சாப்பிடவும்.

குறையெண்ணெயுங் குறையேலம் பொடி றெண்டு பங்கும் யெண்ணையிலெரித்துச் றெண்டு பங்கும் யெண்ணையிலெரித்து சாப்பிடவும். இப்படி மூணு காலமே மூணு பழத்திலே சாப்பிடவும். பத்தியம் -புளி, புகையிலை ஆகாது.

செருப்பு கடித்த புண்ணுக்கு

பத்து மிளகாயைச் சுட்டு சாம்பல் பண்ணி விளக்கெண்ணையில்க்

குழைத்து போடவும். புண்ணாறும்.

இன்னும் வெங்கலக்கல் விளக்கெண்ணெயி லரைத்துப் போட ஆறும்.

இன்னும் செருப்புத் தனுக்கு சுட்டு விளக்கெண்ணெயில்க் குழைத்துப் போட ஆறும்.

மூலத்துக்கு மருந்து

பேய்ப்பீர்க்கம் விரை அரைத்து எலுமிச்சம் பழச்சாத்தில்க் குழைத்துப் பவன வாயில்த் தடவ மூலம் அத்து வீழும்.

இன்னும் - குன்டுமணி தோல் தள்ளி பருப்பு-4, வெள்ளாட்டுக் கோமியத்தில் வெட்டுநாள் ஊறப்போட்டு மைபோல அரைத்து ஒரு கலசத்தில் நிரப்பி வெயிலிலே வைக்கத்தையில மிறங்கும். அந்தத் தையிலத்தை பரணி-யிலடைத்து வைத்துக் கொண்டு பேய்ப்பீர்க்குங் குன்டுமணி பருப்புந் துருசும் நெல்லிக்காய் கெந்தகமுஞ் சமனாகக் கூட்டி ஒரு திராகனிடை பொடிபண்ணி வைத்துக் கொண்டு முருக்கங் குச்சியிலே தையிலந் தடவி முளையிலே அந்தப் பொடி தூவி குச்சியை ஆசனத்திலே மூனு நாளைக்கு வைக்கவும். வலமி-றங்காமல் பால்க் கஞ்சி கொஞ்சமாய்க் கொடுக்கவும். மூலம் அழுகி விழுந்துபோகும்.

பவுத்திரம் ஆறாத புண்ணுக்கு

ஒரு மூஞ்சூறு பிடித்து அதின் வாயைப் பிளந்து அதன் வயத்தில் களஞ்சிடை ரசம் விட்டு இருபது நேர்வாளப்பருப்புத் திணித்து வாளம் வலத்துவாரமும் குதிரை மயிரினாலே நன்றாய்க் கட்டி அதை ஒரு பல்லா கையிலிட்டு ஓடுகொண்டு மூடி சீலை மண் செய்து தலைசாரையிலே வெட்டுநாள் புதைத்து யெடுத்து வைத்துக் கொண்டு எருக்கம்பால்க் கொண்டு வந்து கடுக்காய்த் தூள்போட்டு முறித்து அந்தத் தண்ணீர் வார்த்து மூஞ்சூரை அரைப்பித்து நீள உண்டை பண்ணி வைத்துக் கொண்டு எருக்கம்பால் வார்த்துரைத் திடவும். ஆறாதபுரையும் ஆறும்.

வெகுநாள்ச் சிலை ஓடுகிற புண்ணுக்கு பஞ்சிஊட்டிச் சீலையிலிடச் சதையிடும் உணர்ந்து ஆறிப்போம்.

மற்ற சிலந்திகள் புண் பவுத்திரம் தினவுதுவெல்லாம் ஆறும். கைகண்டது. பத்தியமாய் வரவும்.

பவுத்திரம் சிலந்திக்குத்து மருந்து

சடுக்காய் பொடி செய்து விளக்கெண்ணையிலக் கழுக்கி அரைத்துத் தேனில்க் குழைத்துப் பவுத்திர புண்ணைச் சுத்திப் போடவும். தீரும்.

நிலப்பனைக் கிழங்கும் தண்ணீர் விட்டான் கிழங்கும் சீந்தில்தண்டு, பேரிச்சம்பழம், கொடிவேலிவேர், திரிகடுகு திரிபலை இவைகள் வகைக்கு பத்துக் களஞ்சு இடிஅரைத்துத் தேன்விட்டுப் பிசைந்து கொண்டு தினமொரு களஞ்சு தின்னவும். பவுத்திரந் தீரும். யிது கைகண்டது.

நாய்த்தலை ஓடு கொண்டு வந்து யிடித்து வஸ்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு முழு மஞ்சள் மேல்த்தோல்சீவிப்போட்டு யிடித்துக் கழுக்கி யினிவ ரெண்டுஞ் சமஞ்கூட்டிப் பசுவின் வெண்ணையில் ஒரு விராகனிடை பொடி கொள்ளப் பவுத்திரந்தீரும்.

சிலந்திக்குப் பத்து

தூராயும் புளியு மரைத்து கொதிக்க வைத்துப் பத்துப் போட்டு புளியந் தணலில் தூராய்ச் சுரசமிட்டுப் புகை பிடிக்கவும். யிதப்படி மூன்று நாட்கள் பிடிக்கவும். பவுத்திரந் தீரும்.

வேறு

சங்கிலைச் சாற்றில் பெருங்காய முரைத்துப்பூசிப் பிறத்தியிலே சத்துருளை மடல் பிளந்து வைத்துக் கட்ட ஆசும்.

கொடிவேலியை நீரிலரைத்துப் பாக்களவு உண்டை பண்ணி மூன்று நாட்களுக்கு மூன்று உண்டை கொள்ளவும். பவுத்திரந் தீரும்.

விஷத்துக்கு நசியம்

முக்கரட்டை வேர் பத்து வேராய்க் கொண்டு வந்து சிறுநீரில் நய்ய நறுக்கி நசியம் பண்ண விஷந்தீரும்.

விரியன் கடிக்கு ஔம்பு

பங்கம் பாளை புங்கம்வேர்
பருத்த சாரணை பழுபாகல்
சிங்கப் பெருமாள் பாலையுடன்
சீவிய சுக்கு ரெண்டிட்டு

அங்கத் துடனே வறுநீரால்

அரைத்துக் கரைத்துக் குடுப்பீராய்

சங்க விரியன் கடிவிஷமுந்

தானே பறந்து போமே

விரியல் புடையன் கடித்தால்

சங்கம்பாளை ரெண்டு பங்கு கூட்டவும். முருங்கை வேர்ப்பட்டை உள்ளி வசம்பிட்டு அரைத்துக் கடிவாய் விட்டு யிறங்கப் பூசவும்.

ரெத்த மண்டலிக்கு -முருங்கைவேர் அவித்து யிழுத்துக் கொடுக்கவும்.

சர்வ விஷத்துக்குங் குளம்பு

துத்தம், துரிசு, கெந்தகம், மனோசிலை, சாதிலிங்கம், காந்தம் இவைகள் வகைக்கு விராகனிடை- 1, நேர்வாளம் நஞ்சு வாங்கினது விராகனிடை- 6 கிழித்து யெல்லாங் கல்வத்திலிட்டு யெலுமிச்சம் பழச்சாற்றிலரைத்து பூவந்திப் பழம்- 20 வேப்பெண்ணையிலரைத்து முந்தின வகை மருந்தில் கலந்து ரெண்டுங் கூட்டி ஒரு சாமம் அரைத்து சூரிய புடம் வைத்து மெழுகு பதத்தில் வாரியெடுத்துக் கொண்டு மாட்டுக் கொம்புச் சிமிளில் ஒரு விராகனிடை ரசம் விட்டு யிதிலே மருந்தையெடுத்து வைத்துக் கொண்டு விஷத்துக்கு ஒரு பணவிடை வெற்றிலையில் வைத்துக் கொடுக்க ஏறுந்த விஷமுந் தீரும்.

நஞ்சுக்கு

முக்கரட்டை சமூலமும் யெலுமிச்சங்காயளவு விழுது அரைத்துப் பசுவின் பாலில் அரைத்துக் கொடுக்கவும்.

கருவேலம்பட்டையைக் காடியிலரைத்துக் குழப்பிக் கொடுக்க சகல நஞ்சு மீளும்.

பதினெட்டு நஞ்சு வகைக்கு முறிவு

நாபிக்கு சுக்குப்பொடி மாற்று யிதுவும் கபிலைக்கிழங்கு மாற்று -சிவனார் வேம்புக்கு முற்றின தேங்காய் கீறிக் கொடுக்கவும். நாபிக்கு உழக்கு மிளகுப் பொடியும் உழக்கு பசுவின் நெய்யுங் குழப்பிக் கொடுக்கத் தீரும்.

எட்டிக்கு - நாவல்பட்டை கொடுக்க முறியும். சம்பூரத்துக்கு பழநாவல்ப்பட்டைவேர் யெலுமிச்சங் காயளவு நீரில்க் கரைத்துக் கொடுக்க முறியும். ஊமத்தை காய்க்கு - தாமரை வளையம் அரைத்துக் கொடுக்க முறியும்.

நெய்க்குத் தேன் கொடுக்க முறியும் சிவதைவேர் பேதிக்கு வெள்வேலம்பட்டை கஷாயங்கட்டும். சவூரி பாஷாணத்துக்கு - மாதளங்காய், அத்திக்காய், பருத்திக்காய் யிவைகளை அரைத்து வெண்ணையில் கொள்ளவும்.

குன்டுமணிக்கு ஒரு விராகனிடை வெங்காரம் பொரித்து வெந்நீரில்க் கொடுக்கவும். அலரி வேருக்குப் பசுமஞ்சளும் கடுக்காயும் சமனாய் அரைத்துக் குழப்பிக் கொடுக்கவும்.

யிதுவும் பச்சைக் கத்திரிக்காய் அரைத்து கரைத்துக் கொடுக்கவும். அபினியும் நல்லெண்ணெயும் குடித்தால் பருத்திப்பால் நாளி கொடுக்கவும்.

எட்டி சாப்பிட்ட பேருக்கு ஒரு சிரங்கை உப்புந் தும்பையுந் தவைத்து கால்ப்படி அரைப்படி சாறும் குடிக்கவும்.

எந்த நஞ்சுக்கும் - நாயுருவி யிலைச் சாறு கொடுக்கவும்.

<u>வேறு</u>:- சிறுபுள்ளடி காடியிலரைத்துக் கொடுக்கவும். தாமரைக்கு யெண்ணை கொடுக்கவும்.

சவூரியார் குளம்பு

அரிதாரம், மனோசிலை, வெங்காரம், யிந்துப்பு, கருஞ்சீரகம், கடுகு, திப்பிலி, பெருங்காயம், ரசம் வகைக்கு விராகனிடை-1 நேர்வாளம் -விராகனிடை-10 சாணியிலே சுத்தி பண்ணி பாதி வறுத்து பாதி பச்சையு முன் மருந்துங் கட யிது வெல்லாங் கல்வத்திலிட்டு நாலு சாமம் அரைத்து சிமிளிடைத்துக் கொன்டு யிதுக்கு அனுபானம் - ரெத்த மூலத்துக்கு நெய்யிலிலே கொடுக்கவும். யிப்படியே அனுப்பான விசேஷத்தில்க் கொடுக்கவும்.

சூலைப் பிடிப்புக்கு

சூலைப்பிடிப்புக்கு - விடத் தலையிலேயும் வேரிலேயும்

வெலமிச்சங்காயளவு விழுது அரைத்து யெடுத்து ஒரு விராகனிடை ரசங்கூட விட்டு அரைத்து சின்ன மாத்திரையா யுருட்டிக் கொடுக்கக் கால்பிடிப்பு விடும். கைக்குடைவு, உடம்பு உழைப்பு யிவையெல்லாந் தீரும். பத்தியமாய் வரவும்.

பேதிக்குச் சூரணம்

சிவதைவேர் கொண்டு வந்து பசுவின் பாலிலே புட்டு வைத்து சுத்தி பண்ணி உலத்திக் கொண்டு கடுகுரோகனி கடுக்காய், சுக்கு யிவைகள் கூடப் போட்டு யிடித்து வஸ்திரகாயம் பண்ணி வெருகடி பிரமாணம் வெந்நீரில்க் கொள்ளவும். சுகபேதியாம்.

மாறுளைவுக்கு

கருங்குங்கிலியம் -விராகனிடை-1, கடுகுரோகனி -விராகனிடை-1 கோரோசினை -விராகனிடை-1, கஸ்தூரி - விராகனிடை-இ, கருஞ் சீரகம் - விராகனிடை-1, கற்பூரம் -விராகனிடை-இ, இவையெல்லாங் கூட்டி கல்வத்திலிப் போட்டு தேன்விட்டு அரைத்து மார்பில் பூசி வரவும். மாறுளைவு நிற்கும்.

சர்வ மூலத்துக்கு

சாதிக்காய் -விராகனிடை-10, சாதிபத்திரி விராகனிடை-10, திப்பிலி -விராகனிடை-10, ஓமம் -பலம்-8, வெல்லம் -பலம்-8, சாதிலிங்கம் -விராகனிடை-நெ, வெள்ளைச் சாரணையிலை - ஒருபிடி யிவையெல்லாங் கூட்டி உரலிலிட்டு ஒரு சாம மிடித்த அத்திப்பழம் பிரமாணம் உண்டை செய்து நேரத்துக்கு ஒரு உண்டையாக ரெண்டு நேரமுங் கொள்ள தீரும். வியாதி பிற மூலம் அறுந்த விழும். சிமூலம், ரெத்தமூலம், ஆசனக் கண்டமாலை யிவையெல்லாந் தீரும். பத்தியம் - உப்பு, புளி, ஆகாது . பாக்கு, வெற்றிலை விடாமல்த் தின்ற வரவும்.

மகா விஷசுரத்துக்கு மாத்திரை

வெங்காரம் -களஞ்சு -1, கெந்தகம் -களஞ்சு -1 பச்சைநாபி - களஞ்சு -1, தான்றிக்காய் -களஞ்சு -1, நெல்லிப்பருப்பு- முக்களஞ்சு, அரிதாரம் -களஞ்சு -1, அரிதாரம் -களஞ்சு -1 இவையெல்லாம்

கட்டிக் கல்வத்திலப் போட்டு முள்ளு முருக்கிலைச் சாறு வார்த்து அரைத்துத் துவரை பிரமாண மாத்திரை திரட்டி நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு அனுப்பானம் யிஞ்சிச் சாற்றிலிட்டுவர விடசுரம், தாபசுரம், சந்நிவாத சுரம், சூலை யிவையெல்லாந் தீரும். பத்தியம் - சார்ப்பு, புளிப்பு, புகையிலை யிவை தவிரவும்.

மண்டைக் குடைச்சலுக்கு நசியம்

ஓமம், சுக்கு, ரெண்டுஞ் சமஞ்கூட்டிக் காடியிலரைத்து நசியம் பண்ண மண்டைக் குடைச்சல் தீரும்.

நா யீ காதிலே புகுந்தால்

சட்டுக்கொடி வேர் கொண்டு வந்து அரைத்து நல்லெண்ணையிலக் காய்ச்சி இரைச்சலான காதிலே தேன்வார்த்து ரெண்டு நாளியல் வைத்து பிறகு யிந்த யெண்ணையை வார்த்து அடைக்கவும். நாயீ செத்து விழுந்துபோம்.

சிண்ணியிலையும் செம்முள்ளி யிலையும் போட்டுக் கரண்டியிலே வேப்பெண்ணை ஊத்திக் காய்ச்சிக் காதிலே பிழியும்போது நாயீ செத்து விழும்.

வயுத்தில் செத்து மத்திச்சபிள்ளை விழ மருந்து

கருஞ்சீரகமும் நாவல்ப் பூவுமாக பு சமஞ்கூட்டிப் பசுவின் பாலிலரைத்துக் கரைத்துக் குடிக்கவும். மத்திச்ச பிள்ளை விழும்.

யீச்சம் வேரை அரைத்துக் காடியில்க் கரைத்துக் கொடுக்க மத்திச்ச பிள்ளை விழும்.

யிலைம் கமுதைச்சாணியில்க் காடி வார்த்துப் பிசைந்து வடி கட்டிக் கொடுக்க மத்திச்ச பிள்ளை விழும்.

வீரிய விர்த்திக்கு

அமுக்கிலாங்கிழங்கு, எள், உளுந்து, வெள்ளைச் சாரணை தண்ணீர்விட்டான் கிழங்கு யிவை வகைக்கு பலம்- 1 கொண்டு வந்து உலர்த்தி யிடித்து வஸ்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு சமஞ் சக்கரையுங் கூட்டிப் பசுவின் பாலில்கொண்டு விராகனிடை சாயங்காலஞ் கொள்ளவும்.

அதிக போகமே உண்டாகும். பாலுஞ் சோறும் சாப்பிடவும்.

பூனைக் காலி நிலப்பனை சர்க்கரை ஆனைப்பாலி லரைத்துண்ண வல்லீராய் - மானே போல மடவிழியாருடன் உண்ணப் பாய வுலக்கையை தாகுமே.

யின்னம்:- முருங்கைப்பூ தண்ணீர்விட்டான் கிழங்கு, பூனைக்காலிவிரை நிலப்பனைக் கிழங்கு, கல்கண்டு இவை ஐந்தும் சமன்கூட்டி யிடித்து வஸ்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு ரெண்டு நேரமும் ஒரு மண்டலஞ் சாப்பிடவும்.

சகல கிராணிக்கும் கிராணி மேல் சுரத்துக்கும் மாத்திரை

ரசம், கெந்தகம், இங்கிலீசம், அதிவிடையம், சுக்கு, திப்பிலி, ஆர்க்கம்பூ, மாதளந்தோல், இலவம்பிசின், கோரைக்கிழங்கு, கொடிவேலி வேர்ப்பட்டை இவைகள் வகைக்கு விராகனிடை-உ, அபினி மருந்து -விராகனிடை-20 இவையெல்லாங் கூட்டி கல்வத்திற் போட்டு ஊமத்தை இலைச் சாறு வார்த்தரைத்து குண்டுமணி பிரமாண மாத்திரை திரட்டி நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு கிராணிக்கு அநுப்பானம் - பெருமரத்துப்பட்டை, அதிவிடையம், சுக்கு, சீரகம், இவைகள் போட்டுக் கஷாயம் வைத்து அதில் ஒரு மாத்திரையிட்டு வரவும். சுரத்துக்குத் தேனிலிட்டு வரவும். பத்தியம் -புளி, புகையிலை, மிளகாய் ஆகாது.

பெருவயிறு பேதிக்கு

இலைக்கள்ளி வேர் கொண்டு வந்து பசுவின் பாலிலே வேக வைத்து பாக்களவு யெடுத்து வெள்ளாட்டுக் கோமியத்திலே அரைத்துக் குடிக்கப் பேதியாம்.

பேதி நிற்க மோருஞ் சோறு முண்ணவும்.

ரெத்தப் பிரமியத்துக்கு

கொத்தான் வேரும் சிறுக்கீரை வேரும் பொன்னாங்காணி வேரும் யிந்த மூணும் எலுமிச்சங்காயளவு ஆவராம்பூ எலுமிச்சங்காயளவு வெவ்வேறே பசுவின் பால் வார்த்து அரைத்து வழித்துக் கரைத்து பசுவின்

நெய் படி-கு கூட்டி சரிச் கரையாகுதல் பனை வெல்லாமாகுதல் கூட்டிக் கரைத்துக் குடித்து வரத் தீரும். வியாதி - ரெத்தப் பிரமியம், பெரும்பாடு மேகம் யிவை யெல்லாந் தீரும். பத்தியம் - வெள்ளாட்டுக் கறியும் நெய்யும் பசுவின்பாலும் வாழைக்காய் யிதுவுகும்.

வேறு:- பெருந்தத்தி வேர்ப்பட்டையைத் தேங்காய்ப்பால் வார்த்து அரைத்து வழித்துக் கரைத்தப் பசுவின் நெய்யுங் கூடவிட்டு பனைவெல்லந் தட்டிப் ////// போட்டுக் கரைத்துக் குடிக்கவும். ரெத்தப் பிரமியம், பெரும்பாடு தீரும். பத்தியம் - தேங்காய், வாழைக்காய், வெள்ளாட்டுக் கறியாம்.

பெரும்பாட்டுக்கு

கீழா நெல்லி சமூல மரைத்து யெலுமிச்சங்காயளவு யெலுமிச்சம் பழச்சாறு உழக்கு, அரைப்படி பசுவின்பால் நரை அடங்குமுன்னே யிது வெல்லாங் குழப்பிக் கொடுக்கப் பெரும்பாடு நிற்கும்.

நீர்க்கட்டு கல்லடைப்புக்கு

யியந்தண்டு மேல்ப் புறணியைச் சீவிக் கொண்டு நறுக்கி உழக்குக் காடியில் போட்டுப் பிசைந்து வடிகட்டிக் கொண்டு மிளகு வெள்குள்ளி வகைக்கு விராகனிடை- கூட்டி அரைத்துக் கரைத்துக் குடிக்கவும். நீர்விடும். கல்லுந் தெறிச்சு விழும்.

யிதுவும்:- புனலித் தண்டு நறுக்கி உழக்குச் சாறு யெடுத்து மிளகு, வெள்குள்ளி வகைக்கு - விராகனிடை- வைத்தரைத்துக் கரைத்துக் குடிக்கவும். நீர்விடும்.

பீனிசத்துக்கு நசியம்

ஆமணக்கம்வேர், துளசிவேர், தண்ணீர்விட்டான்கிழங்கு, பாலைவேர், சித்தரத்தை, யிந்து, லவணம், கரிசலாங்கண்ணிச்சாறு ஒருபடி? பசுவின் பாலுங் கூடக் கலந்து காய்ச்சி யிளம் பதமா யிறக்கி வைத்துக் கொண்டு நசியம் பண்ணி வரப் பீனிசந் தீரும். யிது கை கண்டது மருந்தாகும்

சுரப்பாலுக்கு எண்ணெய்

பரங்கிப்பட்டை -பலம்- 1, கருவேப்பிலை -பலம்- 1, செருப்படிச் சாறு, கருநொச்சிச்சாறு, கரந்தைச் சாறு, துளசிச்சாறு,

[redacted] கைய்யாந்தகரைச்சாறு, கோழியவரைச்சாறு, சங்கங்குப்பிச்சாறு, ஆட்டாங்கொடிச் சாறு, யீர வெங்காயச்சாறு யிவைகள் சமன்கட்டி நல்லெண்ணை படி- 1 முந்திரி பட்டையு மருந்து மரைத்துச் கரைத்துக் காச்சி பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு வேளைக்கொரு கரண்டி எட்டு நாட்களுக்கு ரெண்டு நேரமுங் கொள்ள சகல கரப்பானுந் தீரும். வயிறு கொஞ்சங் கழியும். பத்தியங் கைப்பு, புளிப்பு ஆகாது.

இளைத்த உடம்பு பருக்க

சிற்றாமணக்கெண்ணை -படி-1 சீரகம் உழக்கு பொட்டணமாய்க் கட்டி யெண்ணையில்ப் போட்டு வைத்துக் கொண்டு விடிவேறு (விடியற்காலம்) ஒரு கரண்டி உள்ளுக்குக் கொடுத்து வரவும். மல சுத்தியுண்டாம் அக்கினியுண்டாம். யிளைத்த உடம்பு பருக்கும்.

சர்வ ரோகத்துக்கு கோடாசுழி மாத்திரை

கோடா சுழி, ரசம், கெந்தகம், அன்னபேதி, கடுகுரோகணி, துத்தம், துரிசு, கெவுரிபாசாணம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப் பருப்பு, சுக்கு, திப்பிலி, மிளகு, அக்கிராகாரம், சாதிலிங்கம், பச்சை நாபி, வெங்காரம், நேர்வாளம் யிவையெல்லாஞ் சுத்தி பண்ணினது வகைக்கு பலம்-வ கட்டிக் கல்வத்திலிட்டு கரிசலாங்கண்ணிச்சாற்றிலெழு நாள், துளசிச் சாற்றிலெழுநாள், கொட்டான் கரந்தைச் சாற்றிலெழுநாள் யிந்தப்படிக்கு பதந்தப்பாமல் யிருபத்தோருனாளரைத்து சிறு பயறளவு வுண்டை செய்து நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு அநுபான விசேஷம் - வட்டத்துத்திச் சாத்தில் ஒரு மண்டலங் கொள்ள சரீரத் தாளிக்குட்டம்.

ஆவரையிலைச் சாற்றில் ரெண்டு மண்டலங் கொள்ள தேசத்தில் அழகு யிருக்கும். யிந்தச் சாற்றில் மூறு மண்டலங் கொள்ள தேகம் பொன்னிறமாம் ஒரு மாத்திரை எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்து காடியில்க் கரைத்துக் கொடுக்க சகல விஷகடியுஞ் சகல விஷங்களும் தீரும்.

தேள்க்கடித்தால் நாக்கிலே தடவ தீரும். யிஞ்சிச்சாற்றி லொரு மாத்திரையிடச் சன்னி சுரங்கள் தீரும். துளசியிலைச் சாற்றில் ஒரு மாத்திரையிட குளிர்காச்சல், சன்னி தீரும். நற்சீரகக் கஷாயத்திலொரு மாத்திரையிடத் தாபசுரந் தீரும்.

புளியிலைச் சாற்றிலிடப் பித்த சுரந் தீரும். கடுக்காய், தாஷிக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு இவைகள் சமன்கட்டிப் பொடி செய்து இந்தப் பொடி மாடை யிடையும் ஒரு மாத்திரையுங் கூட்டிப் பசுவின் கோமியத்தில்க் குடிக்க சோகை, காமாலை, விஷபாண்டுவம், பித்த பாண்டுவம் இவைகள் தீரும்.

ஊமினீரில்க் கொடுக்கப் பில்லி, சூனியந் தீரும். பனைமட்டைச் சாத்திலிட அண்டவாதந் தீரும். இந்தப்படி அதுப்பான விஷசத்திலிட சர்வ ரோகமுந் தீரும்.

சன்னிக்கு கலிக்கம் செய்ய

பெரியவர்கள் முறை:- வில்வபத்திரிவேர்ப்பட்டை, துளசிப்பூ, புங்கன்விரை, அகில்க்கட்டை, செம்புளிச்சங்கட்டை, மரமஞ்சள், மஞ்சள், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு இவைகள் சமன் கூட்டி வெள்ளாட்டுக் கோமியத்தில் அரைத்தது ரெண்டுநாளி நேக அரைத்து உண்டை பண்ணி நிழலுலர்த்தி எலுமிச்சம் பழச்சாத்திலுரைத்துக் கண்ணிலிட சன்னி, சயித்தியம், தலைவலி இவை யெல்லாந் தீரும்.

நேர்வாளப் பருப்பு,-10, திப்பிலி - 10, ரசம்- 10 இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறு வார்த்து ஏழுநாளரைத்து உண்டை பண்ணி நிழலுலத்தி வைத்துக் கொண்டு எலுமிச்சம் பழச்சாத்தில்க் கண்ணிலிட சன்னி வாதம், தலைவலி, பூதம், பேய்கள், பிசாசுகள் இவையெல்லாம் ஓடிப்போமென்றவாறு இந்தக் கலிக்கம் ஒன்பது நாளைக்குக் கண்ணிலே தீங்கு நீங்கும்.

பூக்கு வெள்ளெழுத்துக்குக் கலிக்கம்

நீர் மு மிளகும், வெள்ளைச் சாரணை வேரும் கூட்டி அரைத்துண்டை பண்ணி வைத்துக் கொண்டு எலுமிச்சம் பழச்சாத்திலுரைத்துக் கண்ணிலிட்டு வரக் கண் அமரந் தீரும். வெள்ளெழுத்துந் தீரும்.

(ம)

வலசலங் கட்டினால் சகாயம்

முருங்கைவேர் ஒரு பிடி சட்டியில்ப் போட்டு ஒரு படி தண்ணீர் வார்த்துக் காய்ச்சி உழக்குப் போதம் வடித்துக் கொண்டு பெருங்காயங் கூடக் கரைத்துக் கொடுக்க வலஞ்சலமிறங்கும்.

திரிழலும்:- தத்தம் வறுத்துப் பொடி செய்து எலுமிச்சம் பழச்சாற்றில்க் குழைத்துக் கண்டு விரலில்த் தடவிக் கொண்டு ஆசனத்தி லேத்தவும். உடனே உடம்பு நெகிழ்ந்து மலமிறங்கும்.

நீர்க்கடுப்பு மேகத்துக்கு

சத்தாளங் கிழங்கு, கொட்டைப்பாக்கு, தேத்தாங்கொட்டை தேத்தாங் கொட்டை இவைகள் வகைக்கு விராகனிடை-1 கூட்டி ஆழாக்கு ஆட்டுப்பாலிலரைத்துக் கரைத்துக் குடிக்க நீர்க்கடுப்பு நிற்கும். பத்தியம்-இச்சா பத்தியம்.

நெருப்புச் சுட்டபுண்ணுக்கு

நெல்லி யிலையை வறுத்துத் தூள் பண்ணி நெருப்புச் சுட்ட புண்ணின் மேல்ப் போட்டு வர புண் ஆறி வரும்.

சுக்கிலப் பிரமியத்துக்கு

மாம்பட்டைச் சாறும் நல்லெண்ணையுமாகக் கூட்டி வெல்லமுங் கூடப் போட்டுக் கரைத்துக் குடித்து வரவும். நல்ல வெல்லம் அகப்படாவிட்டால் சீனிச் சர்க்கரை கூட்டிக் குடிக்கச் சுக்கில பிரமியந் தீரும். பத்தியம் - பால், மிளகு, பசுவின்நெய், கூட்டிக் கொள்ளவும்.

செவ்வட்டைக் கடிக்கு

கஞ்சாங் கோரை பலம்-உ, சித்திர முட்டிவேர் -பலம்-1, பேராமுட்டிவேர் -பலம்-ந், கடுக்காய் - 10 இவையெல்லாங் கூட்டி நருக்கிப் பானையில் போட்டுக் மாட்டுக் கோமியம்-3, ஆட்டுக் கோமியம் -3 யிதைப் பானையில் வார்த்து மூணு நாள்ச் சூரிய புடத்தில் வைத்து நாலாநாளெடுத்துக் காய்ச்சி நாளியிருக்க அவலிலே வைத்துக்கொண்டு மூணு பொழுது குடித்துவர செவ்வட்டைக்கடி தீரும். பத்தியம் - சைப்பு, புளிப்பு தவிரவும்.

காதில் நாய் புகுந்தால்

இஞ்சி கொண்டு வந்து அலரிப்பால் விட்டு நசுக்கி காதில் மூணு பொழுது பிழிய நாய் செத்து விழுகும்.

சிறுபிள்ளைகள் கக்குவானுக்கு

ஆடாதோடைச்சாறு உரி, தூதுவளைச்சாறு உரி, பசுவநெய், உழக்கு, யிதுவெல்லாங் கூட்டி யிதுக்கு கற்கம் - கற்கடகசிங்கி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, கண்டங் கத்திரிவேர், சிறுதேக்கு, மரமஞ்சள், யிந்துப்பு, யிதுகள் வகைக்குக் காசிடை கூட்டிப் பொடி செய்து கூடபோட்டுக் காய்ச்சி பதத்தில் வடித்துக் கொண்டு ரெண்டு வேளையுங் கொடுத்து வரத் தீரும் வியாதி - கக்குவான், யிருமல், சுரம், அக்கினிமாந்தம், யிவையெல்லாந் தீரும். பத்தியமாய் வரவும்

வாய்வுக்குப் பிரண்டைச் சூரணம்

மாப்பிரண்டை கணுவைத் தள்ளி நடுத்தண்டங் கூட்டிக்கொண்டு ஓமம் -பலம் -10 யிவை யிரண்டும் ஒரு பானையில்ப் போட்டு மூனுபடி பசுவின் மோரும் விட்டு அந்தமோர் அதிலே சுவறினபிறகு யெடுத்துக் காயப் போட்டு ஒரு பலம் சுக்கு கூடப் போட்டு யிடித்து வஸ்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு காலமே தேனில் வெருகடி பிரமாணங் கொள்ளத் தீரும் வியாதி - வாய்வு, செரியாக் குணம், சொறி, தேமல், யீளை, யிருமல், அண்டவாதம், பாண்டுரோகம், பெரிகுன்மம், சத்தி சூன்மம், குஷ்டம் யித்தெல்லாந் தீரும். வாய்வுப் பண்டமாகாது.

பிள்ளைபெற மாட்டாதார்க்கு

கத்தாளஞ் சோறும் விளக்கெண்ணையும் பிசைந்து உள்ளுக்குங் கொடுத்து அடிவயத்துக் கீழே தடவ பிள்ளை பிறக்கும்.

ஆவாரங் கொழுந்தை அரைத்து விழுங்கவும். பிள்ளை பிறக்கும்.

சிறுபிள்ளை பேதிக்கு

வல்லாரையிலை, மணத்தக்காளியிலை, ஊமத்கொழுந்து, பிரமியிலை, கரிசலாங்கண்ணியிலை, முசுமுசுக்கையிலை, நெட்டிப் பேய்மிரட்டி, செறு செருப்படி, இரத்தினாயகம், சிங்கியிலை, சிறுசத்திக்கிழங்கு, தும்மட்டிப் பழம் -ய, கருஞ்சீரகம், கார்போகரிசி, வெப்பாலரிசி, நீரடிமுத்து, கடுகுரோகணியிவை பொன்னிறமாய் வறுத்து ஒருபடி யெண்ணையில்ப்

...97

போட்டு யிந்தச்சாறு யெல்லா மிடித்துச் சாறுவாங்கி சென்னைக்குச் சரிசமன் கூட்டிச் கொண்டு தம்மட்டிப் பழச்சாறு வேறே பிழிந்து விட்டு யிதில் உழக்கு சதுரக்கள்ளிப் பாலும் விட்டு அடுப்பிலேத்தி தீயி பதமாயிறக்கி வைத்துக் கொண்டு பேதிக்கு ஒருகரண்டி கொடுக்கவும்.

கணமாந்தம், சுழிகன்ம் யிதுக்கெல்லாம் மூனு நேரமும் மூனுகரண்டி கொடுக்கக் குணமாகும். யிச்சா பத்தியம்.

<u>பேதிக்கு முகர்ந்து பார்க்கிற விரோசனம்</u>

ஆமணக்கென்னெய் -படி-வ, கள்ளிப் பால்-பலம்-1 விட்டுக் காச்சி வைத்துக் கொண்டு காசிடை கொள்ளக் கழியும்.

வாளம் -விரை-1, திருகுகள்ளி வேர்ப்பட்டை -பலம்-கு, குங்கும அலரி, உலந்த பூ -பலம்-வ, யிந்த மூனுந் செண்பகப்பூ, மழிக்கொழுந்து யிதுகளில் அந்தப் பொடியைத் தூவி எத்தனை முறை முகர்ந்தாலும் அத்தனை முறை பேதியாம். யிது உச்சிதம்.

சுக விரோசனம்

நெல்லிப்பருப்பு, வாய்விளங்கம், லவங்கம், லவங்கப்பத்திரி, யேலம், கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய் யிதுகளெல்லாஞ் சமனாகக் கூட்டி யிந்த மருந்துக்கு சிவதை சுத்தி பண்ணினது மூனுபங்கும் சக்கரை ரெண்டு பங்குங் கூட்டி யிது யெல்லாம் பொன்னிறமாய் வறுத்து யிடித்து வஸ்திரகாயம் பண்ணிக்கொண்டு பிறகு சர்க்கரை கலந்து கொள்ள நன்றாய் விரோசனமாகும். பயித்திய குணந் தீரும்.

சண்டாத்திரி சூரணம்

<u>பசி லேபனத்துக்கு</u>

இஞ்சி -பலம்-16, சீவி நருக்கி நிழ்லுலத்திப் பசுவ நெய்யில் வறுத்துத் தூளாயிடித்து யிதுக்கு சரிநிறை சர்க்கரையுங் கூட்டி மிளகு விராகனிடை -12, திப்பிலி-விராகனிடை-8, சாதிக்காய் விராகனிடை-5, யேலம் - விராகனிடை-5, சொடிவேலிப்பட்டை -விராகனிடை-5, காட்டெருமைப்பால் -விராகனிடை-5, திப்பிலி மூலம் -விராகனிடை-8 யிந்த வகையெல்லாஞ் சூரணம் பண்ணி முன் மருந்தில்க் கலந்து துட்டிடை தேனிலாவது வெந்நீரிலாவது கொள்ளத் தீபனமாம். சோகை தீரும்.

குரலோசைக்குச் சூரணம்

பிரமியிலை, கொட்டான் கரந்தை, சுக்கு, திப்பிலி, கடுக்காய், இவையெல்லாம் வறுத்து இடித்துத் தூளாகக்கித் தேனில் மண்டலங் கொள்ளக் குரல் கின்னரிபோலப் பேசும்.

வேறு:- கரிசலாங் கண்ணியுங் கருத்த யெள்ளும் உதையகாலத்திலே அரைத்து ஆயிசு உள்ளமட்டும் சாப்பிட்டால் சரீரத்தில் வியாதியில்லை வெகுநாளி பிழைப்பான். இதை தேனில்க் குழைத்து உண்ண நாக்கு குளறுதல் தீரும்.

சன்னிக்கு என்னெய்

முக்காவேளைவேர் -பலம்-10, சாரணை வேர்-பலம்- 0, யெருக்கலம்வேர் -பலம்-4, ஊமத்தம் வேர்-பலம்-4, பேரரத்தை -பலம் 4, சித்தரத்தை -பலம்-1, கருஞ்சீரகம் -பலம்-வ, பெருங்காயம் -பலம்-வ, வெள்ளைப்பூண்டு -பலம்-வ, வசம்பு -பலம்-வ, ஊடாதோடைச் சாறு உரி, சத்தி பழச்சாறு - உரி, கோழி முட்டை -20 வேகவைத்து வெள்ளை தள்ளிச் சிகப்புச் கரு கூட்டிக் கொண்டு ஒரு படி வேப்பென்னையிலாக்கு உள்ளுக்குங் கொடுத்து மேலுக்குமிடக் குணமாம்.

இன்னமொரு விதம் - வேப்பென்னெய் -படி-1, பூண்டு உரித்தது படி -உ, என்னெயில்ப் பொன்னிறமாய் ஆக்கி வைத்துக் கொண்டு இன்னங் கோழிமுட்டை 20 அவித்து வெள்ளைச் கருவைத் தள்ளி சிகப்புச் கரு சட்டியில்ப் போட்டுச் கறுக்கத்தையிலமாகும். இந்தத்தையிலமும் என்னெயில்க் கலந்து உள்ளுக்குங் கொடுத்து மேலுக்குமிட எந்த சன்னியும் தீரும்.

கணைகளுக்கு என்னெய்

யீரவெங்காயச் சாறு -படி 1, புளியிலைச் சாறுபடி-1, அகத்தியிலைச் சாறு-படி-1, சிற்றாமணக்கென்னை -படி-1 இவையெல்லா மொன்றாய் விட்டு அடுப்பில் வைத்து இதற்கு வெந்தயம் பலம்-வ, சீரகம் -பலம்-வ இவை யிரண்டும் பொடி பண்ணி யென்னையில்ப் போட்டு மெழுகு பதத்தி இறக்கி வைத்துக் கொண்டு கணையெடுத்தவர்களுக்கு காலமே சாயங்காலம் ரெண்டு நேரமும் ஒரு அட்டிடை நக்கவும்.

வயறு பேதியாக வேண்டுமானால் ஒரு கரண்டி ரெண்டு கரண்டி சாப்பிட்டால் பேதியாகும். பத்தியம் - இச்சா பத்தியம்.

விநோதம்

நருவிளிப் பழத்தைப் பச்சை மிடாவினுள்ளே தடவித் தண்ணீர் வார்க்க மிடா வுடைஞ்சாலும் தண்ணீர் நிற்கும்.

வேறு :- தேவாங்கு கண்ணும் நாக்கும் முலைப்பாலில்த் தேய்த்துத் திலதமிட யாருங் காணார்கள். ராசாவின் முன்னே நின்றாலுந் தோணாது.

நெத்தியிலிட்டுக் கொண்டு கண்ணாடியில்ப் பார்க்கத் தன்னிழல் தனக்குத் காணாது.

யிதுசோதினை -யிதன் காலரைத்துப் பொடி செய்து தனக்கு வேண்டினவள் மேலே போடப் பின்தொடருவாள்.

யிதுக்கு சோதனை : பசுக்கிடாரிமேல்ப்போட பின்தொடரும்.

அதின் தலையை எலுமிச்பழச்சாறு விட்டு அரைத்துத் திலதமிட வெட்டு ஆறாது. செயமாம்.

தவரையிலையும் எலுமிச்சம் பழவிரையும். மாடப்பு புறாவி னெச்சமும் கூட்டி அரைத்துத் திலதமிட்டு கையிலும் பூசிக் கொண்டு விழியிலே கையை வீசிக்கொண்டு வெ.உந்னவளுக்கு எதிரேபோக பின்தொடருவாள் வசமாவாள்.

நீர்முள்ளிவிரை தண்ணிமிடாவிலே மேலே பூசி செங்கல் வைத்து உடைக்க உடையாது.

வேறு :- அய்விரலிவிரையும் நீர்முள்ளி விரையும் பொடிசெய்து செக்கில்ப் போட எண்ணெய் வராது.

இன்னும் :- வண்ணான் பாறையில்த் தடவ புடவை கிளியும்.

இதற்கு மாற்று :- நாயுருவி விரையும் சாணா விரையும் பொடி செய்து யெருமை வெண்ணையுடன் கூட்டியிட மாறும்.

தாமரைப்பூவை அத்திப்பால் வார்த்து அரைத்து சிறுகத் திரித்து தண்ணீர் வார்த்து விளக்கேத்த யெரியும்.

76

...100

<u>வேறு:-</u> செந்தசம் பொடி செய்து குசவன் சூலையில்ப் போட பாண்டமெல்லாம் உடைந்துபோம்.

<u>வேறு:-</u> மலாந்தியிலையும் மிளுமிளப் பூச்சியுஞ் சிவத்த தம்பலப் பூச்சியும்நீர் வார்த்து அரைத்து உண்டை பண்ணி நிழ்லலத்தி வைத்துக் கொண்டு குசவன் சூலையில்ப் போட வேகாது.

யிது கருமான உலையில்ப் போட வேகாது,

ஊமத்தை மருளுமத்தை யிதுரெண்டு வகையும் பூவிலிருக்கிற அரும்புங் காயும், சிறுகன் வரகும் யிது முழுதும் சற்றே வறுத்து அரைத்து வைத்துக் கொண்டு சுடுகாட்டில்ப் பிணம் வேகும்போது சுண்ணாம்புக் கல்லைப் போட்டு வேகச் சுட்டு பிறகு அதையெடுத்துச் சுண்ணாம்பாய் நீத்து வடிகட்டி முன்மருந்தங் கூடக் கலந்து பாக்கு வெத்திலையில்க் கொடுக்க யிவள் கேட்டதெல்லாங் கொடுப்பாள்.

<u>வேறு:-</u> சாரைப் பாம்பு செத்து யெலும்பான பிறகு அந்தயெலும்பின் பேரிலே ஒரு கலசத்தை எடுத்துப்போய் ஆத்துக்குள்ளே ஓடுகிற தண்ணியிலே யெதிராக மொண்டு வந்து அந்தத் தண்ணியை தலையிலேயிருந்து வால் மட்டும் வாலிலேயிருந்து தலைமட்டும் வார்த்து வார்த்துப் பார்க்க அப்போ கலசத்துத் தண்ணியெங்கே விழுந்தாலும் விசேஷமான முள்ளெலும்பின் பேரிலே விழுகாது. அப்போ யெங்கே விழாமல் தப்பிச்சுதோ அந்த யெலும்பை யெடுத்து அரையில்க் கட்ட தம்பனம். விநோதம்.

குடுகையில் தண்ணீர் வார்த்து கையாந்தகரை அதில்வேர் குடுகையில் போட்டு தன்க்கு வேண்டின கல்லைத் தூக்கி வைக்க உடையாது.

<u>வேறு:-</u>

சோங்கும் பீசில் யிந்தப்பு
குலாவுங் காளைப் பூநீரும்
பாக்கு லினியக் கற்பூரம்
பருத்த முள்ளிச் சாறுடனே
தேங்க வரைத்துக் குளிகை செய்து
சிவனார் தலையில் பூசவீராம்

நீங்கா குமைவிட் டொருநாள்
நீங்கிலுயிர் விடுவது நிச்சயமே

வேறு:- அவுரித்தோல் தின்னு நெருப்புத் தின்னால் வேகாது.

வேறு: தேள்க்கொட்டின உடனே துராயை வாயில் மென்று காதில் ஊதித் தீரும்.

[சாரணைகற்பம்]

புத்தங்கற்பம்

சாரணைவேர் -பலம்-100, காசுபோலே நறுக்கி ஒரு பானையில்ப் போட்டு தூ ஸிப்பால் வார்த்துச் சுண்டவைத்து வெள்ளைச் சீலையில்க் கொட்டி நிழலுலர்த்திப் பொடி செய்து வஸ்திரகாயம் பண்ணி சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலம், லவங்கம், பச்சிலை, கச்சோலம், வெதுப்படக்கி, சித்திராமுட்டி, நெருஞ்சில்வேர், சீரகம், சாதிக்காய் இவையெல்லாஞ் சமன் கூட்டி இடித்து வஸ்திரகாயம் பண்ணி முன்பொடி யிருவரும் யிது ஒரு கழஞ்சட்டிக் காலமே துவக்கிக் காஷல்மண்டலம் அரை மண்டலம் கொள்ள மகோதரம், காசம், சுவாசம், குன்மம், வாதம், சூலைடி பயித்தியம் சுரம் இவையெல்லாந் தீரும்.

செய்யம்

புத்திர சஞ்சீவி யெண்ணெய்

ஆகாசக் கெருடன் கிழங்கு அறுத்தச் சாயப் போட்டது விராகனிடை-10, பரங்கிப்பட்டை -விராகனிடை-10, புத்திர சஞ்சீவிப் பட்டை -விராகனிடை-10 இந்த மூனு மருந்தும் வெவ்வேறேயாய்த் தண்ணீர்விட்டு நேக மைபோலரைத்து ஈர வெங்காய மேல்த் தோல் போக்கி முப்பது விராகனிடை நன்றாய் மைபோலே யரைத்து இந்த நாலு மருந்தும் ஒருபடி விளக்கெண்ணையில்க் கரைத்து அடுப்பில் வைத்து மெதுவாகயெரித்து மெழுகு பதத்தில்க் கடுகோடே யெண்ணை

கலசத்தில் வார்த்து வைத்துக் கொண்டு கொள்ளுகிறது. இந்த எண்ணெய் குடிக்கிற விதம் :- நாட்டுப் படியாலே அரைக்கால்ப்படி எண்ணெயும் விரல்க்கொண்ட கடுகும் ஒருமிக்கப் பிசைந்து தயிர்போலே குழப்பி சற்று வெதும்ப வைத்து குடிக்க வேண்டும் நாலு மூன்று முறை பேதியாகும். அன்று உப்பில்லாமல் வென்னீருஞ் சோறும் சாப்பிடவும். அன்று ராத்திரிக்கு யிப்படியே சாப்பிடவும். மறுநாள்க் காலமே விளக்கெண்ணெய் தேய்த்து அரப்பிட்டு முழுகி உப்பு புளி கூட்டிக் கொள்ளவும்.

மறுநாள்க் காலமே துவக்கி அஞ்சாறு நாட்களுக்கு யிந்த எண்ணெய் ஒரு துட்டிடை சாப்பிட்டு வரவும். அதின் பிறகு மறுபடியும் முன்னையைப் போலே ஒருநாளிக் கடுகும் யெண்ணெயும் சாப்பிட்டுப் பத்தியம் பிடிக்கவும். யிப்படி மூன்று முறை சாப்பிடவும். சூதம் வருகிற போது வருகிற வயத்துவலி நின்று போகும். இந்த எண்ணெயில்ச்சூடு கொண்டு வயிறு கொதிப்பாய் பேதியானால் ஈரவெங்காயம் பெரியதா யொரு வெங்காயத்தை நெருப்பிலே சொருகி புழுங்கினபிறகு எடுத்து அத்தோடே கன்னுப் புழுக்கானிலை கொஞ்சம் வெதுப்பிக் கூட வைத்து நேக அரைத்து கொட்டைப் பாக்களவு வெண்ணெய் கூடச் சேர்த்துக் குழப்பி அந்தி சந்தி மூணு நேரஞ் சாப்பிடக் கொதிப்பு நின்று போகும். யிந்தயெண்ணை கொடுத்து நாற்பது நாள்வரைக்கு சோழிக்கறி, அகத்திக்கீரை, பன்றிக்கறி, கெண்டை மீன் இவைகளாகாது.

<u>கடுக்காய் கற்பம்</u>

பனங்கடுக்காய் முத்தின கடுக்காயாக யெடுத்து கரிசலாங்கண்ணி சார்வார்த்து பனிரெண்டு சாமம் ஊறவிட்டு யெடுத்து யிடித்துச் சூரணம் பண்ணி மூணு விரல்க் கொண்டது தேனிலாவது நெய்யிலாவது வென்னீரிலாவது ஒரு ஒரு மண்டலங் கொள்ள குஷ்டம் பதினெட்டும் தீரும். ரெண்டு மண்டலங் கொள்ள திவ்விய தேகமாகும். மூணு மண்டலங் கொள்ள ரோமம் விழுந்து முளைக்கும். நாலுமண்டலங் கொள்ள நட்சத்திரம் பகலில்த் தெரியும். அஞ்சு மண்டலங் கொள்ள திரைதிரை மாறும் யிப்படியே கொள்ள வால வயசுண்டாம். கொடிகாலஞ் சிரஞ்சிவிசித்தன்.

--*